24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 154 சித்திரை 18ஆம் நாள் புதன்கிழமை 01 மே 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# ஈஸ்ரர் தாக்குதலோடு தொடர்புபட்ட சிலர் இன்னமும் இயங்கு நிலையில்

## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் எச்சரிக்கை

கொழும்பு, மே 1

கடந்த ஈஸ்ரர் தினத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சிலர் இன்னமும் கைது செய்யப்படாதுள்ளனர். அவர்கள் புதிய தாக்குதல்களுக்குத் திட்டமிடக் கூடும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ் எச்சரித்துள்ளார்.

பன்னாட்டு ஊடகமான ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 21



## குண்டுகள் துளைக்கா வாகன பாதுகாப்பை மறுத்தார் பேராயர்

கொழும்பு, மே 1
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்ட குண்டு துளைக்காத வாகனத்தைக் கொழும்புப் 03

## மதரசாக்களில் போதிக்கும் வெளிநாட்டவரை வெளியேறப் பணிப்பு

கொழும்பு, மே 1
இஸ்லாமிய பாடசாலைகளிலும், மதரசாக்களிலும் போதனைகளில் ஈடுபடும் 600 வெளிநாட்டவர்களை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு 21

## சஹ்ரானின் தம்பியுடன் நெருக்கமானவர் நேற்றுக் கைது

கொழும்பு, மே 1
தடைசெய்யப்பட்டுள்ள தேசிய தவ்ஹீத் ஜமாத் இயக்கத்தின் தலைவர் என்று கூறப்படும் சஹ்ரானுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டவர் 21

## பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான அறிக்கை பகிரங்கமாக வெளியாகும்

### அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மே 1
ஈஸ்ரர் தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு அமைக்கப்பட்ட சிறப்பு விசாரணை ஆணைக்குழுவின்



அறிக்கை அனைவருக்கும் பகிரங்கப்படுத்தப்படும் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
புதிய பாதுகாப்புச் செயலராக நியமிக் 21

## மீட்கப்பட்ட துப்பாக்கி ரவைகள் பாதுகாப்புத் தரப்பினருடையதே

### கிழக்கு ஆளுநர் விளக்கம்

மட்டக்களப்பு, மே 1
கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் மட்டக்களப்பு, காத்தான்குடியில் உள்ள அலுவலகம் நேற்றுப் பாதுகாப்புத் தரப்பினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அங்கிருந்து துப்பாக்கி 03

## உரிமையை வென்றெடுக்கும் தொழிலாளர்கள் தினம் இன்று

கொழும்பு, மே 1
உரிமையை வென்றெடுக்கும் தனித்துவம் சிறக்கும் பன்னாட்டு தொழிலாளர் தினம் இன்றாகும். பன்னாட்டு தொழிலாளர் தினம் இன்று உலகலாவிய ரீதியில் கொண்டாப்படும் நிலையில் இம்முறை இலங்கையில் தொழிலாளர தினம் கொண்டாடப்படவில்லை. 21



## சாவகச்சேரியில் குடும்பத் தலைவர் கும்பலால் குத்திக் கோரக் கொலை!

### 7 பேர் படுகாயங்களுடன் சிகிச்சையில்

யாழ்ப்பாணம், மே 1
சாவகச்சேரி, பாலாவி தெற்கில் நேற்று நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். 7 பேர் படுகா 03

## தௌகீத் ஜமாத் அமைப்புக்கு காணி கொடுத்தார் கோத்தா

### ஐ.தே.க. எம்.பி துசார குற்றச்சாட்டு

கொழும்பு, மே 1
பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் கோத்தபாய ராஜபக்ச தௌகீத் ஜமாத் அமைப்பின் அலுவலகத்தை நிறுவக் காணி ஒன்றைப் பெற்றுக் கொடுத்துள்ளார் என்று ஐக்கிய தேசியக் 04

## 2 கோடி ரூபா பெறுமதியான அபின் வடமராட்சியில் மீட்பு

யாழ்ப்பாணம், மே 1
யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் அபின் எனும் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது 21

## சிங்கள - தமிழ் மக்களுக்கு எதிராக கலவரம் ஏற்படுத்த ஐ.எஸ். திட்டமாம்

### எண்ணெய் ஊற்றுகின்றது மகிந்த அணி

கொழும்பு, மே 1
சிங்கள - தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் இனக் கலவரத்தை ஏற்படுத்த ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் திட்டம் வகுத்துள்ளனர். அதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட வாள்களும், கத்திகளுமே தற்போது பள்ளிவாசல்களில் இருந்தும், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மற் 21

## தேடப்பட்ட பாரவூர்தி சிக்கியது

கொழும்பு, மே 1
ஈஸ்ரர் தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் 21

## கிளிநொச்சி விபத்தில் முதியவர் ஒருவர் சாவு

கிளிநொச்சி, மே 1
கிளிநொச்சி, சேவியர் கடைச் சந்திப் பகுதியில் நேற்று மாலை நடந்த விபத்தில் ஒருவர் 21

## சமூக வலைத்தளங்கள் மீதான தடை நீங்கியது

கொழும்பு, மே 1
இலங்கையில் சமூக ஊடகங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை 9 நாள்களின் பின்னர் நேற்று நீக்கப்பட் டது. 03

## பள்ளிவாசல்களை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்ளும் பாதுகாப்புத் தரப்பினர்

### முஸ்லிம் மக்கள் கவலை

யாழ்ப்பாணம், மே 1
தேடுதல்கள், சுற்றிவளைப்புக்களின் போது பள்ளிவாசல்களை அவமதிக்கும் வகையில் பாதுகாப்புத் தரப்பினர் நடந்து கொள்கின்றனர் என்று முஸ்லிம் மக்கள் 03

# விகாரி வருட தமிழ்ப் புத்தாண்டு பொதுப் பலன்கள் 2019

*மங்களகரமான விகாரி வருடம் கோலாகலமான வசந்த ருதுவில், உத்தராயணப் புண்ணிய காலம் நிறைந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் 01 மணி 06 நிமிடத்துக்கு 14.04.2019ல் சுக்ல பட்சத்து தசமி திதியில், கீழ்நோக்குள்ள ஆயில்யம் நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில், கடக ராசியில், கடக லக்னத்தில், நவாம்சத்தில் தனுசு லக்னம், மகர ராசியிலும், சூலம் நாமயோகத்திலும், தைதுலம் நாமகரணத்திலும், சூரியன் ஓரையில், நேத்திரம் ஜீவன் நிறைந்த, பஞ்சபட்சிகளில் ஆந்தை துயிலுறும் நேரத்தில், புதன் மகா தசையில் சூரியன் புத்தியில், குரு அந்தரத்தில் மங்களகரமான விகாரி வருடம் பிறக்கிறது.*

## கன்னி ராசி

மனத்துக்குச் சரியெனத் தோன்றுவதைத் திட்டவட்டமாகச் செய்து முடிக்கும் ஆற்றலுடைய வர்களே! உங்கள் ராசிக்குப் பதினோராவது வீட்டில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் சுப நிகழ்ச்சிகள், பொது விழாக்களில் முதல் மரியாதை கிடைக்கும். வி.ஐ.பிக்கள் மத்தியில் பிரபலமாக ப் பேசப்படுவீர்கள். பெரிய பதவிகள் தேடி வரும்.

வருங்காலத்துக்காகச் சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நவீன ரக வாகனங்கள், மின்சாரப் பொருட்கள், மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். ராசிநாதன் புதன், ராசியைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் உங்கள் ரசனை மாறும். பால்ய நண்பர்களின் சந்திப்பால் உற்சாகமடைவீர்கள்.

இந்த ஆண்டு முழுக்க சனியும், கேதுவும் 4ஆம் வீட்டிலேயே நீடிப்பதால் வேலைச்சுமை அதிகரிக்கும். வீட்டிலும் மனைவி, பிள்ளைகளுடன் இருக்கும் நேரம் குறையும். வீடு கட்டுவதற்கு அரச அனுமதி தாமதமாகக் கிடைக்கும். மனை வாங்கும்போது வில்லங்கச் சான்றிதழ், தாய் பத்திரத்தைச் சரி பார்த்து வாங்குவது நல்லது.

வாகனத்தை இயக்கும்போதும், சாலையைக் கடக்கும் போதும் அலைபேசியில் பேச வேண்டாம். சின்னச் சின்ன விபத்துகள் நிகழக்கூடும். பழைய வாகனத்தை வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. அப்படி வாங்குவதாக இருந்தால் ஆவணத்தைச் சரிபார்த்து வாங்குங்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களுடன் மோதல்கள் வரக்கூடும். தாய்வழிச் சொத்துக்களில் சிக்கல்கள் வரக்கூடும்.

மறதியால் பணம், விலை உயர்ந்த நகையை இழக்க நேரிடும். அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளில் அலட்சியம் வேண்டாம். பழைய கசப்பான அனுபவங்கள் நினைவுக்கு வரும். குடும்பத்துடன் வெளியூர் செல்லும் போது வீட்டைப் பாதுகாப்பாக பூட்டிச் செல்லுங்கள். கூடாப்பழக்க வழக்கமுள்ளவர்களின் நட்பைத் தவிர்க்கப் பாருங்கள். புகைப்பழக்க முள்ளவர்கள் அதைத் தவிர்ப்பது நல்லது.



இந்த ஆண்டு முழுக்க ராகுவும் 10ஆம் வீட்டிலேயே தொடர்வதால் சிறுசிறு அவமானங்கள், மறைமுக எதிர்ப்புகள், வேலைச்சுமை வந்து செல்லும். உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைதூக்கும். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம்.

இந்த வருடம் முழுக்க குருபகவான் சரியில்லாததால் சில காரியங்களை இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். உங்கள் இயல்புக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம். சில நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு சிலரைக் கடிந்து கொள்வீர்கள். தோலில் நமைச்சல், நரம்புச் சுளுக்கு, யூரினரி இன்பெக்ஷன் வந்து செல்லும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வீடு கட்டும் பணி தாமதமாகும். தாயாரிடம் கோபப்படாதீர்கள். அவருக்கு குருதி அழுத்தம், செரிமானக் கோளாறு, கை, கால் வலி வந்து போகும். பழைய பிரச்சினைகள், சிக்கல்கள் மீண்டும் வந்துவிடுமோ என்றெல்லாம் பயப்படுவீர்கள்.

தாய்வழி உறவினர்களுடன் விரிசல்கள் வரக் கூடும். தாய்வழிச் சொத்தைப் போராடிப் பெற வேண்டி வரும். மற்றவர்கள் சில ஆலோசனைகள் வழங்கினாலும் அதை அப்படியே ஏற்காமல் யோசித்துச் சில விஷயங்களில் ஈடுபடுவது நல்லது. சொத்து வாங்கும் போது பத்திரத்தில் ஏதேனும் வில்லங்கம் உள்ளதா என்று பலமுறை விசாரித்து வாங்குவது நல்லது. நேரம்தவறிச் சாப்பிடுவதைத் தவிர்க்கப் பாருங்கள். நெஞ்செரிச்சல், வாயுக் கோளாறு வந்து போகும்.

**வியாபாரிகளே!**

பக்கத்துக் கடைக்காரரைப் பார்த்துப் பெரிய முதலீடுகளைப் போட்டு சிக்கிக் கொள்ளாதீர்கள். வேலையாட்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. கமிஷன், ரியல் எஸ்டேட், அரிசி, எண்ணெய் மண்டி மூலம் லாபம் உண்டு. பழைய வாடிக்கையாளர்கள் மீண்டும் வருவார்கள். பங்குதாரர்களால் விரயம் வரும்.

**அலுவலர்களே**

ராகுவால் உத்தியோ கத்தில் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள். கால நேரம் பார்க்காமல் உழைக்க வேண்டி வரும். உயரதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் குறைகளில் கவனம் செலுத்தாதீர்கள். முக்கியமான கோப்புகளைக் கையாளும்போது அலட்சியம் வேண்டாம். வழக்கால் நெருக்கடிகள் வந்து நீங்கும். புது வாய்ப்புகளை யோசித்து ஏற்பது நல்லது. இடமாற்றம் இருக்கும்.

**பெண்களுக்கு:**

குரு ஓரளவு சாதகமாக இருப்பதால் கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். குழந்தை பாக்கியம் உண்டு. மாமனார், மாமியார், நாத்தனாருடன் இருந்து வந்த மனத்தாங்கல் நீங்கும். இந்த ஆண்டு முழுக்க சனி சாதகமாக இல்லாததால் சமையலறைச் சாதனங்கள் பழுதாகும். குடும்ப அந்தரங்க விஷயங்களை வெளியாரிடம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். பிள்ளைகள் மீது உங்களின் எண்ணங்களைத் திணிக்க வேண்டாம்.

இந்தப் புத்தாண்டு தத்தளித்துக் கொண்டிருந்த உங்களைத் தலைநிமிர வைப்பதுடன் புகழையும் பணத்தையும் தருவதாக அமையும்.

**பரிகாரம்:**

அருகிலிருக்கும் பெருமாள் கோயிலுக்குப் புதன்கிழமைகளில் சென்று வணங்குவதுடன் வெள்ளரிப் பிஞ்சைத் தானமாகக் கொடுங்கள். வாழ்வு சிறக்கும்.

தொடரும்

# காலதாமத திருமணத்திற்கு என்ன காரணம்?

பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்குரிய சுக்கிரன் மிக வலிமையாக இவரின் (ராமனுஜனின்) ஜாதகத்தில் அமர்ந்திருக்கிறார். பஞ்சமகா யோகத்தில் தலைசிறந்த 'பூர்வ புண்ணிய மாலிகா யோகம்' இவருக்கு உண்டு. ஐந்துக்கு உரியவன் ஐந்திலேயே இருப்பதால் புதுமையான யோசனைகள், கண்டுபிடிப்புகள் என்று இவரின் வாழ்க்கை அமைந்தது. அதனால்தான் வேறு யாராலும் யோசிக்க முடியாத கணித சூத்திரங்களை இவரால் கண்டுபிடிக்க முடிந்தது. இதற்கு நடுவில் இவரின் வாக்கு ஸ்தானத்தில் அதாவது லக்னத்தின் இரண்டாம் இடத்தில் சனியும் ராகுவும் இணைந்திருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் கற்ற கல்வியையும் தாண்டி இவரால் யோசிக்க முடிந்ததற்கு இதுவே காரணமாகும். இரண்டுக்குரிய சந்திரன் தசம கேந்திரம் பெற்று வலுவடைந்ததால் ஆசானுக்கும் ஆசானாக விளங்கினார். ஏழில் தனித்த சூரியன் இருந்து, ஏழுக்குரிய குரு ஆறில் மறைந்திருக்கிறது. மேலும், லக்னாதிபதியான புதனும் ஆறில் மறைந்ததால் தான் சொல்லிக் கொள்ளும் அளவுக்கு குடும்ப வாழ்க்கையில் வெற்றிபெற இயலவில்லை. மிதுன லக்னத்திற்கு ஆறுக்குரிய செவ்வாய் கொஞ்சம் அடங்கித்தான் போக வேண்டும். அப்போதுதான் காசு, பணம், சொத்து போன்ற சுகத்தை அனுபவிக்க முடியும். இவரின் ஜாதகத்தில் ஆறுக்குரிய செவ்வாய் சுகபோகங்களுக்குரிய நான்காம் இடத்தில் அமர்ந்ததால்தான் ஒரு சாமானியனின் சுகத்தைக் கூட அனுபவிக்க முடியாமல் போனது. உலகமே வியக்கும் அளவிற்கு அரிய உயரிய கண்டுபிடிப்புகளை வழங்கிய அளவிற்கு, அந்த கணித மேதை காசு பண்ணும் கணக்குச் சூத்திரத்தை மட்டும் அறிய முடியாமல் போனது. கணிதத்திற்கு உரிய கிரகமான புதனும், ஆசிரியருக்குரிய கிரகமான குருவும் சேர்ந்து காணப்படுவதால்தான் இன்றும் உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் இவரின் கணித கண்டுபிடிப்புகளுக்கு காரணம் தேடிக் கொண்டிருக்கின்றன.

உலகையே அண்ணாந்து பார்க்க வைத்த இயற்பியல் விஞ்ஞானியான ஐன்ஸ்டீன் அவர்களும் மிதுன லக்னத்தில் பிறந்தவராவார். மிதுன லக்னத்தின் யோக கிரகங்களான சுக்கிரன், சனியுடன், மிதுன லக்னத்தின் அதிபதியும் சுகாதிபதியுமான புதன், தைரிய ஸ்தானாதிபதியான சூரியன் ஆகியோரோடு சேர்ந்து பத்தாம் வீட்டில் அமர்ந்ததால்தான் நுணுக்கமாக் இயற்பியலின் அடித்தரை நுட்பங்களை ஆராய முடிந்தது. ராஜ கிரகங்களான குருவும் சனியும் பரிவர்த்தனா யோகம் பெற்றதால்தான் அணுவைக் குறித்து மிக தீர்க்கமாக ஆராய முடிந்தது. தொல்லை தரும் கிரகமான செவ்வாய் எட்டாம் வீட்டில் ராகுவோடு மறைந்து நிற்பதாலும், முனைப்பு கிரகமான சூரியனின் நட்சத்திரத்தில் செவ்வாய் நின்றதாலும்தான் உலகளவில் புகழ்பெற முடிந்தது. மனோகாரகனான சந்திரன் லக்னாதிபதி புதனின் கேட்டை நட்சத்திரத்தில் நின்றதால்தான் இறுதி மூச்சு வரை ஆராய்ச்சியிலேயே ஈடுபட முடிந்தது.

இந்தியாவின் தலைசிறந்த அரசியல்வாதியான மொரார்ஜி தேசாய் கூட மிதுன லக்னத்தில் பிறந்த வர்தான்.

இந்த லக்னத்தின் பிரபல யோகாதிபதியான சனியோடு சுக்கிரன் பரிவர்த்தனா யோகம் பெற்றதாலேயே இந்தியாவின் தலைமை அமைச்சர் பதவிவரை இவர் உயர்ந்தார். லக்னாதிபதியான புதனும் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதியான சுக்கிரனும் எட்டில் மறைந்ததால்தான் தன்னலமற்று நாட்டுக்குச் சேவை செய்தபடி இருந்தார். சந்திரன் கேதுவோடும், சூரியன் ராகுவோடும் நின்ற தால்தான் பலமுறை சிறைவாசம் செல்ல நேர்ந்தது. பாதகாதிபதியான குரு வக்ரமாகி இரண்டில் இருந்ததால்தான் பணத்தின் மீது ஆசையற்றிருந்தார். மிதுன லக்னத்திற்கு பிரச்னைகளை உருவாக்கும் செவ்வாய் எட்டில் மறைந்ததாலும் குருவின் பார்வை பெற்றதாலுமே எடுத்த வேலையை முடிப்பதில் உறுதியாக இருந்தார்.

## சமூக...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புக்கு அமைய தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவால் இந்தத் தடை நீக்கப்பட்டது.

கடந்த ஈஸ்ரர் தினத்தன்று கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் தீவிரவாதத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதில் 250க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்தப்பட்டவுடன், தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு வதந்திகள் பரவுவதைத் தடுக்கும் நோக்குடன் இலங்கை அரசால் சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டன.

அதன்பின்னர் கடந்த 9 நாள்களாக சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டிருந்தன. தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளநிலையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனே சமூக வலைத்தளங்கள் மீதான தடையை நீக்க நேற்று உத்தரவிட்டார்.

சமூக வலைத் தளங்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது என்றும், சமூக ஊடகங்களைக் கையாள்பவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அரச தலைவர் செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## குண்டுகள்...

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நிராகரித்துள்ளார்.

கடந்த ஈஸ்டர் தினத்தன்று இலங்கையில் நடத்தப்பட்டத் தொடர் குண்டு வெடிப்புத் தாக்குதல்களை அடுத்து நாடு முழுவதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. தேவாலயங்களுக்குச் சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்புப் பேராயரின் பாதுகாப்புக் கருதித் தனக்கு வழங்கப்பட்ட குண்டு துழைக்காத வ்ாகனங்களில் ஒன்றை, பேராயருக்கு வழங்குமாறு தலைமை அமைச்சர் பணித்திருந்தார். எனினும் அதைப் பேராயர் நிராகரித்துள்ளார். அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில், தேவனே எனது பாதுகாவலன். குண்டு துளைக்காத வாகனம் எனக்குத் தேவையில்லை. மக்களுக்கான பாதுகாப்பே எனக்குத் தேவை என்று பேராயர் தெரிவித்துள்ளார். (எ)

## மீட்கப்பட்ட...

ரவைகள் கைப்பற்றப்பட்டன என்றும், சந்தேகத்தின் பேரில் இருவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன ன்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி ரவைகள் தனது பாதுகாப்புக்குப் பொறுப்பான பொலிஸாரும், அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவினரும், காத்தான்குடிப் பொலிஸாரும் தனது காரியாலயத்துக்குப் பின்புறமாகத் தங்கிருந்த அறையில் இருந்து 40 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். உத்தியோகபூர்வமாகக் காத்தான்குடிப் பொலிஸாரால் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட துப்பாக்கி ரவைகளே அவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தற்போது பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் காத்தான்குடிப் பொலிஸ் நிலையத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும்வரை காரியாலயத்துக்குப் பொறுப்பான இருவரையும் காத்தான்குடிப் பொலிஸார் தடுத்து வைத்திருந்தனரே தவிர, துப்பாக்கி ரவைகளுக்கும் எமக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது என்றும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (எ)

## பள்ளிவாசல்களை...

கவலை தெரிவித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐந்து சந்திப் பகுதியில் சோதனை மேற்கொண்ட சிறப்பு அதிரடிப்படையினரும், பொலிஸாரும் காலணிகளுடன் பள்ளிவாசலுக்குள் நுழைந்தனர். இந்தச் செயற்பாடுகள் மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றது என்று தெரிவித்தார் ஐந்து சந்தியில் உள்ள மொஹைதீன் ஜீம்மாப் பள்ளிவாசல் நிர்வாகியான சரபுல் அனாம்.

சோதனைக்கு வந்த சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸாரிடம் காலணிகளைக் கழற்றிவிட்டுச் சென்று சோதனைகளை மேற்கொள்ளுங்கள் என்று பல தடவை கோரினோம். ஆனால் அவர்கள் அதற்குச் செவி சாய்க்கவில்லை. காலணிகளுடன் உள்ளே சென்றார்கள். பள்ளிவாசல்களை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டனர். எமது மனங்கள் புண்படும்வகையில் பேசினார்கள் என்று அவர் வேதனையோடு குறிப்பிட்டார்.

கடந்த ஈஸ்ரர் தினத்தன்று நாட்டில் பல இடங்களில் குண்டு வெடிப்புக்கள் நடத்திருந்தன. அந்தத் தாக்குதலுக்கு முஸ்லிம் அடிப்படைவாதக் குழுவொன்று உரிமை கோரியிருந்தது. தாக்குதலை அடுத்து நாட்டில் அவசர காலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் தேடப்பட்டுக் கைது செய்யப்படும் அதேவேளை சாதாரண முஸ்லிம் மக்கள் இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் விசாரணைகளின்போது பல்வேறு துன்பங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என்று பல தரப்பினரால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அனைத்து முஸ்லிம் மக்களையும் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் பாதுகாப்புத் தரப்பினர் அவர்களுடன் கடுமையான முறையில் நடந்துகொள்கின்றனர். கடுந்தொனியில், அவமதிக்கும் வகையில் பாதுகாப்புத் தரப்பினர் நடந்து கொள்கின்றனர், அன்றாடம் அச்சத்துடனேயே வாழ்கின்றோம் என்றும், தமது வாழ்வாதாரச் செயற்பாடுகளைக் கூடக் கொண்டு நகர்த்த முடியாது கையறு நிலையில் உள்ளோம் என்றும் அவர்கள் கவலையுடன் கூறுகின்றனர்.

வடக்கிலும் முஸ்லிம் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்புத் தரப்பினர் தம்மை அச்சுறுத்தும் வகையிலும், அடக்கி ஒடுக்கும் வகையிலும் செயற்படுகின்றனர் என்று முஸ்லிம் மக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகள் சாதாரண முஸ்லிம் மக்களுக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளன. அவர்கள் தற்போது தனித்து விடப்பட்டதாக உணர்கின்றனர். பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால் சாதாரண மக்களைக் குற்றவாளிகள் போன்று நடத்தும் போக்கு வேதனை தருகின்றது என்று முஸ்லிம் மக்கள் கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

## சாவகச்சேரியில்....

யமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் நடந்துள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த தம்பிராஜா பொன்னுத்துரை (வயது-62) என்பவரே உயிரிழந்துள்ளார். யே.திலிசாந் (வயது-25), சோ.கணேசமூர்த்தி (வயது29), தம்பிராஜா யோகராஜா (வயது-46), த.கவிதரன் (வயது-38), ந.வளர்மதி (வயது-52), செ.குமார் (வயது-35), வை.தவசீலன் (வயது-39) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

சுமார் 30 பேர் அடங்கிய கும்பல் ஒன்று ஈட்டிகள், கூரிய ஆயுதங்களுடன் வந்து வீடுகளுக்குள் புகுந்து தாக்குதல் நடந்தித் தப்பிச் சென்றுள்ளது என்று கூறப்படுகின்றது. உயிரிழந்தவரின் மார்பில் கூரிய ஆயுதம் ஒன்றால் பல தடவைகள் குத்தப்பட்டுள்ளது என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் கூறுகின்றனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 3 பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

கடந்த இரு வாரகாலமாக இரு தரப்பினருக்கு இடையே முறுகல் நிலமை இருந்தது என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர். மணல் அகழ்வு தொடர்பான பிணக்கே இந்த முறுகல் நிலமைக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பிரச்சினை காரணமாகக் கடந்த மாதமும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்றும் அந்தப் பிரதேச மக்கள் கூறுகின்றனர். நேற்றுமுன்தினமும் அங்கு வந்த குழுவொன்று தாக்குதல் நடத்தித் தப்பிச் சென்றிருந்தது என்றும், நேற்று முப்பது பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்திச் சென்றுள்ளது என்றும் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

தற்போது இராணுவத்தினரும், பொலிஸாரும் வீதிகளில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளநிலையில் இத்தனைபேர் ஆபத்தான ஆயுதங்களுடன் வந்து தாக்குதல் நடத்தி எவ்வாறு தப்பிச் சென்றனர் என்றும் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸார் அசிரத்தைப் போக்குடன் நடந்து கொள்கின்றனர். அதனாலேயே தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் அந்தப் பகுதியில் நடக்கின்றது என்றும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

(எ-105, 159, 9)



## விழிநீர் அஞ்சலி




எமது சக உத்தியோகத்தர்
பா.பாலவரதன் அவர்களின் பாசமிகு
தந்தை
**கந்தையா
பாலசுப்பிரமணியம்**
கடந்த சனிக்கிழமை (27.04.2019)
அன்று காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன்
அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**
**கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும்
சக உத்தியோகத்தர்களும் யாழ்ப்பாணம் கூட்டுறவு திணைக்கள
உத்தியோகத்தர்கள் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்**

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் வேலாயுதம்

*(இளைப்பாறிய தபால் சேவகர்)*



தோற்றம் 07.10.1932 மறைவு 29.04.2019

யாழ்.தம்பசிட்டி மலையந்தோட்டத்தை பிறப்பிடமாகவும் திருநாவலூரை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வேலாயுதம் கடந்த (29.04.2019) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சிவகாமி தம்பதிகளின் கனிஸ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ண பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவப்பாத்தை, நாகமுத்து, வள்ளிப்பிள்ளை, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசேந்திரம், நவரத்தினம், தர்மலிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயகௌரி, ஜெயவதனி, ஜெயகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பாக்கியநாதன், கோணேஸ்வரன், மஞ்சுவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும் லருஜன், அஷ்விதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2019) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் திருநாவலூரில் உள்ள அவரது இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**திருநாவலூர்,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**021 226 2279**

## மார்க்கண்டு பாலசுப்பிரமணியம்

*(பிரபல தொழில் அதிபர் - MMB கலேவல, கிளிநொச்சி, வவுனியா)*



பிறப்பு 21.02.1935 இறப்பு 30.04.2019

பாலாவோடை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 58, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பாலசுப்பிரமணியம் (M.M.B) நேற்று (30.04.2019) செவ்வாய்க் கிழமை காலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும் நந்தினிதேவியின் (லண்டன்) அன்புத் தந்தையாரும் தேவராசாவின் (லண்டன்) அன்பு மாமனாரும் அருண், ஹரிசன், ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, பாக்கியம், மயில்வாகனம் மற்றும் இராமநாதன், செல்லம்மா, தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, சுப்பிரமணியம், செல்லத்துரை, தெய்வானை மற்றும் உருக்குமணி, சிவசம்பு, காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், சிவபாலன், சிவஞானம், சிவபாக்கியம் மற்றும் சிவராசா, சிவலட்சுமி, சிவயோகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சந்தானலட்சுமி மனோகரனின் பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2019) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**0212221971** **தகவல்: குடும்பத்தினர்**

## தௌகீத்...

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துசார இந்துநில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அடிப்படைவாதத்தைத் தோற்றுவிக்க கோத்தபாய ராஜபக்ச பல முயற்சிகளை மேற்கொண்டார். 241 ஏ, சிறி சத்தர்வ மாவத்தை, கொழும்பு என்ற முகவரியில் உள்ள காணியை தௌகீத் ஜமாத் அமைப்புக்குக் கோத்தபாய ராஜபக்ச பெற்றுக் கொடுத்துள்ளார். அந்த அமைப்பின் அலுவலகத்தை அமைப்பதற்கே அவர் இந்த காணியை வழங்கினார். இவ்வாறே அடிப்படைவாத அமைப்புக்களுக்கு அவர் உதவிகளை வழங்கியுள்ளார். இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக அவர் அமைதியாக இருக்கும் முஸ்லிம் இனத்தை இரண்டாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவ்வாறு அனைத்து செயற்பாடுகளையும் கீழ்த்தரமான அரசியல் யுத்தியை கொண்டு அவர் மேற்கொண்டார். அடிப்படைவாதத்தை போதிக்கும் 200 பள்ளிகளைக் கட்டியதாகப் பசில் ராஜபக்ச தெரிவித்த கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. இந்த சம்பவத்துக்கும் கோத்தபாயவே உறுதுணையாக இருந்தார்- என்றார். (எ)

**காணி விற்பனைக்கு**
கோண்டாவில் சந்திக்கு அருகில்
2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**076 697 2287**

## சிலப்பதிகார விழா பிற்போடப்பட்டுள்ளது

**அகில இலங்கை இளங்கோ கழகம்
புலமை ஒலி - 2019
சிலப்பதிகார விழா**

மே மாதம் 3 ஆம், 4 ஆம், 5 ஆம் திகதிகளில் புற்றளை மகா வித்தியாலயத்தில் இடம்பெற இருந்த மேற்படி விழாவானது நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

விழா தொடர்பான தகவல் பின்னர் எம்மால் அறியத்தரப்படும்
செயலாளர் த. குருபரன்
அகில இலங்கை இளங்கோ கழகம்
புலோலி, யாழ்ப்பாணம்

## Chundikuli Girls' College Jaffna

### Post of School Librarian

Applications are invited from qualified candidates for the above post.

**Requirements:**

- ✓ 3 Passes at the G.C.E (A/L) & should have followed Diploma in Library Science.
- ✓ Age between 25-50 years.

Application closes on 8th May 2019.
Only shortlisted candidates will be considered for an interview.

**Principal**
**Email:- forwardcgc@yahoo.com**

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில்
பரிசாரகராகக் கடமைபுரியும்
**திருமதி து.லாவண்யா வின்**
பாசமிகு தந்தை
**நாகன் சிவலிங்கம்**
அவர்கள் நேற்று (30.04.2019)
செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
**பணியாளர் நலன்புரிச் சங்கம்,
அரசினர் ஆயுள் வேத வைத்தியசாலை, கைதடி.**

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சற்குணராசா



பிறப்பு 09.12.1957 இறப்பு 30.04.2019

மீசாலை கிழக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சற்குணராசா நேற்று (30.04.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சரஸ்வதி தம்பதிகளின் மகனும் பாக்கியத்தின் அன்புக்கணவரும் துவாரகன், கிருபாகரன், தனஞ்சியன், மதினா, கிரிதரன், மதுசன், ஆகியோரின் பாசமிகு தந்தையும் மயூரியின் மாமனாரும் திசாந்தனின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# கேள்வி அறிவித்தல்

## பிராந்தியசுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை-கிளிநொச்சி

## 2019ஆம் வருடத்திற்கான உலர் உணவு வழங்கல்கள்

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்திய சாலைகளுக்கு 2019ஆம் ஆண்டிற்கான உலர் உணவு வழங்குவதற்கான தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து சீல் செய்யப்பட்ட விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளுமாறு தலைவர் பிராந்திய பெறுகைகள்குழு அழைப்பு விடுக்கின்றது.

| வைத்தியசாலைகளின் விவரம் | குறிப்பு இலக்கம் | விண்ணப்பப் படிவம் விநியோகிக்கப்படும், பெற்றுக்கொள்ளப் படும், திறக்கப்படும் முகவரி | மீளளிக்கத் தக்க வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| பிரதேச வைத்திய சாலை பூநகரி | NP/K/RDHS/DF/ Akk/2019/01 | RDHS Office, A9 Road, Kilinochchi | 50,000.00 | Rs. 2500/- |
| ஆதார வைத்திசாலை முழுங்காவில் | NP/K/RDHS/DF/ Mul/2019/02 | RDHS Office, A9 Road,Kilinochchi | 50,000.00 | Rs. 2500/- |

1) கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறையில் செய்யப்படும்.
2) விண்ணப்பிக்கத் தகுதியானோர், கறுப்புப்பட்டியலில் குறிப்பிடப்படாதவராகவும் கீழ் குறிப்பிடப்படும் தேவைகளை நிவர்த்தி செய்யவும் வேண்டும்.
   அ. 2019ஆம் ஆண்டுக்கான பதிவு செய்யப்பட்ட வணிகப்பத்திரம்
   ஆ. உலர் உணவு வழங்கலுக்கான பதிவு செய்யப்பட்ட வணிகப் பத்திரம்
   இ. பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளை வடமாகாணத்தில் இருத்தல்.
3) ஒப்பந்தத்தை வழங்குவதற்கு தகுதிபெற கேள்வி கோருபவர்கள் கேள்விப் பத்திரங்களின் பகுதி 2இல் கேட்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4) ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி எனும் முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம், அதே நேரத்தில் கேள்விகோரல் ஆவணங்களை 09.00 மணிமுதல் 15.00மணிவரை வேலை நாள்களில் பார்வையிடலாம்.
5) ஆங்கில மொழியில் உள்ள முழுமையான அச்சிடப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி எனும் முகவரியில் 02.05.2019 முதல் 15.05.2019 திகதிவரை அதற்கான மீளளிக்கப்படாத வைப்புப் பணத்தினை செலுத்தி வேலை நாள்களில் 09.00 மணிமுதல் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6) கேள்விப்பத்திரங்கள் 16.05.2019ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு தலைவர் கேள்விச் சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை - கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரடியாக அலுவலக கேள்விப் பெட்டியில் இடவோமுடியும். தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் "உலர் உணவு வழங்கல்கள் என்றும் மற்றும் விண்ணப்பிக்கும் வைத்தியசாலை" போன்ற விவரங்களும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கேள்வி சமர்ப்பிப்பதற்கான கால எல்லை முடிவடைந்தவுடன் கேள்வி கோருபவர்கள் அல்லது அவர்களது அங்கீகார மளிக்கப்பட்ட பிரதிநிதிகளும் பிரசன்னமானவர்களின் முன்னிலையில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.
7) 2019.05.08 ஆம் திகதி மு.ப10.00 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி எனும் முகவரியில் கேள்வி கோரலுக்கு முன்னான ஆயத்தகூட்டம் இடம்பெறும்.
8) சகல கேள்வி விண்ணப்பப் பத்திரங்களுக்கும் தனித்தனியாக மேற்கூறிய தொகைக்கு மீளளிக்கத்தக்க வைப்புப் பணப்பத்திரம் இணைக்கப்படல் வேண்டும்.
9) கேள்வி தொடர்பான கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். கேள்விச் சபையின் தலைவர் கேள்விப்பத்திர நடைமுறைகளை எந்நேரத்திலும் முழுமையாகவோ பகுதியாகவோ இழப்பீடு ஏதும் வழங்காது ரத்துச் செய்வதற்கான அதிகாரத்தினை கொண்டுள்ளார்.

தலைவர், பெறுகைகள்குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
கிளிநொச்சி.

# பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்

## சபைநிதி-2019

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேசியப் போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாக கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணம் பகுதி 111 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணிவரை **30.04.2019**ஆம் திகதியிலிருந்து **14.05.2019**ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள வழங்குனர்கள் ஆங்கில மொழியிலுள்ள பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் **30.04.2019** தொடக்கம் **14.05.2019** ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப **9.00** மணி முதல் **15.00** மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/- (வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து **15.05.2019ஆம்** திகதி **15:00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77(எழுபத்தேழு) நாட்கள் (31.07.2019) வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் **06.05.2019**ஆம் திகதியன்று மு.ப **10.00** மணிக்கு நடைபெறும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு 20000.00 வினை பணமாக செலுத்தி பற்றுச்சீட்டினை கேள்வி ஆவணத்துடன் இணைக்க வேண்டும்.
11. இக்கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், 'சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| இல | வேலை விவரம் | ஒப்பந்த இல | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை: மீளளிக்கும் பிணை வைப்பு (ரூபா) | கேள்வி பிணை: வைப்பு செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | **இலத்திரனியல் உபகரணங்கள்** | | | | | |
| | 1. Photocopier (நிழற்பட இயந்திரம்)<br>11.Desk top Computer (கணனி)<br>111.U.P.S<br>1V.Laser Printers<br>V. Ink Jet Printers<br>Vi. Multimedia Projector | NP/14/41(15) /01/Electronics Goods/2019 | 01மாதம் | எமது சபையில் அல்லது வடக்கு மாகாண சபையில் அல்லது யாழ்.மாவட்ட செயலகத்தில் வழங்குனராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் | 20000.00 | 28.08.2019 |

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.

29.04.2019


# மருத்துவராகும் வாய்ப்பு

## A/L விஞ்ஞான பாடங்களில் 3C இற்கு மேல் பெற்றிருக்கின்றீர்களா ?

**SLMC யினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் ஆங்கிலம் மூலம் மருத்துவம் பயில**

**INTAKE - September 2019**
**IELTS - தேவையில்லை**

**அழையுங்கள் - 0777 687 821**




## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 04, சீக்காய் வீதி, வட்டாரம் - 06

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரம் 06 சீக்காய் வீதியிலுள்ள இல: 04 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதி வேட்டின் பிரகாரம் **S.சின்னத்தம்பி** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **நரசிங்கம் தம்பிராசா மகள் புனிதவதி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு **பொன்னுத்துரை சிவபாலன்** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 510/10.12.1986 ஆம் இலக்க வெளிப்படுத்தலும், நன் கொடையும் உறுதியால் குறித்த ஆதனம் **நரசிங்கம் தம்பிராசா கைம்பெண் சொர்ணலட்சுமி** ஆகியவர் அவரது தாய் மாமனான காலஞ்சென்ற **சபாபதிப்பிள்ளை சின்னத்தம்பிக்கு** சொந்தமாகவிருந்ததென்றும் அவர் இறந்த பின்னர் தனக்கு சொந்தமாக வந்தது என்றும் குறித்த ஆதனத்தில் 50 வருடங்களிற்கு மேலாக எதுவித தங்கு தடையற்ற ஆட்சியிலிருந்து வருவதாகவும் வெளிப்படுத்தி குறித்த **நரசிங்கம் தம்பிராசா கைம்பெண் சொர்ணலட்சுமி** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **நரசிங்கம் தம்பிராசா கைம்பெண் சொர்ணலட்சுமி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு **மு.சபாநாதன்** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4140/29.03.1993 ஆம் இலக்க சீதன வெளிப்படுத்தல் உறுதியால் குறித்த ஆதனம் **நரசிங்கம் தம்பிராசா மகள் புனிதவதி** ஆகியவருக்கு குறித்த 510 ஆம் இலக்க உறுதியால் நன்கொடை ஆதனமாக சொந்தமாக விருந்ததென்றும் தற்போது குறித்த ஆதனத்தை சீதன ஆதனமாக வெளிப்படுத்தியும் நிறைவேற்றியிருந்தார்.

**நாகலிங்கம் செல்வரத்தினம் பெண் புனிதவதி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமான **நாகலிங்கம் செல்வரத்தினம் பெண் புனிதவதி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை,**
**சுழிபுரம்.**

## ஈரவிழிகளுடன் நெஞ்சகலா
## 45ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 27 . 01 . 1944



இறப்பு 19 . 03 . 2019

## அமரர் சண்முகநாதன் நித்தியலட்சுமி

அன்பான அம்மாவே எனதருமைத் தாயாரே
பாசத்தைப் பொழிந்தீர்களே இப்போ என்னைப் பரிதவிக்க விட்டுச் சென்றீர்களே
கனிவான உங்கள் பேச்சும் மூச்சும் என் கண்கள்
முன்னே நிழலாடுகின்றதே யாரிருந்தென்ன உங்களைப் போல்
எனக்கு ஆறுதல் மொழி சொல்ல யார்வருவார் பொல்லாத காலன் உங்கள்
உயிரைச் சொல்லாமல் பேசாமல் பறித்துச் சென்றானே
நினைவுத் தர்மப் பணிகூட செய்தீர்களே
தேசத்தை ஒளிபெறச் செய்வதற்காய் ஓடியோடி என்னிடம் வருவீர்களே
இன்று ஓடி வராமல் ஒருவார்த்தை கூறாமல்
விண்ணுலகம் சென்றதேனோ துடித்துப் போய் நிற்கின்றேன்
உங்களைப் பிரிந்து நாற்பத்து ஐந்து நாள்கள் என்ன
நாற்பத்தையாயிரம் நாள்கள் சென்றாலும் ஆறுமோ என்துயரம்

என்றென்றும் உங்கள் பிரிவால் துயருறும்

**வட்டாரம் -12,**
**புங்குடுதீவு கிழக்கு, புங்குடுதீவு.**

**புதல்வர்.**

## ஈரவிழிகளுடன்
## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### மங்கையற்கரசி தெட்சணாமூர்த்தி

மண்ணின் மடியில்
02.08.1944

இறைவன் அடியில்
23.04.2017

திதி: 01.05.2019

உயிராய், உணர்வாய், உலகில்
அனைத்துமாய் எமக்கிருந்து, எமை
வாழ்வாங்கு வாழ வைத்த எம் குல விடிவிளக்கே அம்மா!
இவ்வீராண்டுகளாய் உனைப்
பிரிந்து நாம் படும் துயரை, யார் தான் அறிந்திடுவாரோ?
அன்றில், நம் துடிதுடிப்பை வார்த்தையில்
தான் வடித்திடலுமாமோ?
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

தாயே உனை இழந்து தவிக்கும்
உன் கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர்கள்.

## மரண அறிவித்தல்



தோற்றம்
23 . 07 . 1939

மறைவு
29 . 04 . 2019

### திருமதி பகவதி கனகசுந்தரம்

கொக்கன் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி கனகசுந்தரம் 29.04.2019 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற கனகசுந்தரத்தின் (ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், புஸ்பராஜா (ஓய்வுபெற்ற RMP), விநாயகமூர்த்தி (கொழும்பு), துரைசிங்கம் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் - தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கம்),இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடராஜா (ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - தொழில்நுட்பக்கல்லூரி), பாலயோகேஸ்வரி, செல்லப்பாக்கியம், வசந்தயோகம் (GIT Director - Colombo), மகிழாம்பிகை (ஓய்வு பெற்ற ஆசிரியை - யா/ ஆறுமுக வித்தியாசாலை), விஜயராகவன் ஆகியோரின் மைத்துனியும், சுதா (சிரேஷ்ட விரிவுரையாளர் - கிழக்கு பல்கலைக்கழகம்), சுதாகர் (கணக்காளர் - இ.போ.ச. தலைமைக்காரியாலயம்), திலீபன் (கனடா), ஜனகன் (Director - IDM Nation Campus), சர்மிலா (U.K), பொன்னப்பெருமாள் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல சேவை நிலையம் - பாண்டியன் குளம்) ஆகியோரின் அன்பு மாமியும், Dr.முகுந்தன் (UK), வைகுந்தன் (NSB), நிதர்சினி (அமெரிக்கா), கலாநிதி சிறிதரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - கொழும்பு பல்கலைக்கழகம்), பத்மாசினி (மொழி பெயர்ப்பாளர் - சுகாதார அமைச்சு), கௌரி (கனடா), சாலினி (வைத்திய கலாநிதி), செந்தூரன் (U.K), கிருசாந்தி (ஆசிரியர் - யா/ மத்திய கல்லூரி) ஆகியோரின் பெரியம்மாவும், நிருத்திக்கா, அஷ்வின், சர்வின், ஆருத்திரா, ஆதிரா, ஸ்ரீமத் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2019) புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்கன்,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்
க.துரைசிங்கம்
077 538 5603

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



தோற்றம்
30 . 11 . 1966

மறைவு
18 . 03 . 2019

கடந்த 18.03.2019 இறைபதம் அடைந்த
எங்கள் குலவிளக்கு

### அமரர் சறோசினி சிவானந்தன்

அவர்களின் 45 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (01.05.2019) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கன்னித்தோட்டம், சுதுமலை வடக்கு, மானிப்பாயில் உள்ள தாயாரின் இல்லத்தில் இடம் பெறும். இந் நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

14/23, கன்னித்தோட்டம்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(CS 25042)(4,17)

## மரண அறிவித்தல்



பிறப்பு
10 . 01 . 1937

இறப்பு
30 . 04 . 2019

### பரமேஸ்வரன் பொன்னம்மா

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரன் பொன்னம்மா (இளையாங்கம்) நேற்று (30.04.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - தெய்வானை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நடேசன் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரமேஸ்வரனின் (விதானையார்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற அமுதவல்லி மற்றும் சுந்தரவல்லி, ஞானவல்லி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் த.கந்தசாமி(பன்னாலை), இ.கருணாகரன், ச.யோகராசா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பகீரதன், ஐங்கரன், சுரேகா(கனடா), சஜிலா, டிலக்ஷனா, ஜெயக்குமார், சுசிகலா(லண்டன்), பிரதீபன், ராஜ்சங்கர்(உரும்பிராய்),மேகலா, சங்கீதா, சபீனா(ஜேர்மனி), ஜோர்ஜ்(ஜேர்மனி), சயந்(ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் ஹரிஸ்ணா, ஹபிஸ், ஆசா, நிசா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2019) புதன்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு நெல்லியான் வீதி, சுழிபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் திருவடிநிலை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெல்லியான் வீதி,
சுழிபுரம்.

(CS 25032)(14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 887 0240/0049 695 968246 (ஜேர்மனி)

## உயிர் காக்க உதவுவோம்

இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள ஒருவருக்கு O+, B+ குருதியுடைய

**சீறுநீரகம்** அவசரமாகத் தேவைப்படுகின்றது. இதனைத்தந்து ஒரு உயிரைக் காப்பாற்றுமாறு நல்லுள்ளங்களை வேண்டி நிற்கின்றோம்.

**076 625 5093, 076 626 3148**

## 41 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05 . 07 . 1950

மறைவு
01 . 05 . 1977

### அமரர் குமரையா தேவராஜன்

மே மாதமே
உன்னில் எல்லா மலர்களும் மலர்ந்தது
எம் மலர் மட்டும் மடிந்து விட்டது

இல. 28, நக்கா
ஒழுங்கை, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்

என்றும் அழியாத நினைவுகளுடன்
மனைவி, மகன்மார், மருமகள்மார்
பேரப்பிள்ளைகள் உற்றார்,
உறவினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகரத்தினம் (ஐயக்கோன்) மங்கயற்கரசி



தோற்றம் 10.11.1951 மறைவு 30.04.2019

வல்வெட்டி பாவந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் (ஐயக்கோன்) மங்கயற்கரசி நேற்று (30.04.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**விஷாந்தன் (மகன்)**

**077 493 7650**

### திருமதி ரஞ்சனி சிவராஜா



ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா மற்றும் கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ரஞ்சனி சிவராஜா 29.04.2019 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற Dr. சிவராஜாவின் அன்பு மனைவியும் ஜெகநாதன், சாந்தினி, வசந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவரஞ்சன் (யாழ் ஜெய்ப்பூர் நிறுவனம்), Dr.பிரபாகரன்(Australia), கிரிதரன்(ஆசிரிய ஆலோசகர், தீவகக் கல்வி வலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயராணி, Dr.சுஜி (Australia) சிவதர்சினி(ஆசிரியர், பெரியபுலம் ம.வி) ஆகியோரின் மாமியாரும் நிவேதிகா, ஜஸ்விந், அஷ்விந், அஷ்மிதா, அர்விந்த், அர்மிதா, அர்ஜிந்த் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரதீபன், தயாழினி ஆகியோரின் மாமியாரும் சிவசாந்தன், வாசுகி, தர்ஷிகா, வசந்தராஜ், சிறீபிரியன் ஆகியோரின் பெரியம்மாவும், அருளானந்தப்பிள்ளை, கெங்காதரன், சிறிசிதம்பரநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2019) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் இல.14.(கோண்டாவில் இந்துக்கல்லூரி முன்பாக) கோ ண்டாவில் மேற்கு, கோண்டாவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.14, சைவப்பாடசாலை வீதி,**
(கோண்டாவில் இந்துக்கல்லூரி முன்பாக)
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**சிவரஞ்சன் - 077 490 9388**
**பிரபாகரன் - 076 553 2581**
**-+61 421 127164(Viber)**
**கிரிதரன் - 077 603 2047**

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பூச்சிநீக்கி தடுப்பூசி போடப்பட்ட டொபோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**076 842 3358**

## வீடுகள் விற்பனைக்கு

திருநெல்வேலி, கல்வியங்காடு, கோண்டாவில் பகுதியில் குறைந்த விலையிலான வீடுகள் விற்பனைக்குண்டு.

**076 697 2287**

## வாகனம் வாடகைக்கு விடப்படும்

சுப்பர் A/C Sales வாகனம் வாடகைக்கு விடப்படும்.

**077 925 4050**

## கிளிநொச்சியில் வீடு வாடகைக்கு

கிளிநொச்சி வயலஸடியில் இரண்டு வீடுகள் முறையே 6அறை, 3அறையில் உடன் வாடகைக்கு உண்டு.

**076 860 4501/ 077 711 1716**

## வீடு வாடகைக்குண்டு

26/07, வளாகவீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.(Anex)

**077 112 0314**

## வேப்பம் பூ தேவை

சுத்தமான துப்புரவுசெய்யப்பட்டு (எதுவித கஞ்சல் இல்லாத) புதிய நன்கு காய்ந்த வேப்பம் பூ வார இறுதி நாள்களில் கொள்வனவு செய்யப்படும்.

**077 967 5599, 077 333 4860**

## பெண் வேலை ஆள்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற் சாலைக்கு பெண் வேலை ஆள்கள் தேவை. வயதெல்லை 18 தொடக்கம் 30 வரை வேலை நேரம் காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை

**076 118 4010**

## வேலையாள்கள் தேவை

194, யாழ் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள மிக் ஷர் உற்பத்தி செய்யும் எமது நிறுவனத்திற்கு பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்புகளுக்கு
**076 640 3388, 076 636 0464**

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாண நிறுவனத்தில் (CIDA C4) பின்வரும் பதவி வெற்றிடம் உள்ளது.
01. Technical Officer (Civil) (HND, NCT or Equivalent with Building Experience)

**077 712 0945 Fax : 021 221 3663**
**Email: vacancynsc@gmail.com**

## Regional Admin தேவை

இந்து கௌரவ குடும்ப மணமக்களின் விபரங்களை சேகரித்து Mobile Apps இல் தரவேற்றம் செய்யக்கூடியவர் தேவை.

**தொடர்பு - 077 651 0126**

## பணியாளர் தேவை

நெல்லியடி மாறுசந்தியில் அமைந்துள்ள விநியோக நிறுவனம் ஒன்றுக்கு முகாமையாளர், அலுவலகப்பணியாளர், சாரதிகள், பொருள்களை ஏற்றி இறக்குவோர் தேவை.

**076 822 7546**

## பெயர் மாற்றம்

கரணவாய் தெற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டியன் கண்டன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை குட்டியன் கந்தையா என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் என்று இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**குட்டியன் கந்தையா.**

E.S Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## மரண அறிவித்தல்கள்

### நாகன் சிவலிங்கம்



பிறப்பு 13.04.1961 இறப்பு 30.04.2019

மறவன்புலோ மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் சிவலிங்கம் நேற்று (30.04.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன் - செல்லம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற கந்தன் மற்றும் தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் நிர்மலாதேவியின் கணவரும் லாவண்யா (கைதடி ஆயுள் வேத வைத்தியசாலை), சஜீவன், சுபன்யா ஆகியோரின் தந்தையாரும் சுலோசனாதேவி, காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் பாக்கியம், இந்திராதேவி, மகாலிங்கம், தங்கமணி, புனிதவதி, தனராஜலிங்கம் (சாவகச்சேரி பிரதேச சபை) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் செல்வம், காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் வசந்தா, நகுலேஸ்வரி, தாட்ஷாயினி ஆகியோரின் மைத்துனரும் துஷாந்தனின் மாமனாரும் கபிஷ்னாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2019) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தனிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 104 1237** **தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி சறோசாதேவி தவபாலரத்தினம்



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோசாதேவி தவபாலரத்தினம் நேற்று (30.04.2019) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் தவபாலரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வரதராசா சரஸ்வதி தம்பதியினரின் பாசமிகு மருமகளும் பிரதீபன் (பிரான்ஸ்), பிரநிதி, பிரபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணராசா, சுசிலாதேவி, செல்வநாயகம், சதீஸ்குமார், ஜெகதாஸ், மோகனதாஸ் ஆகியோரின் அன்புச்சகோதரியும் தனபாலசிங்கம், நேசம், செல்வநாயகம், தெய்வேந்திரம், ராசா, சிவலிங்கம், அருந்தவம் ஆகி யோரின் பாசமிகு மைத்துனியும் நீறுஜா, உதயராசா, ஆகியோரின் அன்பு மாமியும் அதிஸ்ரா, கென்றிக்சன், அபிசேக், டக்சயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2019) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி பியற்றிஸ் செல்வமலர் ஸ்கொட்
*(ஸ்கொட் அன்ரி)*



பிறப்பு 26.05.1929 இறப்பு 30.04.2019

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பியற்றிஸ் செல்வமலர் நேற்று (30.04.2019) செவ்வாய்க் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற எட்வேட் துரைசிங்கம் ஸ்கொட் இன் மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார் ஸ்கொட், இந்திரகுமார் ஸ்கொட் மற்றும் இந்திராணி, ஜோஜ் செல்வகுமார் ஸ்கொட் ஆகியோரின் தாயாரும் K.W.விமலராஜனின் (ஓய்வுபெற்ற விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு) மாமியாரும் டேவிற் ஜெயக்குமார் ஜெசி சிவலோஜினி (ஆசிரியர் - சண்முகா வித்தியாலயம், திருகோணமலை), பிஜற்றிஸ் கிரிஷாந்தி (கிசோ, ஆசிரியர் - உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஜெயராஜா, நேசராஜா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (01.05.2019) புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோப்பாய் பரி.கன்னி மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"றிச்சாட் கவுஸ்"**
**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**செல்வன் ஸ்கொட் (மகன் - 077 967 2802),**
**இந்திராணி விமல்ராஜன் (மகள் - 077 662 2313)**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தீராச் சிக்கலுக்கான அறிகுறி!

அபூபக்கர்அல்பக்தாதி, உலகால்ஒசாமாபின்லாடனுக்குப் பின்னர் அதிகம் உச்சரிக்கப்பட்ட பெயர். 5 வருடங்களுக்குப் பின்னர் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ள இந்தநபரேஇன்று இலங்கையை உலுக்கிக் கொண்டிருக்கக் கூடியபடுகொலைகளின்நடுநாயகமாக இருக்கக்கூடியவர். சிரிய, ஈராக் இஸ்லாமிய அரசு என்பதை நிறுவி அதனூடாக முஸ்லிம்அடிப்படைவாதத்தை நிலைநிறுத்தவிரும்பியவர். அதனால்உலகம்முழுவதும்பயங்கரவாதத்தைப்பரப்பவும் தயங்கியவரில்லை.

பக்தாதி கடைசியாகப் பொதுவெளியில் காட்சியளித்தது 2014ஆம் ஆண்டு. அதன் பின்னர் அவ்வப்போது அவரது 'குரல் பதிவுகள் வெளிவந்தாலும் காணொலி எதுவும் வெளி வந்ததில்லை. இதற்கிடையில் அவர் படுகாயமடை ந்து இறந்துவிட்டார் என்றும் தாக்குதலில் கொல்லப்பட்டார் என்றும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன. இந்த 5 வருடங்களில் முதற்தடவையாகதற்போதுதான் ஒருகாணொலி வெளிவந்துள்ளது.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பினரின் கடைசித் தளமாக இருந்த பகுஸ் என்கிற இடமும் அமெரிக்க ஆதரவுப் படைகளிடம்வீழ்ச்சி அடைந்தபின்னர்இந்தக்காணொலிவந்துள்ளது. கடைசி நிலையும் வீழ்ச்சி அடைந்துவிட்டதால் சோர்வடைந்திருக்கும் இஸ்லாமிய அரசு தீவிரவாதிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பக்தாதியின் காணொலி வெளி வந்திருக்கலாம் என்று நோக்கர்கள் கூறுகின்றனர்.

தன்னைப் பின்தொடர்பவர்களுடன் வெறும் 40 செக்கன்கள்தான் அந்தக்காணொலியில் உரையாடுகின்றார் பக்தாதி. அதன் பின்னர் அவரது குரல் ஒலிப்பதிவு வருகின்றது. வழக்கம் போலன்றிப் பக்தாதியின் இந்தக் காணொலிப் பதிவு நமது அக்கறையையும் ஈர்க்கின்றது, ஏனெனில் தமது கடைசித்தளமாக இருந்த பகுஸ்தாக்கிக் கைப்பற்றப்பட்டதற்குப் பதிலடியாகத்தான் இலங்கையில் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அவர் அதில் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி தீர்ப்புநாள்வரைஜிகாத் தொடரும் என்றும் அவர் சூளுரைத்துள்ளார். இன்று எமது போர் ஒரு முரட்டுப் போராக மாறியுள்ளது, அதை நாம் எதிரி வரைக்கும் நீடிக்க வேண்டும், தீர்ப்பு நாள் வரும் வரையில் ஜிகாத் தொடரும் என்பது அவர்களுக்குத் தெரியவேண்டும் என்றும் பக்தாதி தனது காணொலியில் தெரியப்படுத்தியிருக்கிறார்.

கலீஃபாவின் மீதான தமது விசுவாசத்தை வெளிப்படுத்தியதற்காக எமது இலங்கைச்சகோதரர்களை நாம் பாராட்டுகின்றபோது அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் தோற்றுப் போனார்கள் என்றும் அந்தக் காணொலியில் பக்தாதி கூறியிருக்கிறார். அத்தோடு, கடவுளின் வழியில் ஒற்றுமையோடு இணைந்திருங்கள் என்று அவர்களுக்கு ஆலோசனை கூறுகின்றோம், எமது சகோதரர்கள் தொடங்கியுள்ள இந்தப் பயணத்தில் துணையிருக்குமாறு இறைவனிடம் கேட்கின்றோம் என்றும் கூறப்பட்டுள்ளது.

''இஸ்லாமிய அரசு இன்னும் இருக்கிறது, பக்தாதியே அதன் தலைவராகத் தொடர்கிறார், அமைப்பின்பன்னாட்டுவலையமைப்பில் உள்ளதீவிரவாதிகள்எதிர்வுகூறமுடியாத கொடூரமான தாக்குதல்களைத் தொடர்வார்கள். சிரியாவில் ஏற்பட்ட இழப்புக்களுக்குப் பழிவாங்கும்படி பக்தாதி தனது ஆதரவாளர்களுக்கு அறைகூவல் விடுக்கி றார்.''

பக்தாதியின் காணொலி வெளியீட்டை இப்படி அர்த்தப்படுத்துகிறார்கள் பன்னாட்டு அரசியல் நோக்கர்கள். ஆக மொத்தத்தில் இலங்கைக்கு வெளியே இருந்து நன்கு திட்டமிடப்பட்டு இலங்கையர்களைக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலாகவே உயிர்த்த ஞாயிறுதாக்குதல் தெரிகிறது. இந்த நிலையில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் சவால் மிகப் பெரியது. மிகப் பெரும் பன்னாட்டுப் பயங்கரவாத வலையமைப்புக்குள் இலங்கையும் சிக்குண்டுள் ளமை தெளிவாகின்றது.

இலங்கைச் சமூகங்களுக்கு இடையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தி, நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் உறுதிப்படுத்துவதற்குக் கொழும்பு முன்வராதவரையில் இந்தச்சிக்கல் தீர்ப்பதற்குச் சவாலானதாகவே இருக்கப் போகிறது.





# ஐ.எஸ்.ஐ.எஸ் தம்மை சுதந்திரமாக வலுப்படுத்த அரச புலனாய்வுத்துறை பலவீனமாக இருந்ததா?

ப்ரியமதா பயஸ்

இன்றைய இலங்கை அரசியல். இராணுவ நிலமையை நினைக்க மிகவும் அச்சமாகவும் அரசின் மீது வெறுப்பும் ஏற்படுகிறது. எதிர்காலம் வாழ்வும் சாவும் என மிகக் காட்டு மிராண்டித்தன மான போராட்டத்தோடும் அரசியல் நிலை வாழ்வோடும் நகரப்போகின்றது. இன்னொரு மல்லுக்கட்டையும் இலங்கையில் நாம் பார்க்கப் போகிறோம்.

**படரும் தீவிரவாதம்**

இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்துக்குள்ளும் தீவிரவாதம் உருவாகுமென்பதும், அங்கே உள்ள முஸ்லிம்களது சாவின் தொடர்ச்சி அவர்களாலேயே உருவாக்கப்படுகிறது என்பதும் புரிதலுக்குள் வருகிறது. இலங்கைச் சிறுநாடு மேலும் மத ரீதியாகப் பிளவுபட்ட நாடாக உருவாகுவது இலங்கையின் அரசியல் சமூக சூழலுக்கு ஏற்ற ஒரு நிலமையாகக் கருதமுடியவில்லை.

ஜனநாயக சூழலது நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விலத்தி, தற்செயலாக உருவாக்கப்படும் ஒடுக்கு முறை அலகுகள் சட்டமாகவும், அதிகாரக் கருத்தியலாகவும், வன்முறை சார்ந்தும், சாராமலும் ஒவ்வொரு கணமும் பரந்துபட்ட மக்களது ஒப்புதலோடு இது சாத்தியமாகிறது. இதனை தற்போது தலைதூக்கியுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற தீவிரவாத அமைப்பு தோற்றுவித்துள்ளது. அவர்களுக்கு முஸ்லிம் இன மக்கள் சிலர் வழங்கிய ஆதரவு மூலம் இது புலப்பட்டுள்ளது.

முஸ்லிம் என்ற மதத்தை தீவிரப்படுத்தி அவர்களின் மத நெறிமுறைகளை கூர்மைப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள தீவிரவாதம் சாதாரண மக்களின் வாழ்வியல்போக்கில் நரகத்து முள்ளாகி இருக்கிறது.

இலங்கையில் உள்ளூர் பயங்கரவாதிகளால் தொடர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இலங்கை அரசு கூறியுள்ளது. அதில் வெளிநாட்டு பயங்கரவாதிகளின் தாக்குதல் நுட்பம் தெளிவாக காணப்படுகின்றதென பன்னாட்டு பயங்கரவாத எதிர்ப்பு வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

தொடர் குண்டுவெடிப்புக்களின் சூத்திரதாரிகளின் பின்னால் பன்னாட்டுப் பயங்கரவாதிகளின் தொடர்பும் இருப்பதாகக் கூறியுள்ள இலங்கை அரசு அது ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புதான் எனத் தெரிவித்துள்ளது. இது ஒட்டுமொத்த இலங்கை மக்களின் வயிற்றில் புளியைக்கரைக்கும் செய்தியாக கடந்த ஒருவாரமாக உலவித்திரிகிறது. உலகின் வல்லரசு நாடுகளைச் சமீபகாலத்தில் ஓர் உலுக்கு உலுக்கிய பயங்கரவாதம் தற்போது இலங்கைக்குள் ஊடுருவி உள்ளது என்பது நாட்டின் சிலகால சுமுக வாழ்வை கேள்விக்குறியாக்கியுள்ளது.

**புலனாய்வின் தோல்வி**

இலங்கை புலனாய்வுத்துறை எவ்வளவு பலவீனமாக இதுவரை இருந்துள்ளது என்பதை சிந்திக்கும்போது மிகப்பெரும் அதிர்ச்சியே மிஞ்சுகின்றது. தீவிரவாதிகள் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரே தமது கைவரிசையை கிழக்கில் ஆரம்பித்துள்ளனர். மிக இலகுவான செயற்பாடாக அவர்களின் வளர்ச்சி கிழக்கில் தென்பட்டிருக்கிறது.

பெரும் எடுப்பிலான ஆயுத மையம், ஆடம்பர வாகனங்கள், பல ஆண்டுகளுக்கான தொடர் தாக்குதலுக்குத் தேவையான வெடிமருந்துகள், ஆயுத சேமிப்புக்கள் என்பன அவற்றைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றன.

கஞ்சாவையும், அபினையும் தடவிப்பிடித்த புலனாய்வுத்துறையும் பொலிஸாரும் வெடி குண்டுகளையும், தீவிரவாதிகளையும் அனுமதித்துத் தீவிரவாதிகள் சுதந்திரமாக தம்மை தீவிரப்படுத்தவும் தாக்குதல் திட்டங்களை சுதந்திரமாக செயல்ப் படுத்தவும் வளிவிட்டுள்ளனர். கடைசியில் போதைப்பொருளை ஒழித்ததாகவும் இல்லை: அவற்றை அழித்ததாகவும் இல்லை .

'கிளியை வளர்த்து பூனைக்குக் கொடுத்த கதையாக' முஸ்லிம் அரசியல்வாதிகளின் பிரதேசவாதமும், மதவாதமும் ஓங்கி வளர்ந்து தற்போது தீவிரவாதிகளுக்கு ஆதரவு என்ற படியில் வந்து நிற்கிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாத இறுதியில் மட்டக்களப்பு - வவுணதீவில் ஒரு தமிழ் பொலிஸ், ஒரு சிங்கள பொலிஸ் என இரண்டு பொலிஸ் அலுவலர்கள் கத்தியால் வெட்டப்பட்டும், துப்பாக்கியால் சுடப்பட்டும் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற நாளில் இருந்து தம்மை சுதாகரித்துக்கொள்ளாத புலனாய்வுத்துறை தற்போது 250க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களின் கொலைக்கு காரணமாகி இருக்கிறது.

மதம் சார்ந்த தீவிரவாதத்தை வளர்க்க அந்த மத அமைப்பைச் சார்ந்தவர்கள் விரும்பியோ விரும்பாமலோ ஆதரவு வழங்கியுள்ளனர். காரணம் தமது குடும்ப உறுப்பினர்கள் அந்த தீவிரவாதத்தில் தம்மை தீவிரமாக இணைத்துக்கொண்டமைதான். புடம் போடப்பட்ட மூளைச்சலவை ஒரு நாட்டில் வாழுகின்ற ஒருமத அமைப்பின் வாழ்வியலை கேள்விக்குறியாக்கியுள்ளது. இலங்கையின் எதிர்காலத்தையும்கூட.

> இலங்கையில் உள்ளூர் பயங்கரவாதிகளால் தொடர் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இலங்கை அரசு கூறியுள்ளது. அதில் வெளிநாட்டுப் பயங்கரவாதிகளின் தாக்குதல் நுட்பம் தெளிவாகக் காணப்படுகின்றதெனப் பன்னாட்டுப் பயங்கரவாத எதிர்ப்பு வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

## மூவரது உயிரை விபத்தில் பறித்த சாரதிக்கு 2 வருட கடூழியச் சிறை

*8 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும்*
*சாரதி அனுமதிப் பத்திரம் நிரந்தரமாகத் தடை*

யாழ்ப்பாணம், மே 1

பாலகி உட்பட மூவருக்கு உயிரிழப்பை ஏற்படுத்திய சாரதிக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது யாழ்ப்பாண நீதிவான் மன்று. அவரது சாரதி அனுமதிப் பத்திரத்தை நிரந்தரமாகத் தடை செய்யுமாறு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு நீதிமன்று உத்தரவிட்டு, உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு 8லட்சம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் உத்தரவில் தெரிவித்தது.

உயிரிழந்த சிறுமியின் குடும்பத்துக்கும் சிறுமியின் அம்மப்பாவின் குடும்பத்து க்குமென்று 5 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் முச்சக்கர வண்டிச் சாரதிக்கு 3 லட்சம் ரூபா பணம் இழப்பீடாக வழங்கவேண்டும். அதனைச் செலுத்தாவிடின் ஒரு வருட சிறைத் தண்டனையை எதிரி அனுபவிக்க நேரிடும். மேலும் 3 குற்றங்களுக்காக. எதிரி தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 7 ஆயிரத்து 500 ரூபாவைத் தண்டமாகச் செலுத்தவேண்டும் என்று உத்தரவிட்ட நீதிவான், எதிரியின் சாரதி அனுமதிப் பத்திரத்தை நிரந்தரமாகத் தடை செய்யும் ஆணையை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு நீதிமன்று வழங்குகிறது" என்று நீதிவான்ஏ.எஸ். பீற்றர் போல் தீர்ப்பில் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் முச்சக்கர வண்டியும் ஹையேஸ் வாகனமும் மோதி விபத்து ஏற்பட்டது. ஹையேஸ் வாகனம் வேகக்கட்டுப்பாட்டையிழந்து வீதியின் தடம் மாறி முச்சக்கர வண்டியை மோதித் தள்ளியது., முச்சக்கரவண்டி அருகிலுள்ள வயலுக்கு தூக்கி வீசப்பட்டது.

விபத்தில் ஆறு வயதுச் சிறுமி ராஜ்குமார் டனிஷ்ரா மற்றும் அவரது பாட்டனார் சிங்காரவேலு பாஸ்கரன் (வயது - 57) இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தனர். அந்தச் சிறுமி அன்று முதன்முதலாக பாடசாலைக்குச் சென்றிருந்தார்.

முச்சக்கர வண்டிச் சாரதி ஜெயபாலன் துரைபாலசிங்கம் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கோப்பாய் பொலிஸார், ஹையேஸ் வாகனச் சாரதியான பருத்தித்துறை மாதனையைச் சேர்ந்த சாரதியைக் கைது செய்தனர். விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

விபத்தை ஏற்படுத்தி மூவரின் உயிரிழப்புக்கு காரணமாக இருந்தமை, கவனவீனமாக வாகனத்தைச் செலுத்தியமை, ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்தியமை மற்றும் விபத்தைத் தடுக்கத் தவறியமை ஆகிய 4 குற்றச்சாட்டு க்க ளின் கீழ் சாரதிக்கு எதிராகப் பொலிஸார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டார். அவரது கைவிரல் அடையாளம் பெறப்பட்டது. அவருக்குக் கடந்த வியாழக்கிழமை நீதிமன்று மேற்கண்ட தீர்ப்பு வழங்கியது.

"எதிரிக்கு வழங்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையை ஒத்திவைத்த தண்டனையாக மன்று வழங்கவேண்டும்" என்று எதிரி சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி மு.றெமீடியஸ் மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம், "பாடசாலைக்கனவோடு சென்றுகொண்டிருந்த சிறுமியின் வாழ்க்கை முடிவுறுத்தப்ப ட்டுள் ளது. இது பாரதூரமான சம்பவம். கடுமையான தண்டனை விதிக்கப்படவேண்டும்" என்று சமர்ப்பணம் செய்தார்.

இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்த நீதிவான் ஏ.எஸ்.பீற்றர் போல், "இது விபத்துச் சம்பவமாக இருந்தாலும் பாராதூரமானது. மூவரின் உயிரிழப்புக்கு காரணமாக இந்த விபத்து அமைந்துள்ளது. விபத்துக்கள் தவிர்க்க முடியாதவை தான். ஆனால் அவதானமாக வாகனத்தைச் செலுத்த வேண்டிய பொறுப்பு சாரதிகளுக்கு உண்டு.

வீதியில் சிறுவர்கள் பயணிப்பார்கள். இந்த விபத்திலும் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். பொறுப்பற்ற விதத்தில் வாகனத்தை எதிரி செலுத்தியுள்ளார். அதனால் அவரது தண்டனையைக் குறைக்க மன்று எண்ணவில்லை" என்று சுட்டிக் காட்டினார். (த-103.37)

## தாக்குதலாளிகள் தங்கிய வீடு கொட்டாஞ்சேனையில் சிக்கியது

*கடவுச் சீட்டுக்கள், அலைபேசிகள் மீட்பு*

கொழும்பு, மே 1

கொழும்பு கொட்டாஞ்சேனையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் முக்கிய தளமாகச் செயற்பட்ட வீடொன்றைப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

அங்கிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் கருத்துக்கள் அடங்கிய இறுவெட்டுக்கள், தௌஹீத் ஜமாத் அமைப்பினரின் தகவல்கள் அடங்கிய டெப் கணினி, அலைபேசிகள் 12, கடவுச்சீட்டுக்கள் 5 என்பன மீட்கப்பட்டு ள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடர்மாடிக் குடியிருப்பு பகுதியில் உள்ள வீடொன்றையே புலனாய்வினர் கண்டறிந்துள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் செயற்பாட்டுக்கு வீட்டை வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் அந்த வீட்டு உரிமையாளரைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கியிருந்த இடமொன்று உள்ளது எனக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமையவே இந்தச் சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## கொல்லப்பட்ட வெளிநாட்டவரின் எண்ணிக்கை அதிகரிக்கிறது

குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 54 ஆக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை 42 வெளிநாட்டவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று அயலுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை 12 வெளிநாட்டவர்கள், குண்டுவெடிப்புகளுக்குப் பின்னர் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மருத்துவமனையில் இன்னமும் அடையாளம் காணப்படாமல் உள்ள சடலங்களுக்குள் இவர்களின் சடலங்களும் இருக்கலாம் என்று நம்பப்படுவதால், உயிரிழந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 54 ஆக அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

வெளிநாட்டவர்கள் ஐவர் இன்னமும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

## தாக்குதல் தாரிகளுக்கும் தனக்கும் தொடர்பில்லை

*கிழக்கு ஆளுநர் விளக்கம்*

மூதூர், மே 1



தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவர் தற்கொலை குண்டுதாரியான சஹ்ரானுக்கும் எனக்கும் தொடர்பு இருக்கின்றது எனக்கூறுவது தவறு என்று கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்பு ல்லாஹ் தெரிவித்தார். திருகோணமலையில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

குண்டுத் தாக்குதல்களுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் ஒத்துழைக்கவுமில்லை, ஒத்துழைக்கப் போவதுமில்லை. இந்தச் சம்பவத்துடன் என்னைத் தொடர்புபடுத்தி சில ஊடகங்கள் மட்டுமல்ல, சில அரசியல் வாதிகளும் என் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளனர். அது தவறு.

தற்போது தீவிரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் நபர்களும் அவர்களின் அமைப்பும் எனக்கும் எனது அரசியலுக்கும் எதிராகவே செயற்பட்டவர்கள். என்னை அரசியலிலிருந்து தோற்றகடித்து அரசியலில் இருந்து இல்லாமல் செய்வதற்கு செயற்பட்டவர் சஹ்ரான். என்னை முஸ்லிம் மதத்தில் இருந்து விலகியவர் என்றும் பரப்புரை செய்து என்னைத் தேர்தலில் வெற்றிபெறாது செய்தவர் - என்றார். (த)

## விளையாட்டு பயிற்றுவிப்பாளர் நியமனங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 1

நாடு முழுவதும் உள்ள அரச பாடசாலைகளுக்கான விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் சுமார் 3 ஆயிரத்து 850 பேருக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனங்கள் கடந்த 29ஆம் திகதி தலைமை அமைச்சர் அலுவலகத்தில் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலமை காரணமாக அந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது என்றும், அடுத்துவரும் வாரங்களில் இந்த நியமனங்கள் வழங்கப்படும் என்றும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-7)

## சஹ்ரானின் சகா கேரளாவில் கைது

*என்.ஐ.ஏ தெரிவிக்கிறது*

கொழும்பு, மே 1

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தினர் என்று தெரிவிக்கப்படும் சஹ்ரானின் நெருங்கிய சகா எனக் கூறப்படும் ரியாஸ் அபூபக்கர் இந்தியாவின் கேரளாவில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலைத் தாக்குதலாளி என்று கூறப்படும் சஹ்ரானுடன் நேரடித் தொடர்பைக் கொண்டிருந்த இவர் அபூ துஜானா என்ற ஐ .எஸ் பெயரை கொண்டிருந்தவர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் இலங்கை குண்டுவெடிப்பு மற்றும் இந்தியாவின் பல இடங்களில் நடத்தப்படவிருந்த தாக்குதல்கள் குறித்து பல தகவல்கள் வெளிவந்துள்ளன என்று என்.ஐ.ஏ என்ற இந்திய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. (த)

## கடல் வழியாகச் சென்று சிக்கிய 60 பேர் திருப்பியனுப்பப்பட்டனர்

கொழும்பு, மே 1

இந்தியப் பெருங்கடலில் உள்ள, பிரான்சுக்குச் சொந்தமான ரியூனியன் தீவில் அடைக்கலம் தேடிய 60 இலங்கையர்கள் நேற்று சிறப்பு வானூர்தி மூலமாக, கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

120 இலங்கையர்கள் மீன்பிடிப் படகு மூலம் கடந்த ஏப்ரல் 13ஆம் திகதி ரியூனியன் தீவைச் சென்றடைந்தனர். 4 ஆயிரம் கிலோமீற்றர் பயணத்துக்குக்கு, 2ஆயிரத்து 350 தொடக்கம், 5ஆயிரத்து 580 வரையான யூரோக்களை இவர்கள் ஒவ்வொருவரும் செலுத்தியிருந்தனர்.

மீன்பிடிப் படகின் மாலுமிகளான, இந்தோனேசியர்கள் மூவரும், சட்டவிரோத குடியேற்றத்துக்கு உதவியதாக குற்றம்சாட்டப்பட்டு விளக்கமறிலில் வைக்கப்பட்டுள்ளனர். 2018 மார்ச் தொடக்கம், 273 இலங்கையர்கள் ரியூனியன் தீவில் அடைக்கலம் கோரியிருந்தனர். அவர்களில் 130 பேர் இன்னமும் அங்கு தங்கியுள்ளனர்.

அவர்கள் புகலிடக் கோரிக்கை தொடர்பாக, பிரான்சின் அகதிகள் மற்றும் நாடற்றவர்களின் பாதுகாப்புக்கான பணியகத்தின் பதிலுக்காக காத்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

வடமாகாண ஆளுகைக்கு உட்பட்ட திணைக்களங்களில் இடம்பெற்ற

# ஊழல் விசாரணைகள் கிடப்பில் இருக்கின்றன

## அவைத் தலைவர் சிவஞானம் சாடல்

யாழ்ப்பாணம், மே 1

வடக்கு மாகாண சபையின் ஆளுகைக்குட்பட்ட திணைக்களங்கள் மற்றும் சபைகளில் இடம்பெற்றன என்று சொல்லப்படும் ஊழல்கள் தொடர்பான விசாரணைகள் கிடப்பில் போடப் பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த மாகாணசபை ஆட்சியில் இருந்த போது வடக்கு மாகாண கூட்டுறவு திணைக்களம் மற்றும் யாழ்ப்பாண மாநகர சபையில் இடம்பெற்ற பண மோசடி தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் தற்போது அவை அனைத்தும் கிடப்பில் உள்ளன. உரிய அதிகாரிகள் அதனைக் கருத்தில் எடுக்காது செயற்பட்டு வருகின்றனர். இது தொடர்பாக தலைமைச் செயலருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளேன். இது தொடர்பில் தான் ஆராய வேண்டிய கடப்பாட்டில் உள்ளேன் என்றும் எனினும் இன்றுவரை அது தொடர்பான எந்த ஒரு செயல்பாடும் இடம்பெறாத நிலையில் இருப்பது எனக்கு மன வருத்தம் தருகின்றது என்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளேன் - என்றார். (ம-106)

# கட்டாக்காலி கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு தண்டம்

கொடிகாமம், மே 1



கொடிகாமம் பொதுச் சந்தையில் பகல் வேளையில் வரும் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடித்து அதன் உரிமையாளர்களிடம் கட்டணம் அறவிட வேண்டும். இவ்வாறு சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

பகல் வேளையில் சந்தையினுள் வருகின்ற கட்டாக்காலி ஆடு, மாடுகள் வியாபாரிகளிடமுள்ள விற்பனைப் பொருள்களை அழித்து வருகின்றன. இது தொடர்பில் வியாபாரிகளால் முறையிடப்பட்டது.

பொதுச் சந்தையில் பல பணியாளர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்கள் சந்தைக்குள் செல்லும் கால்நடைகளை பிடித்து பிரதேச சபையிடம் ஒப்படைக்க வேண்டும்.

அவ்வாறு பிடிக்கப்படும் கால்நடைகளின் உரிமையாளர்களிடம்தண்டம்அறவிடப்பட்டு பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்க வேண்டும் - என்றார்.

இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார். (ஐ-159, 9)

சாவகச்சேரி நகரசபையால்

# 11 வேலைகள் முதற்கட்டமாக அனுப்பிவைக்கப்பட்டன

சாவகச்சேரி,மே 1

சாவகச்சேரி நகரசபையின் வட்டாரப் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்ட 11 வேலைகள் முதற் கட்டமாக உள்ளூராட்சிதிணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

சாவகச்சேரி நகரசபையின் 11 வட்டாரங்களிலும் மக்களால் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட தலா பத்து அபிவிருத்தித் திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இவ்வாறு காட்சிப்படுத்தப் பட்ட 110 அபிவிருத்தித் திட்டங்களில் முதற்கட்டமாக வட்டாரப் பிரதிநிதிகளால் புள்ளியிடல் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 11 அபிவிருத்தி வேலைகள் அனுப்பி வைக்கப்பட்டன.

அவையாவன: மண்டுவில் வட்டாரத்தில் தும்புத் தொழிற்சாலை அமைத்தல், கண்டுவில் குளம் சீரமைத்தலும் கொங்கிறீற் வடிகால் அமைத்தலும், நுணாவில் கிழக்கு மத்தி மேற்கில் சிறுவர்பூங்கா அமைத்தல், கோயிற்குடியிருப்பு கடற்கரை வீதி அணை அமைத்தல், கல்வயல் வட்டாரத்தில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தல், நுணாவில் மேற்கில் தேவாலய வீதி சீரமைத்தல், கோயிற்குடியிருப்பு சித்திவிநாயகர் கலை மன்ற வீதி சீரமைப்பு, மீசாலை மேற்கு வட்டாரத்தில் ஈச்சந்தாழ்வு வீதி சீரமைத்தல், மீசாலை கிழக்கு வட்டாரத்தில் ஸ்ரீ விநாயகர் சனசமூக நிலையத்துக்கு சுற்றுமதில் மலகூடம் அமைத்தல், சாவகச்சேரி வடக்கு வட்டாரத்தில் சங்கத்தானை சனசமூக நிலையம் சீரமைத்தல் ஆகிய வேலைகள் உள்ளூராட்சி திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதென தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (ஐ-9)

# ஆலயத் திருவிழாக்களை பகல்வேளையில் நடத்தவும்

## தென்மராட்சி பிரதேச செயலகம் அறிவிப்பு

சாவகச்சேரி மே 1

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாக ஆலய திருவிழாக்களை பகல் வேளையில் நடத்தி முடிப்பதுடன் இரவு நேர களியாட்ட நிகழ்வுகளை தடை செய்யுமாறும் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய வளாகத்தினுள் எக்காரணம் கொண்டும் பொதிகள், பைகள் கொண்டு செல்லக்கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாவதையொட்டி பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஆலய நிர்வாகத்தினர், சுகாதாரத் திணைக்களத்தினர், பொலிஸார், படையினர், சாவகச்சேரி பிரதேச சபையினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அடியார்கள் ஆலயத்துக்கு கலாசார உடையுடன் வருகைதருமாறும் கோவிலுக்கு வரும் வேளையில் கூடிய அளவு தங்க நகைகள் அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், ஆலய வளாகத்தினுள் பொதிகள் பைகள் கொண்டு வருவதைத் தவிர்த்துக் கொள்ளமாறும் முடிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ- 9)



# கும்பலின் தாக்குதலில் குடும்பத் தலைவர் காயம்

சாவகச்சேரி, மே1

தென்மராட்சி, கெற்பேலி மேற்கில் மேற்கொள்ளப் பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் குடும்பத் தலைவர் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

முகத்தை மூடிக் கட்டியவாறு உழவியந்திரத்தில் வந்த 15 பேர் கொண்ட கும்பலே தாக்குதல் நடத்தியது என்று தெரிவிக்கப்பட்டது.

கெற்பேலி மேற்கில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து இந்தக் கும்பல் தாக்குதல் நடத்தியுதுள்ளது. வீட்டிலிருந்த உடமைகளை சேதமாக்கியதுடன், வீட்டின் யன்னல் கண்ணாடிகள் போன்றவற்றையும் சேதமாக்கியது. இந்தச் சத்தம் கேட்டுச் சென்ற அயல் வீட்டுக் காரரான க.கனகசிங்கம் (வயது-31) என்பவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியது. தகவல் அறிந்து ஊர் மக்கள் திரளத் தொடங்கியதை அடுத்து அந்தக் கும்பல் உழவியந்திரத்தைக் கைவிட்டு ஓடித் தப்பியது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸாருக்கு முறையிடப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். உழவியந்திரத்தை எடுத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9,159)

# நவீனசந்தை முன்பாக வாகனங்கள் நிறுத்தத் தடை

## வியாபாரம் பாதிப்பு

சாவகச்சேரி,மே1

சாவகச்சேரி நவீனசந்தை முன்பாக வாகனங்கள் நிறுத்துவதற்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர். இதனால் வீதியோர வர்த்தகர்கள் கவலை தெரிவித்தனர்.

சாவகச்சேரி நவீன சந்தை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் ஏ 9 முதன்மைச் சாலையுடன் இணைந்த பகுதியில் உந்துருளி, ஈருருளி போன்றவற்றில் வருவோர் வாகனங்களை நவீன சந்தை முன்பாக நிறுத்தி விட்டு வர்த்தக நிலையங்களுக்குச் சென்று வந்தனர்.

அண்மையில் நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தையடுத்து நகரப் பகுதியில் நவீன சந்தைக்கு முன்பாக வாகனங்கள் நிறுத்த வேண்டாமென அறிவித்தல் பலகைகள் பொலிஸாரால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் சந்தைக்கு வரும் பொதுமக்கள் உட்பட அனைவரும் வாகனங்களைச் சந்தையின் உட்புறம் கொண்டு சென்று நிறுத்துவதுடன் தமக்கு தேவையான பொருள்களை உட்புறம் உள்ள கடைகளிலேயே வாங்கிச் செல்கின்றனர். இதனால் வீதியோரம் உள்ள வியாபாரிகள் தமக்கு வியாபாரம் நடைபெறவில்லையென கவலை தெரிவித்தனர். (ஐ-9)

# கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஆசிரியர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,மே1

கொக்குவில் இந்துக்கல்லூரியின் ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (க)

# பெற்றோர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே 1

பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் மாணவர்களுடைய பாதுகாப்பு தொடர்பில் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்துப் பெற்றோர்களும், ஆசிரியர்களும், பழையமாணவர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலையின் அதிபர் கேட்டுள்ளார். (க)

* * *

சாவகச்சேரி மே.1

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

மாணவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதால் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் செ.பேரின்பநாதன் அறிவித்துள்ளார். (ஐ-9)

# குருநகர் பகுதியில் சுற்றிவளைப்பு வெளிநாட்டுச் சிகரெட்கள், வாள் மீட்பு

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது வெளிநாட்டு வகை சிகரெட் பெட்டிகள் மற்றும் வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.



குறித்த பகுதியில் உள்ள சுமார் 300 வீடுகள் மீது இராணுவம், கடற்படையினர், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து பாரிய சுற்றவளைப்புத் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இந்த சுற்றிவளைப்பு தேடுதலின் போது குருநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து பெருமளவிலான வெளிநாட்டு புல்லட் வகையான சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து சிறப்பு அதிரடிப்படையினரால் வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இரு சம்பவங்கள் தொடர்பிலும் வீட்டின் உரிமையாளர்கள் விசாரணைக்காக பொலிஸாரால் அழைக்கப்பட்டுள்ளனர்.



கடந்த21ஆம் திகதிகொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து யாழ்ப்பாண குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் சுற்றிவளைப்புக்கள் மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதேவேளை யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் இதேபோன்று சுற்றிவளைப்புக் கள்மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-106,105,ரி1,37)

## கூட்டுறவுச் சங்கங்கள் தரப்படுத்தப்பட்டன

வடக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களை தரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள சங்கங்கள் இவ்வாறு அவற்றின் தரங்களுக்கு அமைய தரப்படுத்தப்படவுள்ளன என்று மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்தது.

சங்கங்களின் தரத்துக்கு அமைய அவற்றுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்படும். இந்தத் தரப்படுத்தலில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள சங்கங்களை மேல்நிலைக்குக் கொண்டு வருவதற்கும் திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

சங்கங்கள் தரப்படுத்தலின் போதுபணியாளர்களுக்கான கொடுப்பனவுகள், சங்கங்களின் வியாபார நடவடிக்கைகள் போன்றவை முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## வாழைப்பழத்தின் விலையில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென சரிந்ததால் வாழைச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் தென்பகுதிக்கான வாழைக்குலை ஏற்றுமதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீர்வேலி வாழைக்குலை விற்பனை சந்தைக்கு கடந்த சில நாள்களாக பெரும் எண்ணிக்கையான வாழைக்குலைகள் எடுத்து வரப்படுகின்றன.

இந்த வாழைக்குலைகள் போதிய சந்தை ,வாய்ப்பின்றி தேங்கிக் காணப்படுகின்றன. சந்தையில் கதலி வாழைப்பழம் கிலோ 20 ரூபாவாக விலை சரிந்து காணப்படுகின்றது. (ஐ-17)



## ஊடகவியலாளர்சிவராமின் நினைவு நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 1

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தராகி டி. சிவராமின் 14 ஆம் ஆண்டு நினைவு நாளும், தீவிரவாத தாக்குதலில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் நடைபெற்றது.

யாழ்ப்பாண நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவு தூபியில் நேற்றுமுன்தினம் காலை இந்த நிகழ்வு நடைபெற்றது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு தொடர்ந்து, நினைவு தூபிக்கு மலர் மாலை அணிவித்து, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் திருவுருவ படத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து கடந்த ஈஸ்டர் தினத்தன்று கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த அஞ்சலி நிகழ்வில் ஊடகவியலாளர்கள், ஊடக செயற்பாட்டாளர்கள், அரசியல்வாதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (ஐ-37)

## மதுபோதையில் வாகனம் செலுத்தினாரென ஒருவர் கைது

நீதிமன்றால் சாரதிய அனுமதிப் பத்திரம் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கொடிகாமம் நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீதிப் போக்குவரத்துப் பணியில் பொலிஸார் ஈடுபட்டிருந்தவேளையில் அவ்வழியே வந்த உந்துருளியை நிறுத்தி சோதனையிட்ட போது அதனைச் செலுத்தி வந்த நபரிடம் சாரதிய அனுமதிப் பத்திரம் இன்மை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நபருக்கு எதிராக மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, நீதிமன்றில் சாரதிய அனுமதிப் பத்திரம் தடுத்து வைக்கப்பட்ட காலப்பகுதியில் வாகனம் செலுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக் களுடன் சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ஐ- 9)

### கரவெட்டி பிரதேச சபை எல்லைக்குள்

## திண்மக் கழிவகற்றல் சிறப்பாக நடைபெறும்

யாழ்ப்பாணம்,மே1

கரவெட்டி பிரதேச சபை எல்லைக்குள் இனிவரும் நாள்களில் தரம் பிரித்த குப்பைகள் சேகரிக்கப்பட்டு திண்ம கழிவகற்றல் சிறப்பாக செயற்படுத்தப்படும் என்று சபையில் தீர்மானிக்கப்பட்டது.

திண்ம கழிவகற்றல் தொடர்பாக கரவெட்டி பிரதேச சபை மற்றும் செயலகத்துக்கு உட்பட்ட வர்த்தகர்கள், பொது மக்கள், சுகாதார பிரிவினர்,பிரதேச செயலர் ஆகியோருக்கு இடையிலான சிறப்புக் கலந்துரையாடல் பிரதேச சபை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

கிராமப் புறங்களில் இந்த கழிவகற்றல் முறைமை ஓரளவு ஒழுங்கு முறையில் இருந்தாலும் நகரை அண்டிய பகுதிகளில் பெரிய பிரச்சினையாக உள்ளது. தரம் பிரிக்கப்பட்ட குப்பைகளே சபையால் அகற்றப்படும்.

ஒவ்வொருவரும் குப்பைகளை தரம் பிரித்து வைத்திருத்தல் வேண்டும்.

வர்த்தக நிலையங்கள் இந்த விடயத்தில் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.காலையில் குப்பை அள்ளும் இரண்டு வாகனங்கள் 9 மணி தொடக்கம் 10 வரையுள்ள நேர பகுதிக்குள் ஒலி எழுப்பியவாறு நகருக்குள்வரும். வர்த்தகர்கள் தாம் பிரித்து சேகரித்து வைத்துள்ள குப்பைகளை அதில் போட வேண்டும்.

வெளி பிரதேத்தில் இருந்து வருபவர்கள் குப்பைகளை நகரின் முதன்மை இடங்களில் வீசி விட்டு செல்கின்றனர்.இவை கண் காணிக்கப்பட வேண்டும்.,இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு சுற்று சூழல் பாதுகாப்பு பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

குப்பைகள் கொட்டப்படும் இடங்களுக்கும் மறைகாணி பொருத்தப்படவுள்ளது. கரவெட்டி பிரதேச சபை எல்லைக்குள் வினைத்திறனான திண்ம கழிவகற்றும் செயற்பாட்டுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7,26)

## குடும்ப அட்டைகள் மீளாய்வு

சாவகச்சேரி, மே1

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஜே/301 கிராம அலுவலகர் பிரிவில் வதியும் குடும்பங்களின் குடும்ப அட்டைகள் மீளாய்வு பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் நாளை முற்பகல் 9 மணி தொடக்கம் இடம் பெறும்.

குடியிருப்பாளர் தமது இருப்பை உறுதிப்படுத்தும் வகையில் நேரில் வருகை தருமாறு பிரிவு கிராம அலுவலர் க.கார்த்திகேயன் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் கோயிற்குடியிருப்பு கடல் மற்றும் தரை ஆகிய வட்டாரங்களை உள்ளடக்கிய கோயிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் ஆயிரத்து 900க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இரு வட்டாரங்களுக்கும் ஒருகிராமஅலுவலர்பிரிவே இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)



## யாழ். நகரப் பகுதிகளுக்கு ஆளுநர் திடீர் பயணம்

யாழ்ப்பாணம் பெரியகடை பகுதியில் அமைந்துள்ள முஹிய்தீன் ஜும்மா பள்ளி வாசல், நாவாந்துறை மற்றும் ஐந்து சந்திப் பகுதிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்று முன்தினம் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

பள்ளிவாசலுக்கு பயணம் செய்த ஆளுநரை பள்ளிவாசலின் முதன்மை இமாம் மௌழவி ஏ.எம். றலீம் வரவேற்றார். இதன்போது அங்கிருந்த முஸ்லிம் சமூகத்துடன் சுமூகமான கலந்துரையாடலில் ஆளுநர் ஈடுபட்டதுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார். நாட்டில் தலைதூக்கியுள்ள பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு முஸ்லிம் சமூகத்தின் முழுமையான ஒத்துழைப்பும், ஆதரவும் பாதுகாப்பு தரப்பினருக்கு இவ்வேளையில் அவசியம் என்று ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை யாழ்ப்பாணம் நாவாந்துறை மற்றும் ஐந்து சந்திப் பகுதிகளுக்கும் பயணத்தை மேற்கொண்டார். அங்குள்ள வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். (ஐ-7)



யாழ்ப்பாணம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கோலம் போடுதல் போட்டி கடந்த சனிக்கிழமை அரியாலை மயிலு மீனாட்சி மண்டபத்தில் நடைபெற்றது. (ஐ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம்,மே 1

புலோலி தெற்கு சந்தா தோட்டம் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் இடம்பெற்றன.

இதன்போது தலைவராக ர.வினோதீஸ் ,உப தலைவராக ப.பகீதரன், செயலராக அ.கிருபாகர சூரியன், உப செயலராக செல்வி.ந.வினோதினி, பொருளாளராக சா.கீர்த்தனன் இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக ந.சசிதரன் , செல்வி. ம.மயூரிக்கா ,ச.சுரோஸ், சு. சுதர்சன் , நா. தவகுலரட்ணம், ர.கீர்த்தனன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)



## இராணுவ பாவனையிலிருந்த கலாசார மண்டபம் ஒப்படைப்பு

வவுனியா,மே1
வவுனியா குடியிருப்பில் 25 வருடங்களாக இராணுவ கட்டுப்பாட்டிலிருந்த கலாசார மண்டபம் சீரமைப்பு செய்யப்பட்டு வவுனியா மாவட்ட செயலரிடம் நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.
1994 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ராஜாகுகனேஸ்வரனின் பன்முகப்பட்டுத்தப்பட்ட நிதி மற்றும் அரசின் ஏனைய நிதிப்பங்களிப்புடன் அமைக்கப்பட்ட கலாசார மண்டபம் திறக்கப்பட இருந்த நிலையில் அரசியல் போட்டியால் இடைநிறுத்தப்பட்டது. பாதுகாப்பு காரணங்களை அடிப்படையாக கொண்டு இராணுவத்தினர் ஆக்கிரமித்து இராணுவ முகாம் அமைத்திருந்தனர்.
மண்டபத்தை 2017ஆம் ஆண்டு சமாதான சூழலை கருத்தில் கொண்டு இராணுவ முகாமை அகற்றி பிரதேச செயலர் கா. உதயராசாவிடம் கையளித்திருந்தனர்.
மண்டபம் பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்திருந்தமையால் மக்கள் பயன்பாட்டுக்கு விடுவதில் பெரும் இடையூறுகள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-110)

# கரந்தாய்க் காணி ஆவணங்களை 14ஆம் திகதி சமர்ப்பிக்கவேண்டும்

### தென்னைப் பயிர்ச் செய்கைச் சபைக்கு கிளிநொச்சி நீதிமன்று உத்தரவு

*கிளிநொச்சி, மே 1*
*கிளிநொச்சி கரந்தாய் காணித்துண்டுகள் தம்முடையவை என்று தென்னைப் பயிர்ச் செய்கை சபையினர் கூறிவருவதால், அதற்கான ஆவணங்களை நீதிமன்றில் அடுத்த தவணை சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு கிளிநொச்சி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.*

இந்த வழக்கு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கரந்தாய்க் காணிகள் தம்முடையவை என்று கூறும் மக்கள் அதற்கான ஆவணங்களை நீதிமன்றில் சமர்ப்பித்தனர். தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினரோ, குறித்த காணிகள் தம்முடையவை என்று இன்றும் கூறுகின்றனர். அதனால் அதற்கான ஆவணங்களை அடுத்த தவணை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது நீதிமன்று. வழக்கு எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

**பின்னணி**
கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கரந்தாய் கிராமத்தில், போரின் பின்னர் 2010ஆம் ஆண்டில் மக்கள் குடியமர்ந்தனர். அந்த மக்களைப் பொலிஸாரின் உதவியுடன் சில வருடங்களுக்கு முன்னர் விரட்டியடித்த தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையினர், வேலிகளை அமைத்து தென்னங்கன்றுகளை நட்டுப் பராமரித்து வருகின்றனர். ஆனால் இந்தக் காணிகள் தம்முடையவை என்று மக்கள் கூறுகின்றனர். அதற்கு ஆதாரமாக காணி உறுதிகளையும் அவர்கள் கொண்டுள்ளனர். ஆனாலும் காணி உரிமம் யாருக்கு என்பது பற்றிய இழுபறி இத்தனை வருடங்களாக தீர்வின்றி நீடித்துக்கொண்டிருக்கின்றது.
2015இல் மக்களை பளைப் பொலிஸாரின் உதவியுடன் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினர் விரட்டியடித்த போது, மக்களின் குடிசைகளைத் தரைமட்டமாக்கியிருந்தனர். எதிர்ப்புத் தெரிவித்த பலரைப் பளை பொலிஸார் கைது செய்திருந்தனர். கிளிநொச்சி நீதி மன்றில் முற்படுத்தப்பட்டனர். குறித்த காணிகள் மக்களுடைய காணிகளாக இருந்தால் அதற்கான ஆவணங்களை மன்றில் சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்ட நீதிமன்று கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்திருந்தது.
இதுதவிர, காணிப் பிரச்சினை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. விசாரணையில் அவை மக்களின் காணிகள் என்றும் இரு வாரங்களில் அவற்றை மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் உரிய அதிகாரிகளுக்கு கடந்த வருடம் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தும் எதுவும் நடக்கவில்லை. காணிப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காததால், தமக்கான தீர்வைத் தாமே பெற்றுக்கொள்ளும் நோக்கில், மக்கள் கடந்த மாதம் குறித்த காணிகளுக்குள் உள்நுழைந்து தற்காலிக கொட்டில்களை அமைத்து தங்கியிருந்தனர்.
தமது காணிக்குள் மக்கள் அத்துமீறி நுழைந்து தங்கியுள்ளனர் என்று தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினர் பளைப்பொலிஸாரிடம் முறையிட்டனர். பளைப் பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலகத்தில் கூட்டம் நடைபெற்றது. காணிகள் மக்களுடையவை என்று அதில் அதிகாரிகள் தெரிவித்தனர்.
மக்கள் ஆவணங்களை வைத்திருக்கின்றனர், அவர்களைக் கட்டாயமாக வெளியேற்ற முடியாது என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்திருந்தார். இந்தநிலையில், பளைப் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்து மக்களை சில வாரங்களுக்கு முன்னர் அங்கிருந்து வெளியேற்றியிருந்தனர். (த-6)

## வெள்ள இடர் அழிவுக்கான காசோலைகள் வழங்கல்

யாழ்ப்பாணம்,மே 1
ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் வெள்ள இடர் அழிவுக்காக 2 கோடியே 88 இலட்சத்து 60 ஆயிரத்து 60 ரூபா பெறுமதியான காசோலைகள் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன என ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி அலுவலர் ம.சற்குணநேசன் தெரிவித்தார்.
2018ஆம் ஆண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டு கால போக நடவடிக்கையில் இடம்பெற்ற பெரும் வெள்ளப்பெருக்கு காரணமாகப் பாதிக்கப்பட்ட வயல்நிலங்கள், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அலுவலர் கமநல சேவை அலுவலர்கள், கமக்கார அமைப்பு பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட வயல் உரிமையாளர்கள் சகிதம் பார்வையிடப்பட்டு அழிவு மதிப்பீடுகள் நிறைவுறுத்தப்பட்டது.
ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்களின் கீழான மன்னாகண்டல், முத்துஐயன்கட்டுகுளம், கனகரத்தினபுரம், பேராறு, பண்டாரவன்னி, கற்சிலைமடு, முத்துவிநாயகர்புரம், ஒட்டுசுட்டான், காதலியார்சம்மளங்குளம், தட்டயர்மலை, கணேசபுரம், வித்தியாபுரம், கருவேலன் கண்டல், புளியங்குளம் கூழாமுறிப்பு, ஒதியமலை, பெரியகுளம், தண்டுவான் பெரியஇத்திமடு, பழம்பாசி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குரிய 33 கமக்கார அமைப்புக்களின் கீழான 965 விவசாயிகளுக்கான காசோலைகள் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் வைத்து மாவட்ட விவசாய பணிப்பாளர் தலைமையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.
மேலும் ஒட்டுசுட்டான் கமநல சேவை பரப்புக்கு உட்பட்ட வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட 20 விவசாயிகளுக்கான காசோலைகள் மாவட்ட செயலகத்தில் வைத்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் நேரடியாக ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளதாகவும், பயிரழிவால் பாதிப்புக்குள்ளாகி அழிவு கணிப்பிடப்பட்ட ஏனைய விவசாயிகளுக்கான காசோலைகளும் விரைவில் வழங்கி வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (க)



## மன்னாரில் 12 பேர் கைது

மன்னார்,மே 1
மன்னார் புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேடுதல்களின் போது மௌலவி உட்பட 12 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.
நேற்று முன்தினம் காலை தொடக்கம் மாலை வரை இடம் பெற்ற இராணுவத்தின் சுற்றிவளைப்பின் போது புதுக்குடியிருப்பு பகுதியில் வைத்து 12 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மௌலவி உள்ளிட்ட 12 சந்தேக நபர்களும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.
நேற்றைய தினம் காலை முதல் மன்னாரின் பல்வேறு இடங்களில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-56)

## நாடாளுமன்ற உறுப்பினரால் 90 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

மன்னார், மே 1
நானாட்டான் பிரதேச அபிவிருத்திக்கு என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகனால் 90 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர்களின் துரித அபிவிருத்தித் திட்ட நிதியில் நானாட்டான் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்சி. சிவமோகனிடமிருந்து 90 இலட்சம் ரூபா நிதி கிடைத்துள்ளதாக நானாட்டான் பிரதேசசபை தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்.
இந்த நிதியில் முருங்கன் பிரதே சத்தில் வார சந்தை மற்றும் ஆலயங்களின் உள்ளக வீதிகள், விளையாட்டு மைதானங்கள் போன்றவை அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-213)

## வவுனியா வீரபுரம் பகுதியில் டெட்டனேற்றர்கள் மீட்பு

வவுனியா,மே 1
வவுனியா வீரபுரம் பகுதியில் 24 'டெட்டனேற்றர் குச்சிகள்' இராணுவத்தால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன. சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் வீதிக்கரையில் உள்ள பற்றை ஒன்றில் மறைத்துவைக்கபட்டிருந்த நிலையில் காணப்பட்ட 24 டெட்டனேற்றர் குச்சிகளையும், அதனுடன் இணைந்த வயர்களையும்மீட்டுள்ளனர்.
கொழும்பு மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து செட்டிகுளத்துக்குட்பட்ட பல பகுதிகளில் கடுமையான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
வீரபுரம் பகுதியிலும் இராணுவத்தால் சோதனைச் சாவடி ஒன்று அமைக்கப்பட்டு பேருந்துகள், ஏனைய வாகனங்களில் பயணம் செய்யும் பொதுமக்கள் முழுமையான சோதனை செய்யபட்டபின்னரே அனுமதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-110)

## இறுதிச் சடங்குகளுக்கு இராணுவப் பாதுகாப்பு

கிளிநொச்சி,மே 1
கிளிநொச்சி நகரில் உயிரிழந்தவரின் இறுதி வழிபாடு நேற்று கிளிநொச்சி புனித திரேசாள் தேவாலயத்தில் பலத்த பாதுகாப்பின் மத்தியிலேயே இடம்பெற்றது.
உயிரிழந்தவரின் இறுதி வழிபாடுகளை நடத்துவதிலும் கிளிநொச்சி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
அண்மையில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதலின் எதிரொலியாக தேவாலயங்களில் இவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



# அனைத்து தொழிலாளருக்கும் இன்று விடுமுறை வழங்குமாறு கோரிக்கை

வவுனியா,மே 1

வவுனியா மாவட்டத்தில் இன்று சகல வர்த்தக நிலையங்களும், நிறுவனங்களும் தொழிலாளிகளுக்கு வழமை போன்று விடுமுறை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனச் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பு, வவுனியா வர்த்தகர் சங்கம் ஆகியன கோரிக்கை விடுத்துள்ளன.

வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இன்று மே தினமான உலக தொழிலாளர்கள் தினத்தில் விடுமுறை வழங்கி தொழிலாளர்களின் உரிமையை வென்றெடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனியா வர்த்தகர் சங்கம் தொழிலாளர்கள் தினத்தை முன்னிட்டு அழைப்பு விடுத்துள்ளது.

அதே போல் உலக தொழிலாளிகளின் புரட்சிகர நாளில் தொழிலாளிகள், விவசாயிகள், மீனவர்கள் ஒன்றிணைந்து மக்கள் அதிகாரத்தைக் கட்டியெழுப்ப அணித்திரளுமாறு சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பு தமது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. (க)

## தடுப்புக்காவல் கொலை வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 1

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபரைத் தடுப்புக்காவலில் வைத்து சித்திரவதை செய்து கொன்றனர் என்ற வழக்கில், நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக பண்டார உள்ளிட்ட 5 பொலிஸாருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜூன் 14ஆம் திகதிக்கு யாழ்ப்பாண மேல் நீதிமன்று ஒத்தி வைத்தது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்கள் மன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை எதிர்வரும் ஜூன் 14ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக யாழ்ப்பாண மேல் நீதிமன்று உத்தரவிட்டது.

குறித்த வழக்கிலுள்ள எதிரிகள் ஏற்கனவே சித்திரவதை புரிந்தனர் என்ற குற்றத்துக்காகத் தலா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அநுராதபுரம் சிறைச்சாலையில் அனுபவித்து வருகின்றனர்.

**பின்னணி**

சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பகுதியில் 2011ஆம் ஆண்டு சுமணன் என்பவரைப் பொலிஸார் அழைத்துச் சென்று சித்திரவதை செய்து கொன்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கே இது. அவரைச் சித்திரவதை செய்த குற்றத்துக்காக இவர்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்றனர். (க-37)

## ஈருருளி வழங்கல்

முல்லைத்தீவு,மே 1

புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பிலிருந்து, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனால் பாடசாலை மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

ரவிகரனின் மக்கள்தொடர்பகத்தில் ஈருருளிக்காக விண்ணப்பித்திருந்த மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட இருவருக்கே இவ்வாறு இரு ஈருருளிகள் கடந்த வாரம் வழங்கிவைக்கப்பட்டன. (க-222)



## ஏ-9 வீதியில் ஏற்பட்ட பதற்றத்தால் போக்குவரத்துக்கள் முடங்கின

வவுனியா ஏ -9 வீதியில் சாந்தசோலை சந்திக்கு அருகாமையில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் அநாதரவாகக் கிடந்த பயணப் பொதியால் பெரும் பதற்றம் ஏற்பட்டதோடு வாகன போக்குவரத்துக்களும் அரை மணி நேரம் தடைப்பட்டிருந்தன.

பேருந்து தரிப்பிடத்தில் பயணப் பொதியொன்று உரிமை கோரப்படாத நிலையில் நீண்ட நேரமாக காணப்பட்டமையால் இராணுவத்தினருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இராணுவத்தினர் ஏ-9 வீதியில் போக்குவரத்தை தடை செய்ததோடு பாதுகாப்பையும் பலப்படுத்தி பொதியைப் பரிசோதனை செய்தனர்.

பயணப் பொதியினுள் ஆபத்தான பொருள்கள் ஏதும் இல்லை என தெரிய வந்த நிலையில் ஓமந்தை பகுதியில் இருந்து வருகை தந்த இளைஞன் ஒருவர் பொதி தன்னுடையது எனவும் பயணத்துக்காக காத்திருந்தபோது பேருந்தைத் தவறவிட்டமையால் தனது குடும்பத்தினரை பேருந்தில் ஏற்றுவதற்காக உந்துருளியில் தூரத்திச் சென்ற சமயம் குறித்த பொதியை இங்கு வைத்துச் சென்றதாக இராணுவத்தினரிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு அவரது மனைவியும் மகளும் வருகைதந்த நிலையில் அவர்கள் தொடர்பாக இராணுவத்தினர் தகவல்களை பெற்றதன் பின்னர் அங்கிருந்து செல்ல அனுமதித்திருந்தனர். (க)

## மேதினக் கூட்டங்கள் இடைநிறுத்தம்

வவுனியா,மே.1.

இன்றையதினம் பன்னாட்டு தொழிலாளர் தினத்தை முன்னிட்டு வுனியாவில் இடம்பெறவிருந்த மேதினக் கூட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து, நாட்டில் அவசர கால நிலை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமையால், பொது மக்களின் பாதுகாப்பு கருதி மேதினக் கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களை இம்முறை நடத்தவேண்டாம் என அரசு அறிவித்திருந்தது.

அதற்கமைய நாட்டின் முதன்மைக் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் மேதினக் கூட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இன்றையதினம் வவுனியாவில் இடம்பெறவிருந்த அரசியல்கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் மேதினக் கூட்டங்களும், ஊர்வலங்களும் இடைநிறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க-110)

## வணிக நிலையங்களை பதிவு செய்யும் நடவடிக்கை

முல்லைத்தீவு,மே 1

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஆள்பதிவுகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் மற்றும் பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள்.

நேற்று முள்ளியவளை நீராவிப்பிட்டி, ஹிச்சிராபுரம் முதன்மை வீதிகளில் உள்ள வணிக நிலையங்களில் பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளார்கள்.

இதேவேளை தண்ணீரூற்று முல்லைத்தீவு முதன்மை வீதியில் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு வீதியால் செல்லும் வாகனங்கள் சோதனையிடப்படுவதுடன், சந்தேகத்துக்கு இடமானவர்களை மறித்து அடையாளம் உறுதிப்படுத்தும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (க-ரி3)



## வவுனியா நடைபாதை வியாபாரிகளுக்கு தடை

வவுனியா,மே 1

வவுனியா நகரின் முக்கியபகுதிகளில் நடைபாதைகளில் வியாபாரம் மேற்கொள்ள வேண்டாம் என வவுனியா நகரசபை அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இலுப்பையடி, மற்றும் சந்தைச் சுற்றுவட்ட வீதி ஆகியபகுதிகளில் நடைபாதை வியாபாரம் மேற்கொள்ளும் வர்த்தகர்கள் நாட்டின் அசம்பாவித சூழ்நிலை கருதி வியாபார நடவடிக்கைகளை நிறுத்துமாறு வவுனியா நகரசபையால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தபோது,

அண்மையில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து நாட்டில் அசாதாரண நிலை ஏற்பட்டுள்ளது.

நகரின் முக்கிய பகுதிகளில் நடைபாதை வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதால் அதிக நெரிசலான நிலை ஏற்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக பொலிஸாரும் எமக்கு தெரியப்படுத்தியிருந்தனர். நாட்டின் தற்போதைய நிலை சீராகும் வரைக்கும் நடைபாதை வியாபாரிகள் முக்கிய பகுதிகளில் தரித்து நின்று வியாபாரநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தல் விடுத்துள்ளோம்.

இது அனைவரது பாதுகாப்பு கருதி எடுக்கப்பட்ட முடிவு என்றும் நாட்டு நிலைமை சீரானதன் பின்பு நடைபாதை வியாபாரிகள் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிலையில் நேற்றைய தினம் குறித்த பகுதியில் அநேகமான நடைபாதை வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. (க-110)



## பேருந்துகள் மோதிவிபத்து போக்குவரத்துக்குத் தடை

வவுனியா,மே 1

வவுனியா குழுமாட்டுசந்தியில் நேற்றுக் காலை 9.15 மணியளவில் இரு தனியார் பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

வாரிக்குட்டியூர் பகுதியிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து பயணிகளை ஏற்றுவதற்காக குழுமாட்டுசந்தி பகுதியிலுள்ள பயணிகள் தரிப்பிடத்தில் தரித்து நின்ற சமயத்தில், சுந்தரபுரத்திலிருந்து வந்த தனியார் பேருந்து தரித்து நின்ற பேருந்தை முந்திச்செல்ல முற்பட்டபோது, தரித்து நின்ற பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை என்பதுடன் இரு பேருந்துகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. சம்பவ இடத்துக்கு விரைந்த போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க)

## வாள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் கைது

வவுனியா,மே 1

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் வாள்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிளாஸ்ரிக் குளாய் ஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டுவாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் அடிப்படையில் 37 வயதான இளைஞர் கைதுசெய்யப்பட்டு வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன், நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். குண்டு வெடிப்பு சம்பவத்துக்குப் பின்னர் வவுனியாவில் பொலிஸார் இராணுவம், முப்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 29 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-110)

# விடத்தல்தீவில் கடும் சோதனை வெடி பொருளுடன் 4 பேர் கைது

*மன்னார், மே 1*

**அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விடத்தல் தீவு கிராமத்தில் நேற்றுக் காலை 6 மணி முதல் முப்படையினர் இணைந்து திடீர் சுற்றிவளைப்பு மற்றும் சோதனைகளில் விடத்தல் தீவு பகுதியில் நேற்று முன்தினம் மாலை டெட்டனேட்டர் குச்சிகளுடன் 4 பேர்கைது செய்யப்பட்டனர்.**



வீடுகளுக்குச் சென்ற படையினர் வீடுகளை முழுமையாகச் சோதனையிட்டனர்.வீட்டில் உள்ளவர்களின் விவரங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேலும் விடத்தல் தீவு கிராமத்தில் உள்ள முதன்மை வீதிகளில் வீதித்தடை கள் அமைக்கப்பட்டு வாகனங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட விடத்தல் தீவைச் சேர்ந்த 4 பேர் இராணுவத்தினரால் அடம்பன் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அடம்பன் பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் 4 சந்தேக நபர்களையும் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் முதன்மை பாலத்தினூடாக உள்வரும்,வெளிச்செல்லும் அனைத்து வாகனங்களும் கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. மக்களின் அடையாள அட்டைகளும் பரிசோதனைக்கு ற்உபடுத்தப்பட்டு வருகின்றன.

மன்னார் நகரில் உள்ள பல்வேறு கிராமங்களிலும் படையினர் நேற்றுக் காலை முதல் மதியம் வரை வீடு வீடாகச் சென்று கடும் சோதனைகளையும், தேடுதல்களையும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56)

## தேர், பெரகரா நிகழ்வுகள் அச்சத்தால் நிறுத்தப்பட்டன

பதுளை, மே 1

நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு பதுளையில் இந்தமாதம் நடைபெறவிருந்த முக்கிய விழாக்களும், சமய உற்சவங்களும், நிகழ்வுகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பதுளை சிறிகாளியம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவங்கள், முத்தேர் பவனி ஆகியன்வும் நிறுத்தப்பட்டுள்ளன. எதிர்வரும் 5ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வுகள் நிறுத்தப்பட்டுள்ளன. பதுளை முத்தியங்கனை .ரஜமகாவிகாரை பெரஹரா பவனியும் நிறுத்தப்பட்டுள்ளது.

ஆலயங்கள், விகாரைகள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் ஆகியவற்றில் வழமையான பூசைகள், ஆராதனைகள், வழிபாடுகள், தொழுகைகள் தங்கு தடைகளின்றி நடைபெறும். இதற்கான பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு அரசு மறுவாழ்வு வழங்கவேண்டும்!

*பதுளை மறைமாவட்ட பேராயர் தெரிவிக்கிறார்*

கொழும்பு, மே 1

குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து, கைதுசெய்து சட்டத்தின் முன்னால் நிறுத்தி மறுவாழ்வு வழங்க அரசு முன்வரவேண்டும். இதுவே காலத்தின் தேவை.

இவ்வாறு பதுளை மறைமாவட்ட பேராயர் ஜே. வின்சன்ட்ஸ் பெர்ணாந்து ஆண்டகை தெரிவித்தார்.

பதுளை ஆயர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கத்தோலிக்கர்களுக்கு மட்டுமன்றி, சமாதானம் மற்றும் மனிதநேயம் நாட்டுக்கும் முழு உலக நாடுகளுக்கும் தேவை. நாம் செய்ய வேண்டியது இயேசு கிறிஸ்துவின் போதனைக்கமையவே. அதைவிடுத்து சமயத்தை முன்னிலைப்படுத்தி எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வது பெரும் தவறு. இயேசு கிறிஸ்து தவறு இழைத்தவர்களுக்கும் மன்னிப்பு வழங்கியதைப் போன்று, நாமும் அதன்படி நடக்கவேண்டும். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றுவதே சிறப்பானது.

தேவாலயங்களில் ஏற்பட்ட சம்பவங்களையிட்டு, எவரையும் சந்தேகம் கொள்ளாமல், கற்பனை செய்யாமல், வீண் கருத்துமோதல்களை ஏற்படுத்தாமல் அமைதியைப் பேணவேண்டும். இந்தத் தாக்குதல் சம்பவங்களை அரசியல்வாதிகளோ, சமயவாதிகளோ தத்தமது அரசியல், சமயம் ஆகியவற்றின் இலாபத்தைப் பெறமுயற்சிக்க வேண்டாம். அனைவரும் மனியநேயம், சகோதரத்துவம் ஆகியவற்றை முன்னிலை ப்படுத்தி அனைவரும் செயலாற்றவேண்டும் - என்றார். (த)

## ஆயுதங்கள், ரூ.ஒன்றரைக்கோடி வீடுகளின் சோதனையில் மீட்பு

*6 பேர் கைதாகி விசாரணை*

பதுளை, மே 1

பதுளை, ஏறாவூர், தியத்தலாவ, வெலிமடை ஆகிய இடங்களில் நடத்திய சோதனையில், வாள்கள், ஒன்றரைக்கோடி ரூபா பணம், துப்பாக்கி, அதற்கான ரவைகள், உந்துருளி என்பன மீட்கப்பட்டுள்ளன. ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளையில் வீடொன்றைச் சோதனையிட்டபோது நீளமான இரண்டு வாள்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் வீட்டு உரிமையாளரான முஸ்லிம் இளைஞர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். தமக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து பதுளை பிட்டியவில் வீடொன்றில் நடத்திய சுற்றிவளைப்பில் வாள்கள் மீட்கப்பட்டன என்று பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

**விடுதியிலிருந்த இளைஞர்கள் கைது**

'எல்ல' விடுதியில் தங்கியிருந்த ஏறாவூரைச் சேர்ந்த இரு முஸ்லிம் இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களின் உந்துருளியும் மீட்கப்பட்டது.

தமக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து விடுதியை முற்றுகையிட்டு, இருவரையும் கைதுசெய்தோம் என்றுகூறி இராணுவத்தினர் அவர்களை எல்ல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

**தியத்தலாவையில் துப்பாக்கி, ரவைகள் மீட்பு**

தியத்தலாவ தொடருந்து நிலைய பாதையின் இரு மருங்கிலுமுள்ள வீடுகள் சோதனையிடப்பட்டன. வீடொன்றிலிருந்து ரி. 56 ரகதுப்பாக்கியும் அதற்குரிய ரவைகள் 12 மீட்கப்பட்டன.

பொலிஸார், இராணுவத்தினர், வானூர்திப் படையினர் கூட்டாக நடத்திய தேடுதலில் அவை மீட்கப்பட்டன. அவை இருந்த வீட்டு உரிமையாளரான முஸ்லிம் நபர் ஒருவர் கைதானார்.

**பொரலந்தையில் ரூ.ஒன்றரைக் கோடி மீட்பு**

வெலிமடைப் பகுதியின் 'பொரலந்தை' இடத்திலுள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்துச் சோதனையிடுகையில், வீட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒன்றரைக் கோடி ரூபா பணமும் மற்றைய வீட்டில் குண்டை வெடிக்கவைக்கப் பயன்படும் நூல் என்பன மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வெலிமடைப் பொலிஸார், இராணுவத்தினர், கூட்டாக மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே பணம் மீட்கப் பட்டது. புதிய ஐயாயிரம் ரூபா கட்டுக்களாக இருந்தன. பணம் எங்கிருந்து கிடைத்தது என்பதை வீட்டு உரிமையாளரான முகம்மதுஅப்துல் ரகீம் என்ற 42 வயதுடையவர் கூறவில்லை. இரண்டு வீடுகளின் உரிமையாளர்களும் கைதுசெய்யப்பட்டன. விசாரணை தொடர்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். பல்வேறு இடங்களிலும் முப்படையினரும் பொலிஸாரும் தேடுதல் நடத்தி வருகின்றனர். தமக்குக் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையிலும் அவர்கள் குறிப்பிடப்படும் இடங்களில் சோதனையில் ஈடுபடுகின்றனர். இத்தகைய பொருள்களை மீட்கின்றனர். (த)

## காயமடைந்தவர்களுக்கு ஆலயத்தினர் பணஉதவி



மட்டக்களப்பு, மே 1

மட்டக்களப்பு சீயோன் தேவாலய குண்டுத் தாக்குதலில் காயமடைந்தவர்களின் மருத்துவச் செலவுகளுக்காக மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அம்மன் ஆலயத்தினர் உதவித் தொகைகள் வழங்கியுள்ளனர். மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் வைத்து நேற்றுமுன்தினம் இவை வழங்கப்பட்டது. மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் மற்றும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அம்மன் ஆலய நிர்வாகிகள் உரியவர்களிடம் உதவித் தொகைகளை வழங்கினர். (த)

## பதுளை வீடொன்றிலிருந்து இராணுவச் சீருடைகள் மீட்பு

*பாதுகாப்புத் தரப்பு எச்சரித்திருந்த நிலையில் இவை சிக்கியமையால் படையினர் அதிர்ச்சி*

பதுளை, மே 1

பதுளை லுணுகலைப் பகுதியில் வீடொன்றிலிருந்து பெருந்தொகை இராணுவசீருடைகள், புடவைகள் மற்றும் 18 நுழைவிசைவுப் புத்தகங்கள் (பாஸ்போட்கள்), தேசிய அடையாள அட்டைகள் 7 என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ சீருடையில் தாக்குதலாளிகள் தாக்குதல் நடத்தலாம் என்று பாதுகாப்புத் துறை எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில் அதை நிரூபிக்கும் வகையில் இராணுவச் சீருடைகள் மீட்கப்பட்டுள்ளன.

தமக்குக் கிடைத்த இரகசிய தக்வலுக்கமைய பட்டவத்தை பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள குறித்த வீட்டில் நேற்று நடத்திய சோதனையில் அவற்றைக் கைப்பற்றினோம் என்று இராணுவத்தினர் கூறியுள்ளனர். அந்த வீட்டு உரிமையாளரான சுலைமான் சிபாரக் ஹலி (வயது 41) கைதுசெய்யப்பட்டார்.

மீட்கப்பட்ட பொருள்களையும் சந்தேகநபரையும் இராணுவத்தினர் லுணுகலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மடுல்சீமை மற்றும் லுணுகலை ஆகிய பகுதிகளில், இராணுவத்தினர் தொடர் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பதுளை, பசறை, லுணுகலை, மடுல்சீமை ஆகிய பகுதிகளில் மக்கள் இயல்புநிலைக்குத் திரும்பியுள்ளனர். பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். (த)



## கல்முனையில் தோட்டாக்கள் மீட்கப்பட்டன

அம்பாறை, மே 1

கல்முனையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் சொட்கன் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் துப்பாக்கி தோட்டாக்களை மீட்டுள்ளனர்.

கல்முனை மாநகர சபையினர் குப்பைகளை அள்ளி வாகனத்தில் கொட்டும்போது அவற்றைக் கண்டு இராணுவத்தினருக்கு அறிவித்தனர். அவை மீட்கப்பட்டன.

நேற்றுமுற்பகல் காலை அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்முனை குடி கடற்கரை வீதி தொடக்கம் சாய்ந்தமருது வரையான பகுதிகளில் இராணுவம் பொலிஸார் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (த)

# தாக்குதல்களை முன்னரே அறிந்திருந்தார் மைத்திரி

## கசிகிறது புதிய தகவல்

கொழும்பு, மே 1

ஈஸ்ரர் நாளன்று நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக, முன்கூட்டியே எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு தெரியும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. கொழும்பு ஆங்கில ஊடகம் இந்தப் புதிய தகவலை வெளியிட்டுள்ளது.

அரச புலனாய்வு சேவை பணிப்பாளர், மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன, குறைந்தது மூன்று சந்தர்ப்பங்களில் அரச தலைவர் மைத்திரிபாலவிடம் விரிவான அறிக்கையை வழங்கினார். அதிகாரபூர்வமான மற்றும் பல ஆதாரங்களை அவர் அறிந்திருந்திருந்தார் என்று பாதுகாப்பு அமைச்சின் வட்டாரங்கள் உறுதிப்படுத்தின. அவ்வாறான அறிக்கைகளில் ஒன்று, புத்தாண்டு விடுமுறைக்கு முன்னதாக, ஏப்ரல் 11ஆம் திகதி வழங்கப்பட்டது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் உறுதி செய்தன.

இரண்டாவது அறிக்கை, ஐந்து நாள்களுக்குப் பின்னர், அரச புலனாய்வுச் சேவைத் தலைவரால் வழங்கப்பட்டது. மூன்றாவது அறிக்கை, தாக்குதல் நடப்பதற்கு முன்னதாக, ஏப்ரல் 20ஆம் திகதி மாலை பாதுகாப்பு அமைச்சுக்கு, வழங்கப்பட்டது.

ஏப்ரல் 20ஆம் திகதி அறிக்கை வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகளிடம் இருந்து குறிப்பாக இந்திய புலனாய்வு அமைப்பிடம் இருந்து கிடைத்திருந்தது.

கடைசிநேர அறிக்கைகள் கிடைத்தபோது, புலனாய்வுஅறிக்கைகள்தொடர்பாகபொலிஸை எச்சரிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடம், நிலந்த ஜயவர்த்தன கோரியிருந்தார். இந்த எச்சரிக்கைகள் பொலிஸ்மா அதிபருக்கு பரிமாறப்பட்டதாக அறியப்படுகிறது. குண்டுத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தேவாலயங்கள் குறிவைக்கப்படலாம் என்று புலனாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட போதும், அந்த அச்சுறுத்தல்கள் தொடர்பாக தேவாலயங்களை எச்சரிக்க பொலிஸ்மா அதிபர் தவறிவிட்டார்.

அரச தலைவருக்கு நெருக்கமானவர் என்று நம்பப்படும், அரச புலனாய்வுச் சேவையின் தலைவர் நிலந்த ஜயவர்த்தன சிங்கப்பூரில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியிருந்தார்.

குண்டுத் தாக்குதல் நடப்பதற்கு சில மணிநேரம் முன்னதாக, அரச தலைவருக்குத் தெரியப்படுத்தி, நிலந்த ஜயவர்த்தன எச்சரிக்கை செய்திருந்தார்.

புலனாய்வுத் தலைவர்கள், குறிப்பாக அரச புலனாய்வுத் தலைவர் ஏனைய நிர்வாகிகள் மற்றும் அமைச்சின் ஏனைய முகவர் அமைப்புகளுக்கு அறிக்கைகளை வழங்குவதற்கு முன்னர், முப்படைகளின் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அரச தலைவருக்கு அனுப்புவது வழக்கம் என்று தனது பெயரை வெளியிட விரும்பாத பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர், தெரிவித்தார்.

புலனாய்வு அமைப்பிடம் இருந்து கிடைத்த உயர்மட்ட எச்சரிக்கைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக, அரச தலைவரிடமிருந்து முப்படையினர் உள்ளிட்ட உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எந்த உத்தரவும் கிடைக்கவில்லை.

புலனாய்வு அறிக்கைகள் தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என்றும், குண்டுகள் வெடித்த பின்னர் சமூக ஊடகங்களில் பார்த்தே அதனைத் தெரிந்து கொண்டதாகவும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

அச்சுறுத்தல் தொடர்பாக பாதுகாப்பு செயலரோ, பொலிஸ் மா அதிபரோ தமக்கு தெரியப்படுத்தவில்லை என்று அரச தலைவர் குற்றம் சாட்டியிருந்தார். தமது பொறுப்பை அவர்கள் நிறைவேற்றவில்லை என்று பதவி விலகுமாறும் அறிவுறுத்தினார்.

பாதுகாப்பு அமைச்சுக்கு முதல் முறையாக வெளிநாட்டு புலனாய்வு அமைப்பால், ஏப்ரல் 8ஆம் திகதி எச்சரிக்கை அனுப்பப்பட்டது. மறுநாள் அச்சுறுத்தல்கள் தொடர்பான முதலாவது கூட்டம் நடைபெற்றது.

அதேநாள், தேவையான நடவடிக்கைக‌ களை முன்னுரிமை அடிப்படையில் எடுக்குமாறு, பொலிஸ்மா அதிபருக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவு வழிகாட்டுதல்களை வழங்கியது.

ஈஸ்ரர் ஞாயிறு தாக்குதலானது கடுமையானதாக, மிருகத்தனமானதாக, நன்கு ஒருங்கிணைக்கப்பட்டதாக இருக்கும் என்று, பாதுகாப்பு அமைப்புகளில் இருந்த யாரும் கற்பனை செய்து பார்க்கவில்லை என்றும், செயற்பாட்டுத் தவறுகள் பல மட்டங்களில் இருந்தன என்றும் பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறைபாடுகள் தொடர்பாக, அரச தலைவர் விசாரணைக் குழு பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த பலரிடம் விசாரிக்கலாம் என்று அந்த அதிகாரி கூறினார்.

இந்த விசாரணைக்குழு முன்பாக, பாதுகாப்புச் செயலராக இருந்த ஹேமசிறி பெர்னான்டோவும், பொலிஸ் மா அதிபராக இருந்த பூஜித் ஜயசுந்தரவும் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளனர்.

தாக்குதல் எச்சரிக்கைகளை அரச தலைவர் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்று ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் பரவிய செய்தி பொய்யானது என்று அரச தலைவரின் ஊடகப் பிரிவு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

(ஓ.5)

## வன்முறைகள் ஊடுருவுவதை எதிர்பார்க்காததன் விளைவே அசம்பாவிதங்களுக்கு காரணம்

முன்னாள் எதிர்க் கட்சித்தலைவர் தவராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே. 1

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை முறியடித்த இறுமாப்பில் இருந்த பாதுகாப்பு தரப்பினர் தமிழர்கள் மீண்டும் ஆயுதம் தூக்குகின்றார்களா? என்றே கண்காணித்து வந்தனரே தவிர ஏனைய பரிமாணங்களில் நாட்டில் வன்முறைகள் ஊடுருவதை எதிர்பார்க்காததன் விளைவே நாட்டில் ஏற்பட்டுள்ள அசம்பாவிதங்களுக்கு காரணம் என வடக்கு மாகாண முன்னாள் எதிர்க் கட்சித்தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசு தமிழீழ விடுதலைப்புலிகளை ஆயுத ரீதியாக முறியடித்த பின்னர் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்கள் மீண்டும் ஆயுதம் என்கின்றார்களா? என்றே கவனம் செலுத்தி வந்தனர். உலக வளர்ச்சிக்கு ஏற்ப ஏனைய பரிமாணங்களில் நாட்டில் பயங்கரவாத செயற்பாடு ஊடுருவுகிறதா எனப் பாதுகாப்பு தரப்பினர் எதிர்பார்த்து இருக்கவில்லை.

இரு தேசியக் கட்சிகளும் இணைந்து நாட்டில் நல்லாட்சி அரசை அமைத்தது. ஆனால் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலை காரணமாக அரசதலைவரும், தலைமை அமைச்சரும் ஒருவர் மீது ஒருவர் வெறுப்புக்களை காட்டிக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் வெறுப்புணர்வு மற்றும் முரண்பாடுகளின் விளைவையே மக்களாகிய நாம் அனுபவித்து வருகின்றோம்.

நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் இந்தியா உள்ளிட்ட பல தரப்புகளும் புலானாய்வு பிரிவினரும் எச்சரிக்கை விடுத்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதற்கு முழுப் பொறுப்பையும் தற்போதைய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அரசதலைவரும், தலைமை அமைச்சரும் தங்களுக்கு எதுவும்தெரியாது எனகூறிவருகின்றனர். இவர்களின் அரசியல் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டது இந்த நாட்டு மக்களே என்றார்.

(க-ரி)

## முன்னாள் தளபதிகளுடன் மகிந்த தீவிர ஆலோசனை

கோத்தபாயவும் கலந்துகொண்டார்



கொழும்பு, மே. 1

முன்னாள் படைத்தளபதிகளுடன் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச ஆலோசனை நடத்தியுள்ளார்.

நாட்டின்தற்போதைய சூழ்நிலைகுறித்துமுன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் படைத்தளபதிகளுடன் மகிந்த கடந்த சனிக்கிழமை ஆலோசனை நடத்தினார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரசுக்கு செயற்றிட்டமொன்றை வழங்குவது குறித்து இங்கு பேசப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## மருத்துவர் அல்லாதோரின் வாகனங்களில் ஸ்ரிக்கர்

பதுளை, மே. 1

பதுளை மாவட்டத்தில் மருத்துவர்கள் அல்லாத இருநூறு பேர், தமது வாகன கண்ணாடிகளில் மருத்துவர்கள் ஒட்டும் இலட்சினை ஸ்ரிக்கரைக் காட்சிப்படுத்தித் திரிகின்றனர் என்றும் அவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று அரச மருத்துவ சங்க பதுளை மாவட்ட செயலர் தெரிவிக்கிறார்.

பதுளை அரசினர் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெருக்கடி வேளைகளின் போது சுலபமாகச் செல்வதற்கும், குற்றச் செயல்களை மேற்கொள்வதற்கும், பாதுகாப்புப் படையினரின் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்கள் அவ்வாறு காட்சிப்படுத்தியுள்ளனர்.

மருத்துவர்கள் அல்லாதோர், தத்தமது வாகன முன் கண்ணாடிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் போலி இலச்சினைகளை அகற்ற வேண்டும். தவறின் பொலிஸார் சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(த)

## இயல்புக்கு திரும்புகிறது சினமன் விருந்தினர் விடுதி

கொழும்பு, மே. 1

கொழும்பு சினமன் கிராண்ட் ஹொட்டல் மீள வழமைக்குத் திரும்பி யுள்ளது. தாக்குதல் நடந்தும் பல விருந்தினர்கள் இன்று வரை அந்த விடுதியில் தங்கியுள்ளனர் என்றுகூறும் அந்த விடுதியினர், முன்னர் போன்று வழமையான விடுதியில் தங்குவோருக்கான முன்பதிவு களை ஆரம்பித்துள்ளதாகவும் கூறியுள்ளனர்.


அவர்களது ஊடகக் குறிப்பில் அவர்கள் இவற்றைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி இந்த விடுதியிலும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தற்போது அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புநிபுணர்களின் ஆலோசனையுடன் விடுதியின் ஊழியர்கள் மற்றும் இந்த விடுதிக்கு வரும் விருந்தினர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த 22ஆம் திகதி தொடக்கம் புதிய விருந்தினர்களை ஏற்க ஆரம்பித்துள்ளோம். விடுதியில் பாதிக்கப்பட்ட உணவு விடுதியைத் தவிர மிகுதி அனைத்து உணவகங்களும் திறக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ரஷ்யாவின் உளவாளித் 'திமிங்கிலம்' நோர்வேயின் கையில் அகப்பட்டது


ஒஸ்லோ,மே1
பெலுகா வகைத் திமிங்கி லம் ஒன்றை ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட மறைகாணி பொருத்தப்பட்ட நிலையில் நோர்வேயை அண்மித்த ஆர்க்டிக் கடல் பகுதியில் நோர்வே ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்தனர். குறித்த திமிங்கலம் ரஷ்யக் கடற்படையினரிடம் பயிற்சி பெற்றுள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர்.
இங்கோயா என்ற ஆர்க்டிக்கிலுள்ள தீவு ஒன்றில் இருந்து நோர்வே நோக்கிப் பயணிக்கின்ற படகுகளைக் குறித்த திமிங்கிலம் பல முறை அணுகியுள்ளது.
ரஷ்யாவுக்கு அந்தப்பிராந்தியத்தில்கடற்படைத்தளம் ஒன்று உள்ளது.
அந்தக் கடற்படைத் தளம் அமைந்துள்ள முர்மான்ஸ்க்என்ற இடத்தில் இருந்து 415 கிலோ மீற்றர் தொலைவிலேயே இந்தத் திமிங்கலம்கண்டுபிடிக்கப்பட்டது. பெலூகா வகைத் திமிங்கிலங்கள் ஆர்க்டிக் கடலைத் தாயகமாகக் கொண்டவை. பனிப்போர்க் காலத்தில் அமெரிக்காவின் சிறப்புத்திட்டம்ஒன்றின்கீழ்டொல்பின்களுக்கும், கடல்சிங்கம் எனும் விலங்குகளுக்கும் பயிற்சி அளித்தமை குறிப்பிடத்தக்கது.



# வடகொரியாவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## வேண்டுகோள் விடுக்கிறார் புடின்

மொஸ்கோ.மே1
'வடகொரியா அணு ஆயுத உற்பத்தியை நிறுத்த வேண்டுமானால்வடகொரியாவின்பாதுகாப்பைப்பன்னாட்டுச்சட்டங்கள் மற்றும்பன்னாட்டுஅனுமதியுடன்உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார் ரஷ்யா அதிபர் புடின். வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன்னும் ரஷ்ய அதிபர் விளார்டிமிர் புடினும் ரஷ்யாவின் விலாடிவோஸ்டாக் நகரில் கடந்த வியாழக்கிழமை சந்தித்துப்பேசினர்.
இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே புடின் இவ்வாறு தெரிவித்தார். வட கொரியா அணு ஆயுத உற்பத்தியை நிறுத்துவதையே ரஷ்யாவும், அமெரிக்காவும், விரும்புகின்றன. இதற்கான பேச்சுக்களின் போது நான் இடைத் தரகராகச் செயற்பட விரும்புகிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.






# கடலுள் மூழ்குகிறது தலைநகர் மாற்று நகர் குறித்து ஆலோசனை

ஜகார்த்தா,மே1
இந்தோனேசியாவின் தலைநகரான ஜகார்த்த அதிவேகமாகக் கடலுள் மூழ்கி வரும் நகரமாக இருப்பதால், இந்தோனேசியாவின் தலை நகராக வேறு நகரை அறிவிப்பதற்கு அந்த நாட்டு அதிபர் ஜோகோ விடோடோ முடிவெடுத்துள்ளதாக இந்தோனேசியாவின் திட்டமிடல் துறை அமைச்சர் பேம்பங் ப்ராஜ்ஜநெகோரோ தெரிவித்தார்.
10 லட்சம் மக்கள் வசிக்கின்ற ஜகார்த்தா, உலகில் அதிவேகமாகக் கடலில் மூழ்கிவரும் நகரங்களில் ஒன்று.
அத்துடன், கடும் போக்குவரத்து நெரிசலையும் சந்திக்கிறது.
இந்தோனேசியா காலனியாதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்றதிலிருந்து தலைநகரை மாற்றுவது குறித்த பேச்சும் இருந்தே வருகிறது.
இந்தநிலையிலேயேதலைநகர்மாற்றப்படுவதான அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. ஆனால், இந்தோனேசியாவின்புதிய தலைநகரம் எது என்பது பற்றிய எந்தவித அறிவிப்பும் வெளியாகவில்லை. இதற்காகப் பரிசீலிக்கப்படும் இடங்களின் பட்டியலில் போர்னியோத் தீவில் உள்ள காளிமாண்டன் மாகாணத்தின்தலைநகரானபலங்க்கராயாமுதலிடத்தில்இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பதவி துறக்கிறார் அரசர் கவலையடைகின்றனர் மக்கள்

டோக்கியோ,மே1
ஜப்பான் அரசர் அகிஹிட்டோதாம்பதவி விலகுவதாக அறிவித்தார். ஜப்பானில் கடந்த 200 ஆண்டுகளில்பதவிவிலகும் முதல் அரசர் இவர் ஆகும். இந்த அறிவிப்பு அங்குள்ள மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியது.



அகிஹிட்டோவுக்கு 85வயது ஆகிறது. வயது மூப்பின் காரணமாக தான் பதவி விலகுவதாக அவர் அறிவித்தார். 'எனதுவயதுகாரணமாக என்னால் அன்றாடப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. என்உடல் நிலைநலிந்துவருகிறது' என்கிறார் அவர்.
இந்தஅறிவிப்புஅவர் மீது அங்குள்ள மக்கள் மத்தியில் அனுதாபத்தை உண்டாக்கி உள்ளது.
ஜப்பானில் அரசருக்கு எந்த அரசியல் அதிகாரமும் இல்லை என்றாலும், தேசத்தின் அடையாளமாக அவர் கருதப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கடனைச்செலுத்துகின்றேன்

## விஜய் மல்லையா மீண்டும் தெரிவிப்பு

நான்பெற்றுள்ளவங்கிக்கடன்முழுதையும் செலுத்திவிடுகிறேன் எனப் பிரிட்டனில் தலைமைமறைவாகியுள்ள இந்தியத் தொழில் அதிபர் விஜய் மல்லையா மீண்டும்தெரிவித்தார்.
இந்திய வங்கிகளில் பல ஆயிரம் கோடிகளைக்கடனாகப்பெற்றுத்திருப்பிச்செலுத்தாமல் பிரிட்டனில் தலைமறைவாகியுள்ள அவர் இவ்வாறு பல தடவைகள் தெரிவித்து வந்தபோதிலும்கடனை இதுவரைசெலுத்தியிருக்கவில்லை. இப்போது இந்தியாவுக்கு அவரை நாடுகடத்துமாறு பிரிட்டன் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில் விஜய் மல்லையா இவ்வாறு மீண்டும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய நாள்

**மேடம்:** சமூகத்தில் கிடைக்கிற அந்தஸ்து உயரும். தொழில், வியாபா ரத்தில் இருந்த போட்டி குறையும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். குடும்ப பிரச்னை சுமூகமான தீர்வு பெறும்.

**இடபம்:** எந்த செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். நண்பர் மனதார பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் பன்மடங்கு கிடைக்கும். பெண்களுக்கு பொன், பொருள் சேரும்.

**மிதுனம்:** உங்களை சிலர் அவமதித்து பேசுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். மிதமான பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** திடீர் பொறுப்பு உருவாகலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கையளிக்கும். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சி இருக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். அபரிமிதமான அளவில் பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்தி ஏற்படும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**துலாம்:** உறவினரின் கூடுதல் பாசம் வியப்பைத் தரும். தொழில், வியாபாரத்தில் சீரான வளர்ச்சி காண்பீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பேணுவர்.

**விருச்சிகம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழிலில் அளவான உற்பத்தி விற்பனை இருக்கும். பணவரவை விட நிர்வாகச் செலவு அதிகரிக்கலாம்.

**தனுசு:** எண்ணத்தில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் குறையும். பெண்கள் விருந்து, விழாவில் கலந்து கொள்வர்.

**மகரம்:** கொடுத்த வாக்குறுதி நிறைவேற தாமதமாகும். தொழிலில் வளர்ச்சிபெற புதிய உத்தியை பின்பற்றுவது நல்லது. பணியாளர் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர்.

**கும்பம்:** சாதனை நிகழ்த்த உரிய வாய்ப்பு தேடி வரும். குடும்பத்தில் சுப நிகழ்வு குறித்த பேச்சு நடக்கும். . அளவான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம் ஆகலாம். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணவிஷயத்தில் விழிப்புடன் இருக்கவும்.

இராமபுரத்தூர் நிசாந்தன்

# திரையிசையில் மலர்ந்த அம்மா பற்றிய பாடல்கள்



எம் வாழ்வில் எமக்கு கிடைத்த அரும் பெரும் பொக்கிசம் அம்மா. அகராதியில் கூட பொருள் அறிய முடியாத சொல் அம்மா எனும் சொல்லாகும். எனவே தான் தாயில் சிறந்த கோவிலும் இல்லை எனும் வாக்கு பிறந்தது. நாம் வாழும் உலகில் நம் கண்ணால் நேரே காணும் தெய்வம் அன்னை யாவாள். அத்தகைய தாய்மையின் சிறப்புக் களை கூறாத இலக்கியங்களே இல்லை. தன் உதிரத்தை உணவாக்கி, தன் சந்தோசத்தை தன் பிள்ளையின் சந்தோசமாக்கி, தன் கடமைகளை தன் பிள்ளையின் கடமைகளாக்கி, தன் பிள்ளையின் மகிழ்ச்சியில் இன்பம் காணும் ஒரேயொரு உயிர் அம்மாவே. நாம் உலகில் தேடித் தேடி அலைந்தாலும் மீண்டும் அமர முடியாத சிம்மாசனம் ஒன்று உள்ளதென்றால் அது தாயின் கருவறையாகும்.

அத்தகைய அன்னையின் சிறப்புக்களை மையப்படுத்தி பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் தாயின் சிறப்புக்களை வர்ணிக்கின்ற பல பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவை அன்னையின் அன்பினையும், மகத்துவத்தையும் கூறி நிற்கின்றன. அவற்றை கேட்கும் போது எம் மனம் அன்னையின் அன்பில் இணைந்திடும். மனம் மெழுகாய் உருகிடும். அம்மா பாடல்களை கேட்போமா? வாருங்கள்.

**வியாபாரி ஆசைப்பட்ட எல்லாத்தையும்..**

வியாபாரி திரைப்படம் தாய்ப் பாசத்தினை வெளிப்படுத்திய ஓர் திரைப்படம். அதில் ஓர் அற்புதமான அம்மா பாடல் இடம்பெற்றுள்ளது.

*ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம்*
*அம்மாவ வாங்க முடியுமா...*

எனத் தொடங்கும் பாடலே அதுவாகும். இந்தப் பாடலில்,

*பட்டினியா கிடைந்தாலும் பிள்ளைக்கு பால் கொடுப்பா*
*பால் குடிக்கும் பிள்ளை முகம் பார்த்து பசி தீர்ப்பா*
*இளவட்டம் ஆட பின்னும் எண்ணை தேச்சி குளிக்க*
*வைப்பா உச்சி முதல் பாதம் வரை உச்சி கோதி மகிழ்ந்திடுவா நெஞ்சிலே நடக்க வைப்பா*
*நிலாவை பிடிக்க*
*வைப்பா பிஞ்சி விரல் நகம் கடிப்பா பிள்ளை எச்சில் சோறு தின்பா.......*

எனும் வரிகள் நயக்கத்தக்கவை. இங்கு, அன்னை தான் பசியாக இருந்தாலும் தன் பிள்ளையின் பசி போக்கிடுவாள், தன் பிள்ளை உணவு உண்ட பின்னரே உணவினை உண்பவள் அன்னை. அது மட்டுமன்றி தலைக்கு எண்ணெய் தேய்த்து விடுதல், குளிப்பாட்டுதல், உடை அணிவித்தல், உணவு ஊட்டுதல்,
நிலாக் காட்டுதல், நடை பழக்குதல் என அத்தனையும் அம்மாவின் அரவணைப்பிலேயே அரங்கேறுகின்றன. அவையனைத்தும் எம் வாழ்வில் கிடைக்கும் பெரும் சந்தோசமான தருணங்கள் என்பதை மேற்போந்த பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.


**காலையில் தினமும் கண் விழித்தால்..**

கவிஞர் வாலியின் வரிகளில் தாயன்பின் ஊற்றான பாடல் உள்ளது. பாடல் இதுவே.

*காலையில் தினமும் கண் விழித்தால்*
*நான் கை தொழும் தேவதை அம்மா*
*அன்பென்றாலே அம்மா ... என் தாய் போல் ஆகிடுமா*
*இமை போல் இரவும் பகலும் எனை காத்த அன்னையே*
*உனதன்பு பார்த்த பின்பு அதை விட வானம் பூமி யாவும் சிறியது..........*

இந்தப் பாடலில், காலையில் எழுந்ததும் முதலில்





வணங்கும் தெய்வம் அம்மா என்பதும், அன்பின் வடிவமாக விளங்கும் தாயின் அன்பு வானை விடவும் உயர்ந்தது என்பன தெளிவுறுகின்றன. விநாயகரே தன் தாய், தந்தையான சிவன், பார்வதியை வலம் வந்தது உலகைச் சுற்றியதற்கு சமமானது எனும் கதையினை நரம் அறிவோம். அது போல அன்னை வணங்குவது இறைவனை வணங்குவதற்கு நிகரானதாகும் எனும் கருத்தாடல் இங்கு புலப்படுகின்ற தல்லவா?

**ராம் - ஆராரிராரோ நான் இங்கு பாட..**

ராம் எனும் திரைப்படமும் தாயன்பினை வெளிப்படுத்தும் திரைப்படமாகும். ஜீவா நாயகனாக நடித்த அப்படத்தில் சரண்யா பொன்வண்ணன் அம்மாவாக நடித்திருப்பார். அந்தத் திரைப் படத்தில் ஓர் அழகிய அம்மாப் பாடல்,

*ஆராரிராரோ நான் இங்கே பாட*
*தாயே நீ கண் உறங்கு என்னோட மடி சாய்ந்து*
*வாழும் காலம் யாவுமே தாயின் பாதம் சொர்க்கமே*
*வேதம் நான்கும் சொன்னதே அதை நான் அறிவேனே*
*அம்மா என்னும் மந்திரமே அகிலம் யாவும் ஆள்கிறதே...*

அம்மா எனும் சொல்லானது அகிலத்தை ஆளும் மந்திரமாகும். மேலும் சொர்க்கம் தாயின் காலடியில் இருக்கின்றது இதனை வேதங்கள் நான்கும் உறுதி செய்கின்றன. இது மட்டுமன்றி தன் தாயினை தன் மடியில் சாய்ந்து உறங்கும் படி தனயன் வேண்டுவதாகவும் பாடலடிகள் விளங்கு கின்றன.

மேலும் இந்தப் பாடலில், தாய் சொல்கின்ற வார்த்தை
கள் எல்லாம் நோய் தீர்க்கின்ற மருந்தல்லவா

*மண் பொன் மேலே ஆசை துறந்த*
*கண் தூங்காத உயிர் அல்லவா*
*காலத்தின் கணக்குகளில் செலவாகும் வரவும் நீ*
*சுழல்கின்ற பூமியின் மேலே சுழலாத பூமியும் நீ........*

அடடா, தாயின் வார்த்தைகளுக்கு மிகப் பெரும் சக்தி உள்ளது. அவ் வார்த்தைகள் உடலில் நோய் தீர்க்கும் மருந்தாகும். எதன் மீதும் ஆசை கொள்ளாது அனைத்தும் தன் பிள்ளைக்கே என திருப்தி கொள்ளும் ஓர் தியாக தீபம் அம்மாவே. தன் உறக்கம் நீக்கி தன் பிள்ளையை உறங்கச் செய்யும் அற்புத உறவு அம்மா என்பவள். பூமிக்கு மேலே மற்றொரு பூமியாக விளங்குபவள் எம் அழகிய அன்னையே. ஆகா, தாய்மையின் ஆழம் தான் என்னே..

**வரலாறு-தீயில் விழுந்த தேனா..**

வரலாறு திரைப்படம் அஜித்குமார் நடிகனாக நடித்த திரைப்படம். இப்படத்தில் தன் சிறுவயதிலேயே தாய் பைத்தியம் ஆகி விட, தந்தையும் இல்லாத தருணத்தில் தன் தாயை [illegible] ராக கருதி பாதுகாத்து அன்பு செலுத்தி வருகின்றான் மகன் ஒருவன். அந்த தன்





மையை நம் கண் முன்னே காண்பிக்கின்ற ஓர் அம்மாப் பாடல் இடம் பெற்றுள்ளது.

*தீயில் விழுந்த தேனா இவன் தீயில் வழிந்த தேனா*
*தாயைக் காக்கும் மகனா இல்லை தாயுமானவனா.....*

அம்மா எனும் ஓர் சொல்லிலேயே ஓர் உலகம் அடங்கியுள்ளது. அந்த உலகம் சொல்லும் ஓர் சொல் அது அம்மா எனும் வார்த்தையேயாகும். தாயின் மடியே உலகம் தொடங்குகின்றது. அந்த தாயின் மடியிலேயே உலகம் முடிகின்றது.

*ஓர் சொல்லில் ஓர் உலகம் அம்மா*
*உலகெல்லாம் ஓர் சொந்தம் அம்மா*
*தாயின் மடிதானே உலகம் தொடங்கும் இடம்*
*தாயின் மடிதானே உலகம் முடியும் இடம்..*

என அத்தன்மை தெளிவுறுவதை காணலாம்.

**வேலையில்லா பட்டதாரி -**
**அம்மா அம்மா நீ எங்க அம்மா**

நடிகர் தனுஸ் நடித்த திரைப்படம் வேலையில்லா பட்டதாரி. இத் திரைப்படத்தில் ஓர் கட்டத்தில் நடிகரின் தாய் இறந்து விடுகின்றார். அப்போது தாயின் பிரிவினை தாங்கிட முடியாது மகன் பாடுவதாக அமைகின்ற பாடலே இது.

*அம்மா அம்மா நீ எங்க அம்மா*
*ஒன்ன விட்டா எனக்கு யாரு அம்மா*
*தேடிப்பாத்தேனே காணோம் ஒன்ன*
*கண்ணாமூச்சி ஏன் வா நீ வெளியே..*
*இப் பாடலில் பின்வரும் வரிகளையும் காணுங்கள்.*
*தாயே உயிர் பிரிந்தாயே என்ன தனியே தவிக்க விட்டாளே*
*இன்று நீ பாடும் பாட்டுக்கு நான் தூங்க வேணும்*
*நான் பாடும் பாட்டுக்கு தாயே நீ உன் கண்கள் திறந்தாலே போதும்.....*

தாய் தன்னை தனியே தவிக்க விட்டு சென்று விட்டதாகவும், தாயனவள் தன்னை தாலாட்டுப் பாடி தூங்கச் செய்ய வேண்டும் எனவும், ஒரு முறை தான் பாடும் பாட்டுக்கு உன் கண்களை திறந்தாலே போதும் என பரிவுடன் வேண்டுகின்ற மகனது ஆழமான தாயன்பு இங்கு புலப்படுகின்ற தல்லவா?

**பிச்சைக்காரன் நூறு சாமிகள் இருந்தாலும்.**

நடிகர் விஜய் ஆன்டனி நடித்த திரைப்படம் பிச்சைக்காரன். இந்தத் திரைப்ப டத்தில் அழகிய அம்மா பற்றிய பாடல் இழையோடுகின்றது.

*நூறு சாமிகள் இருந்தாலும்*
*அம்மா உன்னை போல் ஆகிடுமா*
*கோடி கோடியாய் கொடுத்தாலும் நீ தந்த அன்பு கிடைத்திடுமா*
*ரத்தத்தை நான் தந்தாலுமே உன் தியாகத்துக்கு ஈடாகுமா...*

இதுவே அப்பாடல். நூறு சாமிகள் இருந்தாலும் அவை அம்மாவிற்கு இணையாகிடுமா? கோடிப் பணம் கொடுத்தாலும் தாயின் அன்பினை வாங்கிட முடியுமா? அது போக தாயவள் தியாகத்திற்கு எம் உதிரத்தைக் கொடுத்தாலும் ஈடாகுமா? மேலும் பாடலில் வரும் வரிகளை நோக்குவோம்,

*மழை வெயில் பார்க்காமல் பார்ப்பாள் வேலை*
*குழந்தைகள் தான் அவள் கழுத்துக்கு மாலை*
*மெழுகாக உருகி தருவாளே ஒளியே*
*குழந்தைகள் சிரிப்பில் மறப்பாளே வலியை*
*நடமாடும் கோயில் நீ தானே.........*

ஆம். மழை வெய்யில் எதுவும் பாராமல் வேலை பார்ப்பவள் நம் அன்னை, இது மட்டுமா மெழுகைப் போல உருகி எமக்கு ஒளி தருபவளும் தாயே, தன் பிள்ளைகள் மகிழ்ச்சியில் தன் வலியையும் மறந்து போவாள் அவள், இவ்வுலகில் நடமாடும் தெய்வம் நம் தாயல்லவா? அருமையான பாடல்.

**தென்மேற்குப் பருவக்காற்று**
**கள்ளிக்காட்டில் பிறந்த தாயே...**

தென்மேற்குப் பருவக்காற்றுத் திரைப்படத்தில் வைரமுத்துவின் வரிகளில் உருவான தாயன்பின் ஆழம் கூறும் பாடல் இதுவே.

*கள்ளி காட்டில் பொறந்த தாயே என்ன கல் ஓடச்சு வளத்த நீயே*
*முள்ளு காட்டில் மொளச்ச தாயே என்ன முள்ளு தைக்க விடல நீயே...*

*இப் பாடலில்,*
*ஒழவு காட்டுல வெத வெதப்பா ஓணான் கரட்டுல கூழ் குடிப்பா*
*ஆவரம் குழையில கை தொடைப்பா... பாவம் அப்பா*
*வேலி முள்ளில் அவ வெறகெடுப்பா நாழி அரிசி வெச்சு ஓல எரிப்பா*
*புள்ள உண்ட மிச்சம் உண்டு உசுர் வளர்ப்பா ...தியாகம் அப்பா*
*கிழக்கு விடியும் முன்ன முழிக்கிறா அவ ஒலக்க புடிச்சுதான் பெறக்குறா...................*

எனும் வரிகள் அனைத்தும் தாயவள் மகத்துவமதை வெளிப்படுத்துகின்ற தன்மையில் அமைவுறுகின்றன.

தாயன்பில் நிலை கொள்வோம்

இவ்வாறு அன்பின் இலக்கணமாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய், தியாகத்தின் வடிவமாய் விளங்கும் அம்மாவின் சிறப்புக்கள், பெருமைகள் பல திரைப்பட பாடல்களில் பொலிவுறுவதனைக் காணலாம். மேற்போந்த பாடல்களை தவிர, ரஜனியின் மன்னன் திரைப்படத்தில் அம்மா என்றழைக்காத உயிரில்லையே... மற்றும், உழைப்பாளி திரைப்படத்தில் அம்மா அம்மா எந்தன் ஆருயிரே..

ஆகிய பாடல்களும், ஜெயம் ரவியின் எம். குமரன் திரைப்படத்தில்,நீயே நீயே நானே நீயே நெஞ்சில் வாழும் உயிர் தீயே நீயே...., விஜய்யின் ராஜகாளி அம்மன் திரைப்படத்தில், அம்மன் கோயில் எல்லாமே.. போன்ற பாடல்களும் அன்னை பற்றிய வர்ணிப்பின் வெளிப்பாடான பாடல்களேயாகும். இப் பாடல்கள் காலம் உள்ள வரைக்கும் எல்லோரது மனங்களிலும் நீங்காத இடம் பெற்றுள்ளன. மேலும், கல்லையும் கரைக்கக் கூடிய தாயன்பின் மகத்துவம் கொண்ட இப் பாடல்களை கேண்மையுறும் உள்ளமனது உவகை கொள்ளும் என்றால் மிகையில்லை.

# புதுவிதியில் பூத்ததே பாங்கான பரிசளிப்பு

கே.எஸ்.சிவஞானராஜா

உடங்களின் இருப்பிடத்தையும் அதனது உயிர்ப்பினையும் நாடி பிடித்துப் பார்ப்பதற்கு மிகவும் பொருத்தமாக அமைவனதான் போட்டிகள். அந்த வகையில் புதுவிதி வார ஏடானது 2018ஆம் ஆண்டு நாடு தழுவிய இலக்கியப் போட்டி ஒன்றினை நடாத்தி வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பொன்றை அண்மையில் அதன் அலுவலகத்தில் நடாத்தியது.

கொழுத்தும் வெயிலிலும் புதுவிதி தனது பரிசளிக்கும் பாங்கினால் பூத்துக் குலுங்கியது. நா.யோகேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற ;விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தவர் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன். 34 வருட ஊடக அனுபவத்தோடு மூழ்கி எழுந்து தெளிந்த முன்னோடியானவர் என்பதினால் இந்த நிகழ்ச்சி களை கட்டி முளைவிட்டது. அன்று தொடக்கம் இற்றைவரை இலக்கியத்துக்கும் இலக்கிய கர்த்தாக்களுக்கும் என்றும் உதவி செய்து வருகின்ற நிலையில் இனிவரும் காலங்களில் மென்மேலும் அத்தகையவர்கள் பிரகாசிப்பதற்கும் புதியன வற்றைப் படைப்பதற்கும் உரிய அமைச்சுகளுடன் கலந்துரையாடி ஏற்ற நிதியுதவி கிடைப்பதற்கு வழிசமைப்பேன் என்றும் அத்தோடு எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கான செயற்றிட்டங்களுக்கும் வாய்ப்பளிப்பேன் என்றும் முடிந்தால் வசதி வாய்ப்பற்ற எழுத்தாளர்களை இனங்கண்டு மானிய அடிப்படையிலும் மதிப்பளித்தல் முறையிலும் அவர்களை வளர்ப்பதற்கு ஆவனபுரிவேன் என்றும் உரையாற்றினார். இது சபையோருக்கும் எழுத்தாளர்களுக்கும் மன நிறைவைப் பெற்றுத்தந்தது.

எழுத்தாளர்களே ஊடகங்களின் சொத்தாகப் புகழப்படுகிறார்கள். எவரையுமே ஊடகங்கள் புறந்தள்ளியதாக வரலாறு இல்லை. புறந்தள்ளவும் கூடாது. காரணம் ஊடக தர்மம் தெய்வ நீதிக்கும் நடுவு நிலைமைக்கும் வாழ்வாங்கு வாழ்வதற்கும் அத்தியாவசியமானது என்ற வகையில் தொடர்ந்து எழுதுங்கள் புதுவிதி உங்களை வரவேற்கும் என்று தலைவர் ஊக்கமளித்தார்.

புதுவிதியில் நீந்திக் கடந்த நெருப்பாறு புகழ் நா.யோகேந்திரநாதனின் கருத்துப் பகிர்வும் காத்திரமான தலைமைத்துவ வார்ப்பும் மேடைக்கு விருந்தாயின. அவரது எழுத்துலக அனுபவம் பலே! நடைபெற்ற போட்டிகளுக்கு அவரே காரணகர்த்தாவாக மிளிர்கின்றார்.

**பரிசளிப்பு**

சிறுகதை, கவிதை, கட்டுரை என பாடசாலை மாணவர்களுக்கான தனித் தனிப் போட்டிகளும் திறந்த போட்டியாளர்களுக்கான தனித்தனிப் போட்டிகளும் நடாத்தப்பட்டு பரிசுக்குரியவர்கள் ஊடகவாயிலாகவும் தனித்தனியாகவும் அறிவிக்கப்பட்ட நிலையில் புதுவிதி அலுவலகத்தில் பரிசளிப்பு வைபவம் சிறப்பாக அரங்கேறியது. மட்டக்களப்பு வவுனியா, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, யாழ்ப்பாணம், தீவகம், மன்னார் எனப் பல இடங்களிலிருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றி காத்திரமான பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர். புதுப்புதுப் படைப்பாளிகள் இனங்காணப்பட்டனர். எழுத்தாளர்களைப் 'புதுவிதி' தூண்டியது மட்டுமல்ல. அவர்களுக்கு வல்லமையையும் வரமாக்கிக் கொடுத்தது. தூர இடங்களில் இருந்தும் வருகை தந்தவர்களுக்காகப் போக்குவரத்து ஒழுங்கள் செவ்வனவே செய்யப்பட்டிருந்தன.

மேலும் பன்னாட்டு விருதுபெற்ற மூத்த சிறுகதை எழுத்தாளரான டேவிட் ஐயாவின் முதிர்ந்த குணம் சபையோருக்கு சிறுகதை ஊட்டங்களை அள்ளித்தந்தது. அவரது பாணியில் ஓரிடம். பேரூந்திலே ஒரு பச்சிளங் குழந்தை! தாய்ப்பாலுக்குக் கதறிய தவிப்பும் அழுகையும்! கலவரத்தில் மார்பகங்களையே இழந்த தாயின் அந்தரமும் ஆதங்கமும்! ஒரு சிறுகதையை உலக அரங்கிற்குக் கொண்டு செல்கிறது. அழுகைக்கு ஆண்டவனே தாயாக இறங்கி வந்து குழந்தைக்குப் பாலூட்டிய அதிசயம் கதையாகிறது. டேவிட் ஐயாவின் கதை கூறும் பாணி மிக அபாரம். புதுவிதி வார இதழ் தனது மூன்றாவது அகவையில் பூத்த விதம் புதிய படைப்பாளிகளுக்கு இனிய தேனிசைச் சொரிந்து பேனாக்களை கையிலெடுக்க வைத்துவிட்டது.


நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவன இயக்குநர் யசோதை சரவணபவன் இந்த வைபவத்தில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்று குசலம் விசாரித்து எழுத்தாளர்களை ஊக்குவித்தமை சபையோரைக் கவர்ந்தது எனலாம்.

ஊடகங்களும் வாசகர்களும் தாயும் பிள்ளைகளும் போல வளரவும் வேண்டும். வளர்க்கப்படவும் வேண்டும். ஊடகங்களின் சொத்தாகவும் வரவேற்பாளர்களாகவும் இருப்பவர்கள் வாசகர்களேயாவர். நிறைவாக ஒரு செய்தியைக் குறிப்பிட்டே யாக வேண்டும். அதுயாதெனில் போட்டியாளர்கள் சார்பாகவும் சபையோர் சார்பாகவும் உரையாற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கக் கூடாதா என்ற ஆதங்கம் சபையிலே இழையோடியதாகும். மொத்தத்தில் புதுவிதியின் பூக்கள் நான்காம் வயதிலே மேலும் நறுணம் மிக்கதாகிக் கொத்தாக மலரும் என நம்பலாம்.




# இலக்கியன் முர்ஷித் எழுதிய 'நஞ்சுண்டநிலவு'

## கவிதை நூல் வெளியீடும், வாசிப்புப் பகிர்வும்









ஏ.எல்.எம்.சலீம்

நிந்தவூரைச் சேர்ந்த வளர்ந்துவரும் இளம் எழுத்தாளரும், கவிஞருமான இலக்கியன் முர்ஷித் எழுதிய 'நஞ்சுண்ட நிலவு' கவிதை நூலின் வெளியீட்டு அறிமுகமும், வாசிப்பு மீதான அனுபவப் பகிர்வு நிகழ்வும் நிந்தவூரில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

ஓய்வுபெற்ற அதிபரும், நிந்தவூர் கலை, இலக்கியப் பேரவையின் முக்கியஸ்தருமான கலாபூஷணம் எஸ். அகமது தலைமையில், நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் நிகழ்வு நடைபெற்றது.

அகர ஆயுதம் கலை, இலக்கிய மற்றும் சமூக செயற்பாட்டுத் தளத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிசாட் பதியுதீன் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டார்.

அத்துடன் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீரலி, பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்றூப், ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் தவிசாளரும், எழுத்தாளருமான பஷீர் சேகுதாவூத், நிந்தவூர் பிரதேசசபைத் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர், மாகாண சுகாதார சேவைகள் முன்னாள் பணிப்பாளர் டாக்டர். ஏ.எல். பரீத் ஆகியோர் மதிப்புறு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

தென் கிழக்கு பல்கலைக் கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா புலமை அதிதியாகக் கலந்து கொண்டதுடன் எழுத்தாளரும், விமர்சகருமான சாஜித் அஹமட் வாசிப்பு அனுபவப் பகிர்வு உரையையும், சட்டத்தரணி எஸ்.எம்.என்.மர்சூம் மௌலானா வெளியீட்டு அறிமு க உரையையும் நிகழ்வில் ஆற்றினர்.

மேலும், முகாமைத்துவப் பணிப்பாளர்களான எம்.ஐ.எம்.இல்யாஸ், ஏ.எஸ்.ஏ.பாஸித் ஆகியோர் நூலின் முதற்பிரதிகளையும் பிரதம அதிதியிடமிருந்து நிகழ்வில் பெற்றுக் கொண்டனர். நூலாசிரியர் கவிஞர் இலக்கியன் முர்ஷித் நிகழ்வில் உரையாற்றிய பலராலும் பாராட்டப்பட்டதுடன், பொன்னாடை போர்த்தியும் மதிப்புறுத்தப்பட்டார்.

# சுதந்திர அரங்கு மற்றும் அரங்காலயாவின் ஏற்பாட்டில் சிறப்பு இடம்பெற்ற நாடகவிழா


குமுதன்













சுதந்திர அரங்கானது சமூகத்தில் ஆரோக்கியமான கலை இரசனையை உண்டாக்குவதும், அரங்கத் துறையை தொழில்துறையாக்குவதற்குமாக வவுனியா மண்ணில் முனைப்புடன் இயங்கி வருகின்றது. இவர்களுடன் அரங்காலயா ஆற்றுகைக் குழுவும் இணைந்து மாதாந்தம் நாடக ஆற்றுகையினை நிகழ்த்தி வருகின்றது.

உலகநாடக தினத்தினை முன்னிட்டு வவுனியா நகரசபை மண்டபத்தில் குறித்த அண்மையில் ஆற்றுகையொன்றை அந்த அமைப்பு முன்னெடுத்தது. திருக்குமரனின் நெறியாள்கையில் நம் நாட்டு அரசியலையும், அரசியல் வாதிகளையும் வாளேந்திய சிங்கம் எதிர்த்து கேள்வி கேட்பதாக குறியீட்டு பாணியில் உருவான 'சிங்கம்வருது' நாடகமும் தயாபரன் ஜசோதினியின் நெறியாள்கையில் சமூகத்தில் உயர் நிலையில் இருப்பவர்கள் ஏனையவர்களை எப்படியெல்லாம் வழிநடத்துவர் என்பதை சித்தரிக்கும் முகமாக சுதந்திர அரங்க அங்கத்தவர்களின் கூட்டு முயற்சியிலும் உருவான 'பிரத்தியேகக் காட்சி' மற்றும் 'அப்பால் பெய்யும் மழை' ஆகிய மூன்று நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன.

# மாலபே சிலிற் பல்கலைக் கழகத்தில் தமிழ்விழா




மாலபேயில் உள்ள சிலிற் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவர்கள் முன்னெடுத்த கலாநேத்ரா என்ற பெயரில் அமைந்த தமிழ்க் கலைவிழா பல்கலைக்கழக கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் தலைமை விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் லலித் கமகேயும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் ச.லலீசனும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் கலாநேத்திரா என்ற சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டது.
இதனை துணைவேந்தர் பேராசிரியர் லலித் கமகே வெளியிட்டு வைத்தார். சஞ்சிகை குறித்த உரையை தமிழ் விவாதிகள் கழகத்தின் தலைவர் ராஜன் பூபால சிங்கம் இந்துஜன் ஆற்றினார்.
நிகழ்வில் வீரமகேந்திரபுரம் என்ற பெயரில் கந்தபுராணத்தை அடியொற்றிய நாடகத்தை எண்ணிம (டிஜிற்றல்) தொழினுட்பங்களுடன் மேடையேற்றினர். இன்றைய தமிழர்கள் தமிழ் உணர்வுடன் வாழ்கின்றார்களா? இல்லையா என்ற தலைப்பில் ச.லலீசனை நடுவராகக் கொண்டு விவாத நிகழ்வும் இடம்பெற்றது.



வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினரான ச.ஜயந்தன் அகில இலங்கை சமாதான நீதிவானாக உயர்நீதிமன்ற நீதிபதி பிறேம்சங்கர் முன்னிலையில் அண்மையில் பதவியேற்றார். (ம)



## சமாதான நீதிவானாக பதவியேற்பு

யாழ்ப்பாணம், மே 1
வடமராட்சி துன்னாலை வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த சின்னையா அருளானந்தம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாக பதவியேற்றார்.
இவர் அன்னை உள்ளம் சமூக முன்னேற்ற அமைப்பின் நிறுவுநரும், அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் உறுப்பினருமாவார். (ஐ-9)

# ஒரு ரூபாவை ஒருமாத வாடகையாக அறவிடும் ஓர் ஆலயத்தின் சமூகப்பணியே பெரிய தர்மம்

கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கையில் யாழ்ப்பாணத்தின் கண்ணமைந்த கொக்குவிலில் பல வாசகர்களை வரவேற்று வாசிப்பினை ஊக்குவிக்கின்ற ஒரு அறிவு சால் மையதாகத் திகழ்வதே கொக்குவில் மத்திய சனசமூக நிலையமாகும். 1981இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையத்தில் தினமும் ஐந்து நாளிதழ்கள் வாசகர் மேசையில் பொருத்தப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மூன்று பத்திரிகையும் கொழும்பிலிருந்து வெளிவரும் இரண்டு பத்திரிகைகளும் வாசிகசாலையை அலங்கரிக்கின்றன.
காலை 7.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை இந்த வாசிகசாலையைப் பல ஊரவர்களும் விருப்பத்தோடு பயன்படுத்துகிறார்கள்.
சராசரியாக 250 வாசகர்கள் அரசியல், ஆன்மிகம், சமூகம், வர்த்தகம் சார்ந்த செய்திகளை அலசி ஆராய்கிறார்கள். மக்கள் நிதானமாகத் தம் வாழ்வினைச் செப்பனிடுகிறார்கள். ஜனநாயக உரிமைகளை அனுபவித்துக் கொள்கிறார்கள். பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கருத்துப் பகிர்வுச் சுதந்திரம் என்பவற்றுக்கு இந்த சனசமூக நிலையம் வாசிக சாலையினூடாகக் களம் அமைத்துக் கொடுக்கப்படுகிறது.
இதன் அருகிலே புராதன புதுக்கோவில் முருகன் ஆலயமும் ஒரு பெரிய பாடசாலையும் உண்டு. ஆதலால் மாணவர்களும் அடியவர்களும் மூத்தவர்களும் முதியவர்களும், ஆசான்களும், வழிப்போக்கர்களும், பாதசாரிகளும் மாலைநேர வேளைகளில் வாசிப்பின் மூலம் பெரும்பயன் பெறுகிறார்கள்.
அறிவுத் தானமே அன்னதானத்திலும் மிகப் பெரிய தானம். தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரை கற்பிக்கின்ற ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஓர் இலட்சம் ரூபா மாதாந்தம் கொடுத்தாலும் அரசுக்கு நட்டமில்லை. அது தருமம் ஆகும்.
வாசிக சாலைகளும் சனசமூக நிலையங்களும் நூல் நிலையுங்களும் ஆற்றுகின்ற அறிவுத் தானமே எமது மண்ணுக்கு அவசியமானதாகும். இதனை கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ஆற்றுகிறது. இதனைக் கருத்திற்கொண்டும் அன்றைய கோவில் ஆலயப் பரிபாலன சபையினர் பொதுவான சேவையினைக் கருத்திற் கொண்டும் மேற்படி சனசமூக நிலையத்துக்கு உரிய வாடகையாக மாதமொன்றுக்கு ஒரு ரூபா எனத் தீர்மானிக்கப்பட்டு அறவிடப்பட்டுள்ளது. ஏறத்தாள கால் நூற்றாண்டு காலம் இச்சேவை பெறப்பட்டுள்ளது என்று அறியமுடிகிறது.
இந்த நிலையம் தொடரவேண்டும். இது ஒரு தரும காரியம் அல்லவா! இலங்கையில் இது வரலாற்றில் ஒரு ஏடாகப் பதிவுசெய்யப் படுகிறது. தர்ம காரியங்கள் எதுவாயிலும் விளம்பரமின்றி ஆரவாரமின்றி தனிப்பட்ட பிரத்தியேக அழைப்பிதழ் கௌரவமின்றி அடக்கமாகச் செய்யப்பட வேண்டியதொன்றாகும். அந்த வகையில் புதுக்கோவில் சமூகத் தொண்டில் வெற்றி பெறுகிறது.

# பாவனைக்கு உதவாத தேயிலை; இருவர் மீது வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணம், ஐந்து சந்திப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விசாரணைக்காக அழைத்துச் சென்ற இருவர் மீது பாவனைக்கு உதவாத பொருள்களை வைத்திருந்தமைக்காக சுகாதாரப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினர், பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளில் அந்தப் பகுதியில் உள்ள யாழ்ப்பாணம் மொஹைதீன் ஜீம்மாப் பள்ளிவாசலும் கடந்த ஞாயிற்றுக் கிழமை சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அங்கு பாவனைக்கு உதவாத தேயிலை வகைகள் மீட்கப்பட்டன.

அந்தப் பொருள்கள் இருந்த அறையில் தங்கியிருந்தவர்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றன. அவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று தெரிவிக்கப்பட்டதுடன், அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் அங்கிருக்கவில்லை. அதையடுத்து பள்ளிவாசல் மௌலவியும், நிர்வாகியும் சிறப்பு அதிரடிப் படையினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் மீது சுகாதாரப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இது தொடர்பான வழக்கு நாளை யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் மன்றில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பள்ளிவாசல் நிர்வாகியான சரபுல் அனாம், பள்ளிவாசல் நிர்வாகத்தைச் சில நாள்களுக்கு முன்னரே பொறுப்பேடுத்தேன் என்றும், ஐந்து ஆண்டுகளாக பள்ளிவாசலில் தங்கிருந்த நபர் செய்த செயலுக்காகத் தன் மீது வீண் பழி சுமத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

பாவனைக்குதவாத தேயிலை வகைகள் இருந்த அறையில் தங்கியிருந்த நபரை பள்ளிவாசல் நிர்வாகியான சரபுல் அனாம் சுகாதாரப் பிரிவினரிடம் நேற்று முற்படுத்தினார். எனினும் நிர்வாகியான சரபுல் அனாம் மற்றும் மௌலவி மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதால் அவர்களே நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் கூறியுள்ளனர். இந்த நிலையில் தன்மீது சுமத்தப்பட்ட வீண் பழி தொடர்பான விளக்கங்களைப் பெறதான் சட்ட உதவியை நாடியுள்ளேன் என்று சரபுல் அனாம் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியில் மாநகரசபை உறுப்பினர் என்று சொல்லி தப்பிக்க முயன்றாராம் மௌலவி என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் ஒருவர் மௌலவியாவர். மற்றையவர் பள்ளிவாசல் நிர்வாகியாவார். பள்ளிவாசல் நிர்வாகியே முன்னாள் மாநகர சபை உறுப்பினர் என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (எ-21)

## ஈஸ்ரர்...

அவர் தெரிவித்துள்ளதாவது:

தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதில் மிகச் சிறப்பான முன்னேற்றத்தைக் காணமுடிந்துள்ளது. ஆனால் இந்தக் கதை முடிந்துவிட்டது என்று நான் இன்னமும் கருதவில்லை.

இன்னமும் பல தாக்குதல்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என நாங்கள் கருதுகின்றோம். இன்னமும் தாக்குதல் நடத்தக் கூடிய போராபத்துக் காணப்படுகின்றது. ஈஸ்ரர் தினத்தன்று தாக்குதலுடன் தொடர்புபட்ட குழுவினர் இன்னமும் முற்றாகச் செயல் இழக்கவில்லை என்று நாங்கள் கருதுவதற்கான காரணங்கள் உள்ளன. என்று தெரிவித்துள்ளார். (எ)

## பயங்கரவாதத்...

கப்பட்டுள்ள ஜெனரல் சாந்த கோட்டேகொட நேற்று முற்பகல் பாதுகாப்பு அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றார். அந்த நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் பாதுகாப்புத் துறையின் மூத்த அதிகாரிகளுடன் அரச தலைவர் கலந்துரையாடினார். அந்தச் சந்திப்பின்போதே இதனைத் தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள 3 பேரைக் கொண்ட சிறப்பு விசாரணைக் குழுவின் அறிக்கை அனைவருக்கும் பகிரங்கப்படுத்தப்படும். இந்த மிலேச்சத்தனமான பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து நாட்டின் தேசிய பாதுகாப்பு விரைவில் உறுதி செய்யப்படும் என்று அரச தலைவர் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்த பின்னர் உலகின் வேறெந்த நாட்டிலும் இடம்பெறாத வகையில் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு தகவல்களைத் திரட்டவும், கைது நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நாட்டின் புலனாய்வுத் துறை உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினரால் முடிந்துள்ளது. அவர்களின் திறமையை பாராட்டுகின்றேன். அதற்கான பங்களிப்பை வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அரச தலைவர் குறிப்பிட்டார்.

பாடசாலைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பாதுகாப்பு வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும், அரச அலுவலகங்களின் செயற்பாடுகளை வழமைபோன்று மேற்கொள்வது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. நாட்டின் எந்தச் செயற்பாடுகளும் செயலிழப்பதற்கு இடமளிக்காது அவற்றை வழமைபோன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரச தலைவர் வலியுறுத்தினார் - என்றுள்ளது. (எ)

## கிளிநொச்சி...

உயிரிழந்தார்.

சதாசிவம் சங்கநிதி (வயது-83) என்ற முதியவரே உயிரிழந்துள்ளார். வீதியில் ஈருருளியில் பயணித்த முதியவர் மீது உந்துருளி மோதியது என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் படுகாயமடைந்த முதியவர் நோயாளர் காவு வண்டி மூலம் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

உந்துருளி செலுத்தி வந்தவரும் காயமடைந்து கிளிநொச்சிப் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பாக விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-214)

## தேடப்பட்ட...

தொடர்பான விசாரணைகள் குறித்து தேடப்பட்டு வந்த மற்றுமொரு பாரவூர்தி பொலனறுவையில் நேற்றுக் காலை கைப்பற்றப்பட்டுள்ளது. EPPX - 2399 என்ற இலக்கத்தகட்டுடன் இந்தப் பாரவூர்தி கைப்பற்றப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார். சந்தேகத்துக்கிடமான பாரவூர்தியுடன் 3 சந்தேக நபர்களையும் சிறப்பு அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## உரிமையை...

கடந்த மாத இறுதியில் இலங்கையில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் காரணமாக தொழிலாளர் தினப் பேரணிகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. நாட்டுக்காக வியர்வை சிந்தி உழைத்த அப்பாவி மக்கள் பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக உயிரிழந்து, காயமடைந்துள்ள சோகமானதொரு சந்தர்ப்பத்திலேயே மே தினம் எம்மை அடைந்துள்ளது. இது நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், அதன் இருப்பு என்பன பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ள முக்கிய சந்தர்ப்பம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மே தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

முன்னர் காணப்பட்ட சமூக, அரசியல், பொருளாதாரச் சிக்கல்களை வெற்றிகொண்டு, அமைதியான சூழலொன்றில் நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி அடியெடுத்து வைத்த எமது நாடு திடீர் தாக்குதல்கள் காரணமாக எதிர்கொண்ட தாக்கம் மிகப்பெரியது. நாட்டில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்தி நாம் பெற்றுக் கொண்ட அனைத்து வெற்றிகளையும் தோற்கடிப்பதே இந்தத் தாக்குதல்களின் நோக்கம். தொழிலாளர் உழைப்பின் உண்மையான அர்த்தம் சமத்துவம், சகோதரத்துவம், சுயாதீனம் ஆகிய உயர் இலக்குகளிலேயே பொதிந்துள்ளது. நாம் விவசாய நிலத்தில், தொழிற்சாலையில், நவீன தொழிநுட்பம் மிகுந்த தொழில் நிலையங்கள் போன்ற எந்த இடத்தில் பணியாற்றினாலும் இனவாதம் அல்லது மதவாதத்தை ஒதுக்கி விட்டு மனிதநேயத்துக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டவர்களாக உள்ளோம். அப்போது தான் தனிநபர் என்ற வகையிலும், ஒட்டுமொத்த சமூகம் என்ற வகையிலும் நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு எம்மால் பங்களிப்புச் செய்ய முடியும்.

சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஊடாக வேலை செய்யும் மக்கள் பலவற்றை வெற்றி கொள்ள முடியும். இதுவரை நாம் பெற்றுக்கொண்ட முன்னேற்றத்தை தீவிரவாத சக்திகள் தடுப்பதற்கு இடமளிக்காதிருக்க நாம் விழிப்புணர்வு டன் செயற்பட வேண்டியுள்ளது. சமூக, பொருளாதார, அரசியல் சவால்களை வெற்றிகொள்ள நாம் ஒற்றுமையாகவும், திடவுறுதியுடன் எழுந்து நிற்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

## சிங்கள...

றும் அவர்களின் உறவினர்களின் வீடுகளில் இருந்தும் பாதுகாப்புத் தரப்பினரால் மீட்கப்படுகின்றன என்று தெரிவித்துள்ளது மகிந்த அணி.

இது தொடர்பாக மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ தெரிவித்தாவது;

இலங்கையை இஸ்லாமிய நாடாக்குவதே ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதியகளின் நோக்கமாக இருக்கின்றது. கிறிஸ்தவ தேவாலயங்களில் மட்டுமன்றி பௌத்த விகாரைகள், இந்துக் கோயில்கள் ஆகியவற்றிலும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தி மதக் கலவரத்தை அரங்கேற்றி ஒரு பகுதியினரைக் கொலைசெய்வது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் முதலாவது திட்டம். அதன் பின்னர், சிங்கள - தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் இனக்கலவரத்தை ஏற்படுத்தி எஞ்சியோரைக் கொலைசெய்வது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் இரண்டாவது திட்டம்.

இதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட வாள்களும், கத்திகளுமே தற்போது பள்ளிவாசல்களில் இருந்தும், ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் ஆகியோரின் வீடுகளில் இருந்தும் பாதுகாப்புத் தரப்பினரால் மீட்கப்படு கின்றன. அரச தலைவரும் அரசும் கைகட்டி வேடிக்கை பார்க்காமல் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளையும், அவர்களின் உறவினர்களையும் இந்நாட்டிலிருந்து இல்லாதொழிக்க வேண்டும்.

இந்த நாட்டை இஸ்லாமிய நாடாக்கி அதில் முஸ்லிம் மக்களை மட்டும் வாழ விடும் வகையில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வகுத்த திட்டத்துக்கு முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரும் துணைபோயுள்ளார்கள். அவர்கள் யார் என்று நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். அவர்கள் அரச தலைவரினதும் தலைமை அமைச்சரினதும் செல்லப்பிள்ளைகளாக இருக்கின்றார்கள். அவர்களையும் அரசு உடன் கைதுசெய்ய வேண்டும். அவர்களுக்கு உச்சபட்ச தண்டனையை வழங்கவேண்டும்-என்றார். (எ-22)

## சஹ்ரானின்...

என்றும், அவரது தம்பியுடன் ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டவர் என்று கூறப்படுபவருமான அப்துல் கபூர் முகமது ரிஸ்வின் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, வவுணதீவு சிறப்பு அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி மாரசிங்க தலைமையிலான சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் மட்டக்களப்பு மாவட்டப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.எஸ். சமந்த தலைமையிலான புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். காத்தான்குடி, 2ஆம் பிரிவு ஏ.எச்.எம்.பௌசி மாவத்தையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் சில நாள்களுக்கு முன்னர் சஹ்ரானின் தம்பியுடன் மாத்தறை சென்று ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டார் என்று சிறப்பு அதிரடிப் படையினர் மேற்கொண்ட விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ)

## மதரசாக்களில்...

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

சுற்றுலா நுழைவிசை வில் இலங்கை வந்துள்ள இஸ்லாமிய போதகர்கள் பலரும், இஸ்லாமிய பாடசாலைகளிலும், மதரசாக்களிலும் மத போதனைகள் மற்றும் அரபு மொழியைக் கற்பித்து வருகின்றனர்.

இவற்றின் ஊடாகவே அடிப்படைவாதக் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன என்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. இப்படியான மதப் பாடசாலைகளைத் தடை செய்ய வேண்டும் என்று கோரிக்கைகள் வலுத்துவரும் நிலையில் தலைமை அமைச்சர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இவர்கள் எப்படி நுழைவிசைவு பெற்றனர்?, அவர்களுக்கான இருப்பிட வசதிகளைச் செய்து கொடுத்தது யார்? என்பன போன்ற விவரங்கள் அடங்கிய விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு, முஸ்லிம் விவகார அமைச்சின் அதிகாரிகளுக்கும் அவர் உத்தரவிட்டுள்ளார். (த)

## 2 கோடி...

என்று காங்கேசன் துறை சிறப்புக் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். இதன் பெறுமதி 2 கோடி ரூபாவுக்கும் அதிகம் என்று கூறப்படுகின்றது.

தொண்டமானாறு கெருடாவில் பகுதியில் உள்ள தோட்டக்காணி ஒன்றில் இருந்தே அபின் மீட்கப்பட்டுள்ளது. ஒன்றரைக்கிலோ நிறையுடைய அபின் பொதி செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. காங்கேசன் துறை சிறப்புக் குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே போதைப் அபின் மேலதிக விசாரணைக்காகவும், நீதிமன்ற நடவடிக்கைக்காகவும் வடமராட்சிப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (21,26,106)


# ஐந்து சந்தி பகுதியில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணம், ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். உற்பத்தி, காலாவதித் திகதிகள் அச்சிடப்படாத தேயிலை, கோப்பிகளை சட்ட விரோதமாக உற்பத்தி செய்துள்ளார் என்று அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, மட்டக்களப்பு பகுதியில் இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களை அடுத்து நாட்டில் அசாதாரன சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் பல பாகங்கிலும் சுற்றிவளைப்புகள் இடம்பெற்று சந்தேக நநபர்கள் கைது செய்யப்பட்டுவருகின்றனர். ஆயுதங்கள், வெடிபொருள்களும் மீட்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்திலும் சில இடங்கள் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் பொலிஸார் தற்காலிகக் காவலரண் ஒன்றை அமைத்து சோதனை நடவடிக்கைகயை முன்னெடுத்துள்ளனர். உதவிப் பொலிஸ் அதிகாரி சேந்தன் தலைமையிலான ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று அந்தப் பகுதியால் யாழ்ப்பாணம் வந்த பேருந்து ஒன்றை மறித்து சோதனைக்கு உட்படுத்தினர். அந்தப் பேருந்தில் இருந்தவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போது பேருந்தில் பயணித்த ஒருவரின் உடமையில் காலாவதித் திகதி பொறிப்படாத தேயிலைப் பக்கெட்கள் மீட்கப்பட்டதை தொடர்ந்து அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணைகளில் அவர் ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதையடுத்து அவருடைய வீட்டில் சோதனை நடத்தப்பட்டது. வீட்டில் உற்பத்தி, காலாவதித் திகதிகள் அற்ற கோப்பி மற்றும் தேயிலை மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். சட்டவிரோதமாக அவற்றை உற்பத்தி செய்துள்ளார் என்ற குற்றச்சாட்டில் குறித்த நபர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-21)



# கோக்லியுடன் ஒப்பிடக்கூடிய திறமை என்னிடம் இல்லை!

## பாபர் அசாம் ஒப்புதல்

இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லியுடன் ஒப்பிடக்கூடிய அளவு திறமை என்னிடம் இல்லை என்று தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரர் பாபர் அசாம்.

பாகிஸ்தான் அணியின் மூன்றாம் நிலை வீரர் அசாம். இவர் அந்த அணிக்காகத் தொடந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தார். இதனால் அவரை இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லியுடன் ஒப்பிட்டிருந்தார் பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர். இதையடுத்து சமூக வலைத் தளங்களில் அசாம், கோக்லி இருவருக்கும் இடையிலான ஒப்பீடு நாளுக்குநாள் வலுப்பெற்று வரும் நிலையில் தன்னையும் கோக்லியையும் ஒப்பிட வேண்டாம் என்றுள்ளார் அசாம்.

விராட் கோக்லி பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர். அவர் ஒருநாள் ஆட்டங்கள் மற்றும் டெஸ்டில் பல முக்கிய சாதனைகளை நிகழ்த்தி உள்ளார். ஆனால் நான் தற்போதுதான் என்னுடைய பயணத்தைத் தொடங்கி இருக்கிறேன். நான் சாதிக்க வேண்டியது நிறையவே உள்ளது. இதனால் என்னை யாரும் விராட் கோக்லியுடன் ஒப்பிட்டுப் பேச வேண்டாம் என்று அசாம் மேலும் தெரிவித்தார். (ம)

## 2,000 கோடி ரூபா கொடுத்து

# கிரீஸ்மனை ஒப்பந்தம் செய்ய விரும்புகிறதாம் பார்சிலோனா!

பிரான்ஸ் அணியின் முன்னணி வீரரான கிரீஸ்மனை, இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா கொடுத்து வாங்குவதற்கு பார்சிலோனா திட்டமிட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பிரான்ஸ் அணியின் நம்பிக்கை வீரர்களில் ஒருவரான கிரீஸ்மன் கழகத்தைப் பொறுத்தவரை அத்லெட்ரியோ மட்ரிட்டுக்காக விளையாடி வருகிறார். இந்த நிலையில் கிரீஸ்மனை வாங்குவதற்கு பார்சிலோனா விரும்புகிறது என்றும், அந்தக் கழகம் சுமார் இலங்கை மதிப்பில் 2 ஆயிரம் கோடி ரூபா வரை கொடுக்கத் தயாராக உள்ளது என்றும் பன்னாட்டு ஊடகங்களின் செய்திகளில் இருந்து அறியவருகிறது.

பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரான நெய்மர் அந்த அணியில் இருந்து விலகி, பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்குச் சென்றதிலிருந்தே பார்சிலோனா கிரீஸ்மனை ஒப்பந்தம் செய்த முயன்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



# காலிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், மே 1

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் யாழ்;ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் இன்று புதன்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார்; விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி துடுப்பாட்ட விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மதியம் 1மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)



# வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், மே 1

வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் வகிக்கின்ற 46 கழகங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்; சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக்கின் தலைவர் யுவறாஜ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உடுவில் பிரதேச செயலர் மற்றும் இலங்கை உதைப்பந்தாட்ட சங்கத்தின் உப செயலர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ.5)



# 110,000 இரசிகர்கள் அமரக்கூடிய கிரிக்கெட் மைதானம் குஜராத்தில்

உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் இந்தியாவின் குஜராத் மைதானத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

உலகிலுள்ள கிரிக்கெட் மைதானங்களில் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண் நகரில் அமைந்துள்ள மைதானமே மிகப்பெரியது. இந்த மைதானத்தில் சுமார் ஒரு லட்சம் பார்வையாளர்கள் அமரலாம்.

இந்த நிலையில் சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரசிகர்கள் அமரங்கூடிய வகையில் இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரில் புதிய மைதானமொன்று அமைக்கப்பட்டு வருகிறது. இந்த மைதானத்துக்காக இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரத்து 100 கோடி ரூபா செலவிடப்படுகிறது. (ம)

# இன்ஸ்டகிராம் ஒளிப்படத்தால் சர்ச்சையில் சிக்கிய ஜேம்ஸ்போக்னர்



ஆஸ்திரேலியாவின் சகலதுறை வீரர் ஜேம்ஸ் போக்னர் ஓரினச்சேர்க்கையாளர் என்ற செய்தி சமூக ஊடகங்களில் வெளியானது அதனை அவர் நிராகரித்துள்ளார்.

ஜேம்ஸ்போக்னர் தனது 29 பிறந்த நாள் கொண்டாட்டம் குறித்து வெளியிட்ட இன்ஸ்டகிராம் ஒளிப்படத்தை தொடர்ந்தே சமூக ஊடகங்களில் அவர் ஓரினச்சேர்க்கையாளர் என்ற தகவல் பரவியது.

தனது நண்பர் ரொப் யுப்புடன் தான் காணப்படும் ஒளிப்படத்தை வெளியிட்டிருந்த போக்னர் இவர் எனது ஆண் நண்பர் இருவரும் 5 வருடமாக ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்கின்றோம் என குறிப்பிட்டிருந்தார்.

இதனை தொடர்ந்து போக்னர் ஓரினச்சேர்க்கையாளர் அவர் தனது நண்பரை மணந்துகொள்ளப்போகின்றார் என்ற தகவல் பரவியது .

இதன் பின்னர் அதனை எனது ஆண் நண்பர் என திருத்தியுள்ள போக்னர் தனது கருத்து பிழையான அர்த்தத்தில் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

நான் ஓரினச்சேர்க்கையாளன் அல்ல. படத்தில் இருப்பவர் எனது நெருங்கிய நண்பர்.

இதேவேளை ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபையும் குறிப்பிட்ட பதிவு தவறாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது என குறிப்பிட்டது.

# 'பிளேஒவ்' சுற்றை தக்க வைத்தது சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி

12ஆவது ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற போட்டியில் ஹைதரா பாத் - பஞ்சாப் அணிகள் மோதின. இதில் ஹைதராபாத் அணி 45 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்று 'பிளேஒவ்' சுற்றை பிரகாசப்ப டுத்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பஞ்சாப் அணி முதலில் ஹைதராபாத் அணியைத் துடுப்பெ டுத்தாடுமாறு பணித்தது. ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற் றங்களில் 6 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக வோர்னர் அதிரடியாக ஆடி 2 ஆறு ஓட்டங் கள், 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 81 ஓட்டங்களையும், மனிஷ் பாண்டே 36 ஓட் டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் மொகமட் சமி, ரவிச்சந்திரன் அஸ்வின் தலா இரண்டு இலக்குகளையும், அர்ஷ்டப்டீப் சிங், அஸ்வின் தலா ஓர் இலக் கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணி 100 ஓட்டங்களை எட்டுவதற்குள் 3 இலக்கு களை இழந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கே.எல். ராகுல் ஆட்டமிழக்காமல் சிறப்பா கத் துடுப்பெடுத்தாடி 5 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 79 ஓட்டங் களைப் பெற்றார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 45 ஓட்டங்களால் தோல்வியடைந் தது.

பந்து வீச்சில் ரசிட் கான் 3 இலக்குகளையும், அகமெட் 3 இலக்குகளையும், சன்டீப் சர்மா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக ஹைதராபாத் அணியின் வீரர் டேவிட் வோர்னர் தெரிவு செய்யப்பட்டார்.








# உலகக் கிண்ணத்தை வெல்வதே இலக்கு

## முஷ்பிகுர் ரஹிம் தெரிவிப்பு

இங்கிலாந்தில் இந்த மாதம் உலகக் கிண்ண போட்டி ஆரம்பமாகின்றது. இதில் 10 அணிகள் பலப்பரீட்சை நடத்த இருக்கின்றன. இதில் பங்களாதேஷ் அணியும் ஒன்றும். பங்களாதேஷ் அணி கடந்த 2015ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா மற்றும் நியூசி லாந்தில் நடைபெற்ற உலகக் கிண ணத் தொடரில் காலிறுதி வரை முன்னேறியி ருந் தது.

அந்த அணியின் முன் னணி துடுப்பாட்ட வீரரான முஷ்பிகுர் ரஹிம் உலகக் கிண்ணப் போட்டி குறித்து தெரிவிக்கையில்;

நாங்கள் இங்கிலாந்து செல் வது, உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்பதற்கு மட்டுமல்ல. கிண்ணத்தை வெல்வதற்காகவும்தான். இதை நாங்கள் முழுமை யாக நம்புகிறோம். எது வேண்டுமென்றாலும் நடக் கலாம்- என்றார்.

## இங்கிலாந்து வீரர் அலெக்ஸ் ஹேல்ஸ் அதிரடி நீக்கம்

போதைமருந்து விவகாரத் தில் சிக்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப் பாட்ட வீரர் அலெக்ஸ் ஹேல்ஸ் உலகக் கிண்ண் அணியில் இருந்து அதிரடி யாக நீக்கப்பட்டுள்ளார்.

அலெக்ஸ் ஹேல்ஸ் உல கக் கிண்ண இங்கிலாந்து அணியில் இடம்பிடித்திருந் தார். இங்கிலாந்து விளை யாட இருக்கும் அயர் லாந்து மற்றும் இலங்கை தொடருக்கான இங்கி லாந்து அணியிலும் இடம் பிடித்திருந்தார்.

சமீபத்தில் அவர் போதை மருந்து பயன்படுத்தியது தெரியவந்தது. இதனால் அவருக்கு மூன்று வாரம் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இங்கி லாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் போர்டு அவருக் கான தடைக்காலத்தை நீட்டித்துள்ளது.

இதனால் உலகக் கிண்ண முதற்கட்ட வீரர்கள் பட்டிய லில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.



## மனைவியை கவர்ந்திழுக்க அதிரடியாக ஆடுகின்றேன்

### ரசல் ருசிகரம்

ஐ.பி.எல். தொடரில் மும்பை - கொல்கத்தா அணிகள் மோதின. இதில் அதிரடியாக விளையாடி ஆட்டநாயகன் விருது பெற்ற ரசல் நள்ளிரவில் தனது 31ஆவது பிறந்த நாளை மனைவி ஜாசிம் லோராவுடன் கொண்டாடி னார். அவரிடம் ஜாசிம் லோரா கலகலப்பாக பேட்டி கண்டார்.

அப்போது ரசல் தெரிவிக் கையில்:

இந்த வெற்றி எனக்கு பிறந்த நாள் பரிசு. ஒவ் வொரு ஆட்டத்திலும் ரசிகர் களை குதூகலப்படுத்த வேண்டும் என்றும், எனது அழகான மனை வியை கவர்ந்திழுக்க வேண்டும் என்றும் அதிர டியாக ஆட விரும்புவேன். அதனால் எனக்கு எப்பொ ழுதும் நெருக்கடி இருப்ப தாக உணர்வேன்- என் றார்.

## கோக்லிக்கு பின்னர் கே.எல். ராகுல்தான்

### கெய்ல் கருத்து

கே.எல்.ராகுல் அபரிமித மான திறமையுடைய வீரர் கோக்லிக்குப் பிறகு இந்திய அணிக்காக நீண்ட காலம் சேவை செய்பவராக ராகுல் ஒளிர்வார் என்று பஞ்சாப் அணியில் ஆடும் மேற்கிந் தியத்தீவுகள் வீரர் கிறிஸ் கெய்ல் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

கே.எல். ராகுல் நிச்சயமாக என் மனதில் எழும் ஒரு வீரராகத் திகழ்கிறார், அதா வது விராட் கோக்லி போன்று ஆடக்கூடியவர். நான் இப்படிக் கூறுகிறேன் என்பதாலும் கோலிக்கு அடுத்தது என்பதாலும் அவர் அழுத்தத்தை ஏற் றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர் தானாக இருக்க வேண் டும். தனக்கு எது சாத்தி யமோ அதனைச் செய்ய வேண்டும்.

இந்தியாவில் நிறைய திற மையான வீரர்கள் உள்ள னர். நிறைய பேருக்கு வாய்ப்புகள் கிடைப்ப தில்லை- என்றார்.

# ரென்னிஸ் தர வரிசையில் கிவித்தோவா முன்னேற்றம்

உலக ரென்னிஸ் வீராங்கனைகளின் தரவரிசைப் பட்டியலை பன்னாட்டு ரென்னிஸ் சபை நேற்று வெளியிட் டது. இதன்படி பெண்கள் ஒற்றையர் தரவரிசையில் யப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா தொடர்ந்தும் முதலி டத்தில் உள்ளார். செக் குடியரசின் கிவித்தோவா இரண்டாம் இடத்துக்கு முன்னேறினார்.

ருமேனியாவின் சிமோனா ஹாலெப் ஓர் இடம் பின்தள்ளி 3ஆவது இடத்தை பெற்றுள்ளார். ஜெர்மனி வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பர் ஓர் இடம் ஏற்றம் கண்டு 4ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். செக் குடிய ரசின் கரோலினா பிலிஸ்கோவா ஐந்தாவது இடத்தில் காணப்படு கின்றார்.



**மாபிள் பதித்தல்**

அதிக காலம் மத்திய கிழக்கு நாட்டில் மாபிள் வேலைசெய்தவரால் குறுகிய காலத்தில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவகையில் மிக அழகாக மாபிள் பதித்துத்தரப்படும்.

தொடர்பு: Babu Tiles works
077 382 4871

**பெண் வேலையாட்கள் தேவை**

**மிக்சர் கம்பனி**
ஒன்றிற்கு பணிபுரிவதற்கு பெண் வேலையாட்கள் தேவை
077 631 6273

# கம்பீர் மோசமானவர் அப்ரிடி வெளிப்படை

இந்திய அணியின் வீரர்களுடன் நட்புறவில் உள்ள போதிலும், கம்பீர் மட்டும் அதில் விதிவிலக்கு இவ்வாறு குறிப்பிட்டார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் அப்ரிடி.



ஊடகமொன்றுக்கு எழுதிய கட்டுரையிலேயே அப்ரிடி இவ்வாறு குறிப்பிட்டார். மைதானத்தில் ஆக்ரோசமான வார்த்தைகள் உதிர்வது வழமையானது. மாறி மாறி திட்டிக்கொள்வது உண்டு. ஆனால் அது மைதானத்தில் மட்டுமே. மைதானத்தை விட்டுவிட்டு வெளியே வந்தால் சராசரி வாழ்க்கைக்கு மனம் திரும்பிவிடும். எல்லா கிரிக்கெட் வீரர்களுமே அப்படித்தான். ஆனால், இந்தியாவின் கவுதம் கம்பீர் மட்டும் அதில் இருந்து வெளிவராமல் இருக்கிறார். அவருக்கு வாழ்த்துக்கள் என்று குறிப்பிட்டுள்ளார் அப்ரிடி. (ம)

**Computer Repairing Course**

Installation & Configuration, OS, Printers, Networking, Assembling Trouble Shooting & Maintenance

ISO தர சான்றிதழ்
Next Batch 02 May 2019
பதிவுகள் மட்டுபடுத்தப்பட்டுள்ளது

DTPE Campus, No 925, K.K.S Road, Thaddar theru Junction, Jaffna
SMS பதிவுகளுக்கு : <Computer Repair>, <Your Name>Send SMS 770288711

**ஆங்கிலத்திற்கு NO.1 பயிற்சி மையம்**

உங்கள் ஆங்கிலப்புலமைக்கு ஓர் முழுமையான ஆங்கிலக்கற்கை நெறி



**IELTS**
•Unique Test Tips
•Latest course Materials

**IELTS Life Skills**
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

**DIPLOMA IN ENGLISH**
**Spoken English**

Dip.in English மற்றும் Spoken English கற்கைநெறிகளுக்கான மே மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | சண்டிலிப்பாய் |
|---|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 10:00 a.m<br>Mon,Wed,Fri 3:30 p.m<br>Sat, Sun 4.00 p.m. | Tue, Thu 3.30 p.m.<br>Wed,Fri 9:30 a.m. | Tue, Thu 08.30 a.m.<br>Sat, Sun 10.30 a.m. | Mon,Wed,Fri 11:00 a.m<br>Sat, Sun 3.30 p.m.<br>Tue,Thu 9:00 a.m | Sat, Sun 10.00a.m | Mon,Wed,Fri 10.00 a.m |

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**DMI COMPUTER EDUCATION**

| DMI | No.113, கன்னாதிட்டி வீதி சயன்ஸ் ஹோல் அருகாமை | M.M.V.வீதி (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) | No.174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No.130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக) | சீரணிச்சந்தி |
|---|---|---|---|---|---|---|
| | யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | சண்டிலிப்பாய் |
| | Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 | Tel.: 021-225 5556 |

QUEST INTERNATIONAL UNIVERSITY



**Dual MBA**
Leading to Doctor of Business Administration (DBA)

Sri Lanka UGC Recognized

**MBA**
- முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை தொழில்சார் கல்வித் தகைமையா.....?
- வர்த்தக ரீதியான தந்திரோபாயங்கள் உங்கள் வாழ்க்கையை உயர்த்திடும்.
- இரட்டைத் தகைமை MBA என்றும் உங்கள் முன்னேற்றத்துக்கு உந்து சக்தி...

**MBA in**
Finance
Marketing
HR

Duration Approximately 12 to 18 Months

Why Chooce Us?
- Industrial visit to foreign country
- Flexible lecture time and mood
- Well experienced and qualified panel of lecturers

BLC CAMPUS
For more information: 0777 174 443
23/1, 4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E-mail: info@blccampus.com
Web: www.blccampus.com

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 596
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.04.30
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,409,395/-
வெற்றி இலக்கங்கள்: 48 60 62 73 J
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**ராசி அதிர்ஷ்டம்**
| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 30.04.2019 | 2507 | சிவப்பு |

கும்பம்
வெற்றி இலக்கங்கள்: 02 35 44 59
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,217,416
01.05.2019 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**நியத்த ஜய**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 766
சீட்டிழுப்பு திகதி: 30.04.2019
வெற்றி இலக்கங்கள்: 04 20 31 55 P
அடுத்த வெள்ளி கிழமைக்கான ஜக்பொட் ரூ. 25, 332, 164/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**கொடிபதி ஷனிதா**
சீட்டிழுப்பு வாரம்: 437
சீட்டிழுப்பு திகதி: 2019.04.30
வர்ணம்: இளஞ்சிவப்பு செவ்வாய்க்கிழமை
P 20 35 53 73
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 122,764,908/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 964
சீட்டிழுப்பு திகதி 2019.04.29 திங்கட்கிழமை
A 05 15 40 51
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,843,116/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**CCTV பொருத்துதல்**



வடமாகாணம் முழுவதிலும் தரமான கண்காணிப்புக் கமராக்களை நியாயமான விலையில் பொருத்திக் கொள்ளலாம். ஏற்கனவே பொருத்தப்பட்ட கமராக்கள் தொடர்பான திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்

V-CON IT PARK
077 3767 899 021 221 1818

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 1.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.